விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 தை 20 ஞாயிற்றுக்கிழமை (02.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 045

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## நிஷா தேசாயின் யாழ் சந்திப்புகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பிற்கு வருகைதந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக் காலை வருகைதந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த அவர் நல்லூர் கந்தசுவாமி கோவிலில்

24 ஆம் பக்கம் பார்க்க..

## எகிறியது பால்மாவின் விலை!

### மக்கள் மனம் அந்தரிப்பு



(கொழும்பு)

பால்மாக்களின் விலைகளை நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

உலக சந்தையில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பை அடுத்தே உள்ளூர் சந்தைகளிலும் பால்மாக்களின் விலைகளை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்பிரகாரம் 400 கிராம் பால் மாக்களின் விலை 61 ரூபாவினாலும் ஒரு கிலோ பால்மாக்களின் விலை 152 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்றுக்கூடிய விலைக் கட்டுப்பாட்டுக் குழுவே இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக அமைச்சு அறிவித்துள்ளது.

ஏற்கெனவே நாட்டின் பொருளாதார தடம் புரள்வுகள் மற்றும் வரிச் சுமைகளால் நொந்து போயிருந்த ஏழை மக்களிற்கு வர்த்தக அமைச்சின் இவ் அறிவிப்பு பெரும் அதிர்ச்சியையும் கஷ்டத்தையும் கொடுத்துள்ளது. (செ-11)

## வாகனமொன்றை விரட்டிச் சென்ற தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் மின் கம்பத்துடன் மோதி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஹயஸ் வாகனம் ஒன்றினை மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்ற தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதுண்டதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை நாரந்தனை வடக்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அளவெட்டி கிழக்கினை சேர்ந்த குணராஜா பிரசன்னா (வயது 23) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

ஹயஸ் வாகனம் ஒன்றினை வழிமறித்தபோது அவ்வாகனம் நிறுத்தப்படாது சென்றதாகவும் அதனை குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் துரத்திச் சென்ற போதே மேற்படி துரதிர்ஷ்ட விபத்து இடம் பெற்றதாக தெரிய வருகின்றது.

பொலிஸ் உத்தியோ

23 ஆம் பக்கம் பார்க்க..

## ஆணொருவரின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

இனங்காணப்படாத ஆணொருவரின் சடலம் வீதியில் அநாதரவாக கிடந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பொன்னகர் கிராம சேவையாளர் பகுதியில் உள்ள அக்கரையான் வீதிக்கு அருகில் இச்சடலம் நேற்றைய தினம் நண்பகல் வேளை

23 ஆம் பக்கம் பார்க்க..

## காணாமல் போனவர்கள் தொடர்பில்

# ஐ.நா அமர்வில் கேள்வி எழுப்பப்படும்

### உறவுகளிடம் நிஷா தேசாய் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பில் ஐ.நா அமர்வில் கேள்வி எழுப்பப்படும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் யாழ்ப்பாணத்தில் வைத்து உறுதியளித் துள்ளார்.



யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக் காலை வருகை தந்த தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்திய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவி செயலாளர் உள்ளிட்ட குழுவினர் யாழ். கிறீன் கிராஸ் ஹோட்டலில் நேற்றுமுற்பகல் 11.30 மணியளவில் வடக்கில் யுத்த காலத்தில் காணாமல்

24 ஆம் பக்கம் பார்க்க..

## தெல்லிப்பளையில் வெள்ளை நாகம்

யாழ். தெல்லிப்பளை கிழக்கு சித்தியம்புளியடியிலுள்ள வீடொன்றில் இருந்து வெள்ளை நாகபாம்பு ஒன்று [illegible]டன் மீட்கப்பட்டது.

குறித்த வீட்டிலிருந்து மீட்கப்பட்ட வெள்ளை நாகபாம்பு பின்னர் ஏழாலை

23 ஆம் பக்கம் பார்க்க..

## உள்ளக விசாரணையில் உண்மைத்தன்மை இல்லை

### சர்வதேச விசாரணையையே நம்புகிறோம் - யாழ் ஆயர்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் நம்பகமான விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் உள்ளக விசாரணை நடத்தப்படுமாக இருந்தால் அது இராணுவம் நடத்தும் விசாரணையாகவே அமையும் என்பதனால் தான் சர்வதேச விசாரணையை கோருவதாகவும் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம்

24 ஆம் பக்கம் பார்க்க..

### சர்ச்சைக்குரிய பிரேரணையால்

## வட மாகாண சபையை கலைக்கும் எண்ணமில்லை

– அரசு

(கொழும்பு)

வடக்கு மாகாண சபை சர்ச்சைக்குரிய பிரேரணை ஒன்றை நிறைவேற்றியுள்ள போதிலும் மாகாண சபையை கலைக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இதற்கு முன்னரும் சவால்களை எதிர் நோக்கியது. அதேபோல் வடக்கு மாகாண சபையில் இருந்து வரும் சவால்களையும் அரசாங்கம் எதிர்கொள்ளும்.

வடக்கு மாகாண

24 ஆம் பக்கம் பார்க்க..

## மனித உரிமைப் பேரவையில் இலங்கையும் படம் காட்டும்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை வீடியோ ஒன்றை சமர்ப்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியாவின் சனல 4 ஊடகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கையின் போர்க் குற்றக் காணொளி ஆவணப் படத்திற்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் வீடியோ ஒன்றை வெளியிட உள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இந்த வீடியோ வெளியிடப்பட உள்ளது.

இந்த வீடியோ 20 நிமிட காட்சிகளைக் கொண்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது கடத்தப்பட்ட, காணாமல போனவர்களின் பெற்றோர் மற்றும் குடும்ப

24 ஆம் பக்கம் பார்க்க..

அமெ. தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் - டெசோ
செய்திகள் பக்கம் 09

எப்படியிருந்தம் இப்படி ஆயிற்றே!
விளையாட்டு பக்கம் 22



இலங்கையை கட்டுப்படுத்த முயற்சி
செய்திகள் பக்கம் 13

ஜெனிவா தீர்மானத்துக்கு தோஷ பரிகாரம் செய்திருக்கலாம்
ஆசிரியர் தலையங்கம் பக்கம் 21

இலங்கையின் கோரிக்கைக்கு கைவிரித்தது இந்தியா
செய்திகள் பக்கம் 18



பக்கம் 07

## ஜே.வி.பிக்கு புதிய தலைவர்?

(யாழ்ப்பாணம்)

மக்கள் விடுதலை முன்னணியின் மாநாடு இன்று கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளதுடன் அந்த கட்சியின் புதிய தலைவர் தெரிவு செய்யப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜே.வி.பியின் தற்போதைய தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தலைவர் பதவியில் இருந்து விலக உள்ளார். புதிய தலைவராக ரில்வின் சில்வா அல்லது அனுர குமார திஸாநாயக்க தெரிவு செய்யப்படலாம் என ஜே.வி. பியின் முக்கியஸ்

24 ஆம் பக்கம் பார்க்க..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த அழைத்தால் மறுக்க முடியாது!

## சென்றுதான் ஆகவேண்டும் – யாழ் ஆயர்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அழைப்பு விடுத்தால் சென்றுதான் ஆகவேண்டும்; இல்லையென்றால் பிடித்துக்கொண்டு சென்றுவிடுவார்கள் என யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

தெற்கு மற்றும் ஆசிய பிராந்திய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகையினை அவரது இல்லத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பினையடுத்து ஊடகவியலாளர்களுக்கு ஆயர் கருத்துக் கூறினார்.

இதனையடுத்து ஊடகவியலாளர் ஒருவரினால் வடக்கு – கிழக்கு ஆயர்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது இந்தச் சந்திப்பு தொடர்பில் அழைப்பு விடப்பட்டுள்ளதா எனக் கேள்வி கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; ஜனாதிபதியினால் இதுவரைக்கும் எந்த விதமான அழைப்பும் விடுக்கப்படவில்லை.

அழைப்பு விடுத்தால் சென்றுதான் ஆக வேண்டும். இல்லையென்றால் பிடித்துக் கொண்டு சென்றுவிடுவார்கள் என்று சிரித்தபடியே ஆயர் கூறினார்.

இதேவேளை மன்னார் ஆயர் மற்றும் யாழ்.ஆயர் இருவரையும் கைது செய்ய வேண்டும் என்று தென்னிலங்கையில் மதவாத அமைப்புக்கள் கோரிக்கை விடுத்து வருவது தொடர்பாக கேட்டபோது, நாங்கள் பிழையாக சொல்லியிருந்தால் எங்களைப் பிடித்துக் கொண்டு சென்று வைத்திருக்கட்டும்.

எங்களைக் கைது செய்து வைக்கட்டும் நாங்களும் போய் ஆறுதலாகயிருப்போம் என்றார். (செ-6)

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி அத்தியடியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0779856359
0779590692

(சி-6404)

# இல்ல மெய்வல்லுனர் போட்டி

யா/வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் க.சிறீஸ்குமார் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரன் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டிக் கோட்டக்கல்வி அதிகாரி க.பொன்னையா, யா/வல்வெட்டி இ.த.க பாடசாலை முன்னாள் அதிபர் க.தருமகுலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக பிரபல தொழிலதிபர் ச.இரட்ணகோபால் கலந்துகொள்வர்.(அ-2)

**AHAVOLI**
**Institute for Higher Studies offers the followings courses**

1. **Diploma Course in Peace Building & Community Development Practice**
   This is a one year, week -end (Saturday & Sunday) Course that consists of 240 hours. The applicants should have the following prerequisites to apply for this course:
   1.Knowledge of English as to read, write and speak.
   2.A Pass in Advanced Level
   3.Interested in social activities.
   N.B. The Diploma Certificate would be given by the National University of Ireland, Galway.

**Certificates Courses**

2. **French Language**
   The classes will be conducted on Tuesdays and Thursdays for six months from 3.30 to 5.30 PM
3. **English Language**
   **The classes will be conducted on Mondays , Wednesdays and Fri days for six months from 3.00 to 5.00 PM**

The Applicants will have to buy special form from our office and submit it before the 15th Feb. 2014.

**These lectures are conducted by professionals**

(5502)

For further details please contact:
**" AHAVOLI "**
**Institute for Higher Studies**
**Affiliated to National University, Galway,**
**St. Patrick's Road, Jaffna.**
**Contact No. 021 222 2856**

**" 100% சித்தியினை பெற்றுத் தந்து Beacon இன் தரத்தை உறுதி செய்த மாணவர்களை "**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்...!**

எமது நிறுவனத்தில் B.A (பேராதனை) கற்ற மாணவர்கள் அனைவருமே சித்தியடைந்துள்ளார்கள்.




மேற்படி மாணவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்ச்சி பெற்றிட வாழ்த்துகின்றோம்.

பட்டப்படிப்புகள் பிரிவு
**BEACON**
[illegible]

(C-6399)

**SOLAR**

solar panel with battery and light. Cost effective package for the studying child ren without electricity access. (10 W panel, 7A UPS baterry, charge contr oller, 9W LED bulb) Rs 8500.00

மின்சார வசதியில்லாத பிரதேசங்களில் வாழும் கல்வி கற்கும் மாணவர்களிற்கான தீர்வு. சூரிய மின்கலத்துடன் மின்குமிழ், மின் கலம் மற்றும் தேவையான உதிரிகளுடன் ரூ.8500/=

தொடர்புகளிற்கு:0779688330

(சி-5500)

**உங்கள் கவலைகளை மனம் விட்டுப் பேச நம்பிக்கையான ஒரு நண்பர் தேவையா?**

**மு.ப. 9.00-பி.ப. 1.00 வரை அழையுங்கள்**
**021 222 8117**

கைகொடுக்கும் நண்பர்கள்
(இரகசியம் பேணப்படும்)

(சி-6359)

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(சி-6397)

**INNOVAGE, INTERNATIONAL**

**Permanent Vacancies**

✦140 நாடுகளில் பரவியுள்ள எங்களுடைய நிறுவன வலையமைப் பின் முகாமைத்துவப் பிரிவுகளுக்கு பயிற்சியளித்து சேர்த்துக் கொள்ளப்படுவர்.

✦நான்கு பதவி வெற்றிடங்கள், பயிற்சியின் போது 15000/=-க்கு கூடிய வருமானம். தூர இடத்தில் இருந்து வருவோருக்கு தங்குமிட வசதி இலவசம்.

(5505)

குறிப்பு:- ● பயிற்சிக்கு காலம் 16-24 கிழமைகள்
● நான்கு பதவி வெற்றிடங்கள்.

தொடர்பு:-0776219536,0775127011

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**



உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 06.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை பெற்று கொள்ளலாம்.

(5503)

இப்போது கோழிப் பாகங்களும் (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.



**New medimix**
**ஆயுர் வேத பல்மருந்து**

சித்த ஆயுர் வேத மனோதத்துவ வைத்தியர் P.ஆறுமுகம் அவர்களால் சித்தர்கள் கூறிய வைத்திய சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்ட அபூர்வமான *new medimix* ஆயுர்வேத பல் மருந்து

இப்பல்மருந்தானது பல் முரசு கரைதல், பல்லில் இரத்தமும் சலமும் வருதல், பற்கூச்சம், பல் ஆட்டம் காணல், வாய் துர்நாற்றம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட **பயோ ரியா** என்ற பல் நோயை முற்றாக சுகமாக்கக்கூடியது.

இப்பல் மருந்தானது தற்போது யாழ்.மாவட்டத்தில் பலராலும் பாவிக்கப்பட்டு பாராட்டை பெற்றுள்ளது.

*பாவிக்கும் முறை:*
சிறிதளவு பல் மருந்தை எடுத்து நன்றாக பல் முரசுக்கு அழுத்தி தேய்க்கவும். காலை, மாலை இருவேளை தேய்த்து 10 நிமிடங்கள்வரை வைத்திருந்து பின்னர் வாயைக் கழுவலாம். பல் ஆட்டம் கண்ட முதியோர்கள்கூட தொடர்ந்து பாவிப்பதால் அந்தப் பற்கள் உறுதி அடைந்ததற்கான ஆதாரங்கள் யாழ்ப்பாணத்தில் உண்டு.

தற்போது யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கடைகளிலும் இதனைப் பெற்றுக்கொள்ளலாம்
ஏகவிநியோகஸ்தர்:

(C-6398)

**ஓமேகா மல்டி இன்டஸ்ரீஸ்**
(Omega Multi Product Industries)
பாடசாலை வீதி, அளவெட்டி தெற்கு, அளவெட்டி.
தொடர்புகளுக்கு:- 0213211735
0774631224 0774850934

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமக்களுக்கு துரோகம் செய்யும் வஞ்சகம் இனியும் தொடரக்கூடாது

## வைகோ தெரிவிப்பு

தமிழீழம் என்பது தான் நமது இலக்கு இனியும் ஈழத்து மக்களுக்குத் துரோகம் செய்யும் வஞ்சகம் தொடரக்கூடாது. நாங்கள் தொடர விடமாட்டோம் தமிழனுக்காகப் புது தேசம் மலரத் துடிக்கிறேன்.

அந்த நாள் நெருங்கி வருகிறது மக்களின் மனசாட்சி விழித்துக் கொள்ள ஆரம்பித் துள்ளது.

எனவே இலங்கை மீது சுதந்திர மான விசாரணை நடத்தப்பட வேண்டும் என ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையில் தங்கசாலை மணிக்கூண்டு அருகில் நடைபெற்ற முத்துக் குமாரின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆங்கிலேயர் பெயரில் இருக்கும் ஹாடோஸ் சாலையின் பெயரை மாற்றி, ஈழத் தமிழர்களின் உயிரைக் காக்கத் தன்னுயிர் தந்த வீரத் தமிழ்மகன் முத்துக்குமாரின் பெயரை சூட்ட வேண்டும். வீரத் தமிழ்மகன் முத்துக்குமாரின் நினைவாக, சென்னையில் நினைவுத்தூண் எழுப்ப வேண்டும்.

தமிழக அரசு மொழிப் போர் ஈகையர்களைப் போற்றுவது போன்று முத்துக் குமார் உள்ளிட்ட தமிழ் இன ஈகையர்களையும் போற்ற வேண்டும்.

ஈழத் தமிழர்களைக் காக்கப் போராடிய அனை த்து இயக்கத் தோழர்கள் மீதான வழக் குகளைத் திரும்பப்பெற வேண்டும்

டெல்லி உச்ச நீதிமன்றத்தில் மூன்று பேர் தூக்குத் தண்டனை குறித்த வழக்கு விசாரணைக்கு வந்துள்ளது.

அவர்கள் கழுத்தில் ஊசலாடும் தூக்குக் கயிற்றை அறுக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. காங்கிரஸ் இனி ஆட்சிக்கு வரப்போவது இல்லை.

தமிழீழம் என்பதுதான் நம் இலக்கு. இனியும் ஈழத்து மக்களுக்குத் துரோகம் செய்யும் வஞ்சகம் தொடரக் கூடாது. நாங்கள் தொடர விட மாட்டோம்.

தமிழனுக்காகப் புது தேசம் மலரத் துடிக்கிறேன். அந்த நாள் நெருங்கி வருகிறது. மக்களின் மனசாட்சி விழித்துக் கொள்ள ஆரம்பித்துள்ளது.

எனவே இலங்கை மீது சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

**நிறைவாகும் வரை மறைவாக இரு** என்று ஒரு கவிஞர் எழுதினார். அதுபோல எம் தலைவர் இருக்கிறார். என் வாழ்க்கையில் சுதந்திரத் தமிழ் மண்ணில் அவரைப் பார்ப்பேன். அப்போது முத்துக்குமார் விண்ணில் இருந்து மலர் தூவுவார் என்றார். (அ-2)

## புகைத்தலினால் தினமும் 60 பேர் உயிரிழக்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

புகைத்தலினால் தினமும் 60 பேர் உயிரிழக்கின்றனர். இத்தொகை வருடத்திற்கு 20 ஆயிரமாக அதிகரிக்கின்றது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் கடந்த 2013 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் புகைத்தோரின் எண்ணிக்கை 9 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

. இலங்கையில் நாடு தழுவிய ரீதியில் ஒரு நாளைக்கு ஆயிரம் பேரளவில் பல்வேறு நோய்களினால் உயிரிழக்கின்றனர். அவற்றில் புகைத்தலினால் இறப்போரின் எண்ணிக்கை 60 ஆகும்.

புகைத்தலானது உடம்புக்கு கேடு விளைவிக்கும் ஒரு காரணி என்ற காரண த்தினால் அதனை முழுமையாக நிறுத்துவதே சிறந்தது என சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ-2)

## நிறுத்தல் உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும்

(யாழ்ப்பாணம்)

வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு உப அலுவலகங்களுக்கு உட்பட்ட வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்படும் நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு வேலணை உப அலு வலகத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்திலிருந்து அதிகாரிகள் வருகை தந்து முத்திரை இடவு ள்ளதாக வேலணை பிரதேச சபை உப அலு வலகப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

வர்த்தகர்கள் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொண்டு தங்கள் கருவிகளுக்கு முத்திரையை பொறித்துக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

## வாரம் ஒரு தகவல்

### மூளை உபயோகம்

"நான் ஒரு விடயம் சொல்லுவேன் அது உண்மையா இல்லையா என்பதை நீங்கள் தான் சொல்ல முடியும்."

"சொல்லுங்கள்"

"நமது மூளையை நாம் முழுமையாக உபயோகப்படுத்துவதில்லை என்கிறேன்"

"உண்மை தான்... ஒரு`சராசரி மனிதன் தனது மூளையில் ஒரு சிறிய பகுதியைத் தான் உபயோகப்படுத்துகிறான். இன்னும் உபயோகிக்க வேண்டிய பகுதி நிறைய இருக்கிறது."

"பார்த்தீர்களா... அப்படி இருக்கும் போது அது ஞாபகமில்லை இது ஞாபகமில்லை என்று வேறு சொல்லிக்கொண்டு இருக்கிறோம்."

"ஒரு மனிதன் தனது மூளையில் 90 ஆயிரம் கோடி வார்த்தைகளை பதிந்து வைத்துக்கொள்ள முடியும்."

"அப்படியா..."

நாம் படிப்பது மனதில் பதிய வேண்டுமானால் நாம் அதை படித்த பின்னரும் மனதில் நிறுத்தி 10 நிமிடமாவது அசை போட வேண்டும்.

"காலை நேரத்தில் படிப்பது நல்லது அல்லவா?"

"மூளையின் செயலாற்றும் திறன் ஒவ்வொரு மணிக்கும் மாறுபடுகிறது. காலையில் சுறுசுறுப்பு, மதியத்தில் மந்தம், உடம்பு சோர்ந்து போகும் போது மூளையும் சோர்ந்து விடுகிறது. அவ்வப்போது ஓய்வு கொடுத்து அதை உபயோகப்படுத்த வேண்டும்."

"இது ஒரு மனநோய் மருத்துவமனை தானே?"

"ஆமாம்"

"உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி டாக்டர். உங்களிடம் இவ்வளவு தூரத்திற்கு கேள்வி கேட்டதனால் என்னை மனநோயாளி என்று நீங்கள் தப்பாக புரிந்து கொள்ளக் கூடாது."

"இவ்வளவு தூரத்திற்கு பதில் சொன்னதால் நீங்களும் என்னை தப்பாக புரிந்து கொள்ளக்கூடாது... நான் டாக்டர் இல்லை!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

02.02.2014

(தை 20, ஞாயிற்றுக்கிழமை )

சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு

திருதியை முன்னிரவு 10.10 மணிவரை

சதயம் பிற்பகல் 12.25 மணிவரை

இராகுகாலம் 5.06-6.36 மணிவரை

சுபநேரம் 9.36-11.06 மணிவரை

**மேடம்** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் ஏற்படும்.

**இடபம்** சொல்லை செயலாக்கிகாட்ட முற்படுவீர்கள், சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**மிதுனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், வேலைச்சுமை குறையும், பூர்வீகச் சொத்துக்களில் இருந்த தடைகள் அகலும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவ செலவுகள் கூடும், போஜனசுகமுண்டு.

**சிங்கம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்,மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், நண்பர்கள் சந்திப்புண்டு, தொலைபேசிவழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி** இனத்தார் பகைமாறி இன்பங்கள் கூடும் நாள், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள முற்படுவீர்கள், தேக நலன்சீராகும், முயற்சிகள் எளிதில் கைகூடும்

**துலாம்** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள் , பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** நண்பர்கள் உதவி செய்ய முன்வரலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபசெலவுகள் கூடும், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பால் உற்சாகம் அடைவீர்கள், ஆரம்பத்தில் அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல்கள் முடிவில் ஆதாயத்தை கொடுக்கும், அந்நியர் சந்திப்புண்டு.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும், புதிய முயற்சியில் ஈடுபாடு காட்டுவீர்கள், விரயங்கள் கூடும், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், போசன சுகமுண்டு, ஆழ்ந்த சிந்தையுண்டு.

**மீனம்** ஆனந்த வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம், வருமானம் திருப்தி தரும், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம்.

வளவன்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 80 |
| தக்காளி | 40 | 30 | 50 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 40 | 30 |
| கோவா | 40 | 50 | 40 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 50 | 80 |
| வாழைக்காய் | 25 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 100 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 70 |
| பாகற்காய் | 140 | 130 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 40 |
| பயற்றங்காய் | 160 | 100 | 100 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 50 | 70 | 60 |
| கறிமிளகாய் | 120 | 110 | 120 |
| முருங்கைக்காய் | 40 | -- | 400 |
| போஞ்சி | 60 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 90 | 40 | 70 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 35-40 |
| இராசவள்ளி | 60 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண கோட்டையை திருத்தியமைக்கத் திட்டம்

யாழ்ப்பாணத்திலுள்ள டச்சு கோட்டையை மீளவும் திருத்தியமைப்பதற்கு கலாசார விவகார மற்றும் தேசிய பாரம்பரிய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இத் திட்டத்தினை எதிர்வரும் 4 வருட காலப் பகுதியினுள் பூர்த்தி செய்ய முடியும் என்று அவ் அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

டச்சு அரசினால் வழங்கப்பட்ட நிதியுதவி





யுடன் யாழ்ப்பாணக் கோட்டையை மறுசீரமைக்கும் பணிகளின் முதலாம் கட்டம் கடந்த 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், 2012 ஆம் ஆண்டு நிறைவடைந்தது.

மீள புனரமைப்பது தொடர்பாக அமைச்சர் ஜெகத் பாலசூரியவினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை அமைச்சரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

20 கோடி ரூபா நிதியுடன் இந்தத் திட்டத்தை எதிர்வரும் 4 வருட காலத்தினுள் நிறைவு செய்ய முடியும். யாழ்ப்பாணத்தில் உள்ள டச்சு கோட்டை கடந்த 1690 ஆம் ஆண்டு டச்சு அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டது.

இலங்கையில் உள்ள கோட்டைகளில் யாழ்ப்பாண கோட்டை இரண்டாவது பெரிய கோட்டையாகும். (அ-2)




## ஆமை இறைச்சி விற்பனை; நபருக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

வல்வெட்டித்துறை சந்தையில் ஆமை இறைச்சி விற்பனை செய்த குற்றச்சாட்டில் அப்பகுதியைச்சேர்ந்த நபரொருவரை எதிர் வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறைநீதிமன்றம் உத்தர விட்டுள்ளது

சம்பவதினம் குறித்த நபர் வல்வெட்டித் துறை சந்தையில் ஆமை இறைச்சியை விற்பனை செய்து கொண்டிருந்த போது வல்வெட்டித் துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் குறித்த நபரை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது இவரை எதிர் வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தர விட்டுள்ளார். (அ-9-60)

# வடமராட்சி கிழக்கில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் கிடைக்கவில்லை

## பாதிக்கப்பட்டோர் விசனம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மின்விநியோகம் கிடைக்கவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப் பகுதியிலுள்ள பல கிராமங்களிற்கு மின்சாரம் வழங்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ளது.

ஆயினும் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு போன்ற கிராமங்களிற்கு மின்விநியோகம் வழங்கி ஒரு மாதம் கடந்துள்ளது.

இவ்விரு கிராமங்களிலும் 20 வீடுகளுக்கு மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய வீடுகளிற்கு ஒரு மாதத்தினுள் மின்சாரம் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டும் இதுவரை வழங்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு இவர்களில் 50 இற்கும் மேற்பட்ட வீடுகள் மின்னிணைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்து மின்சார சபையினரிடம் விண்ணப்பப்படிவங்களையும் வழங்கியுள்ளனர்.

இதேபோன்று தான் ஏனைய கிராமங்களிலுள்ளவர்களும் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து விட்டு மின்சாரத்திற்காக காத்துக் கிடக்கின்றனர்.

குறிப்பாக உடுத்துறைப் பகுதியில் மின்சாரம் வழங்கப்பட்டு ஒரு வருடம் கடந்து விட்டது.

இந்நிலையில் அங்கும் 80 இற்கும் மேற்பட்ட வீடு களுக்கு மின்விநியோகம் வழங்கப்படவில்லை.

மின்விநியோகம் கிடைக்காத மக்கள் பருத்தித்துறை மின்சார சபையினரிடம் முறைப்பாடு செய்தபோது அப் பகுதியிலுள்ள வீதிகள் சீரின்மையே காரணம் என கூறப்பட்டது.

இதனையடுத்து பருத்தித்துறை பிரதேச சபையினரின் ஒத்துழைப்புடன் மருதங்கேணியிலுள்ள உப பிரதேச சபையின் ஊழியர்களும் கிராம மக்களும் சேர்ந்து களிமண் வீதியை புனரமைத்தனர்.

இதன்பின்னர் மின்சார சபையினர் மின்கம்பங்களை நாட்டி மின்விநியோகத்தை செய்துள்ள போதிலும் அக் கிராமத்தில் மின்சாரம் கிடைக்காத மக்களுக்கு இதுவரை மின்விநியோகம் வழங்கப்படவில்லை.

இவ்வாறாக மின்விநியோகம் வழங்குவதில் தாம் தொடர்ந்தும் ஓரங்கட்டப்படுவதாக வடமராட்சி கிழக்கு மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே கிராம மக்களின் நிலையை கவனத்திலெடுத்து பிரதேச மக்களிடையே பாரபட்சம் காட்டாமல் மின்சாரத்தை பெற்றுத் தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-64)

# சட்டவிரோதமான முறையில் பனைமரங்கள் தறிப்பு

(கரணவாய்)

கரவெட்டியை அண்டிய பிரதேசங்களில் சட்ட விரோதமான முறையில் பனைமரங்கள் தறிக்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கரவெட்டி பகுதிக்கு அண்மையிலுள்ள தில்லையம்பலம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையிலுள்ள வயல் வெளிகளிலே சட்டவிரோதமான பனை மரங்கள் தறிக்கப்பட்டு வருகின்றன.

இச் செயற்பாடு தொடர்ச்சியாக 3 மாதங்கள் இடம்பெற்று வருவதாகவும் இரவு வேளைகளிலும் ஆட்கள் நடமாட்டம் இல்லாத வேளைகளிலுமே நடைபெறுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறாக பனைமரங்கள் கடந்த வருடத்தின் நடுப்பகுதியிலும் தறிக்கப்பட்டு வந்தது. அது [illegible] நிலையில் தற்போது மீண்டும் ஆரம்பித்துள்ளது.

எனவே உரியவர்கள் இவ்விடயத்தை கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-60)



அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நிஷா தேசாய் தலைமையிலான குழுவினர் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியுடன் வடமாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடிய போது.... (படம்:- என்.குமார்)

# வலிகாமம் கல்வி வலயத்திற்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் நியமனம்

(மானிப்பாய்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட உடுவில் கல்விக் கோட்டத்துக்கு புதிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ச.சந்திரராஜா அறிவித்துள்ளார்.

உடுவில் கல்விக் கோட்டத்துக்கான பணிப்பாளர் வெற்றிடம் சுமார் 2 வருடங்களாக நிலவி வந்துள்ளது.

இப் பதவியை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்ட போதும் தகுதியானவர்கள் கிடைக்காமையினாலே சுமார் 2 வருடங்களாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்படவில்லையென கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஆயினும் கடந்த 27.01.2014 இல் இருந்து அமுலுக்கு வரும் வகையில் சி.தர்மலிங்கம் கோட்டக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் வடமாகாண கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றியுள்ளார்.

உடுவில் கோட்டம் சுமார் 2 வருடங்களாக பதில் கோட்டக்கல்விப் பணிப்பாளருடனேயே இயங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-23)

# மயானங்களை புனரமைக்க தீர்மானம் நிறைவேற்றம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டத்தின் போது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த புதன்கிழமை தவிசாளர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்றது.

இதில் 2013/2014 ஆம் ஆண்டிற்கான மயான திருத்தங்களுக்கான முன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு உடுப்பிட்டி நாவலடி [illegible]த்திற்கு அருகாமையிலுள்ள கிறிஸ்தவ மயானம், கப்பூது இந்து மயானம் என்பன புனரமைக்கப்பட்டுள்ளன.

இவற்றிற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதி இந்தப் பகுதியிலுள்ள தெரிவுக்குழுக்களிடம் கையளிக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்தோடு அன்றைய மாதாந்தக் கூட்டத்தின் இவ்வாண்டிற்கான அபிவிருத்தி குழு, நிதிக் குழு, சுகாதாரக்குழு, தொழில்சார் குழு என்ற குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு இவர்கள் அபிவிருத்தி வேலைகளுக்கு பொறுப்பாக இருப்பார்கள் என சபையினரால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-9-60)

# சித்திரத் தையல் பயிற்சி நெறி

சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப்பிரிவை சேர்ந்த பெண் தலைமைத்துவ மற்றும் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்ற பெண்கள் தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் செயற்பாடாக சித்திரத்தையல் (எம்பிறோயிடறிங்) பயிற்சி நெறியும் பயிற்சியை சிறந்த முறையில் பூர்த்தி செய்தவர்களைக்கொண்டு தையல் நிலையம் ஒன்றை உருவாக்குகின்ற செயற்பாட்டை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டுள்ளதாக யாழ்ப்பாணம் கைத்தொழில் அபிவிருத்திச் சபைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். இப்பயிற்சிநெறியைசங்கானை பிரதேசத்தில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது அத்துடன் தையல் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் மாவட்டக்காரியாலயம், கைத்தொழில் அபிவிருத்திச்சபை, தேசிய வீடமைப்பு அதிகார சபை கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தமது பதிவுகளை மேற் கொள்ளமுடியும் என குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அகழும் பிரதேசங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மணல் அகழும் பிரதேசங்களை அடையாளப்படுத்துவது தொடர்பில் புவிச்சரிதவியல் திணைக்களம் பரிசீலனை மேற்கொண்டுள்ள நிலையில், யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர்களுக்கு சாதகமான பதில் கிடைக்குமென யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பாரவூர்திச் சங்கத்தில் 700 இற்கும் மேற்பட்ட பாரவூர்தி உரிமையாளர்கள் உள்ளதுடன், இவர்கள் தொழில் வாய்ப்பின்றி உள்ள விடயத்தை பாரவூர்திச் சங்கத் தலைவர் ச.ஜெயக்குமார் கடந்த டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இதன்போது, மணல் ஏற்றிப் பறிப்பதற்கு அறவிடப்படும் வழமையான கட்டணத்தை விட 3 ஆயிரம் ரூபாவுக்கு குறைவான கட்டணத்தில் சேவை வழங்கத்தயார் எனவும் இவர் தெரிவித்திருந்தார்.

இவ்விடயத்தை புவிச்சரிதவியல் திணைக்களத்தின் கவனத்திற்கு தான் கொண்டு வந்ததாகவும் அவர்கள் மணல் அகழும் இடங்களை அடையாளப்படுத்தியும் யாழ். மாவட்ட பாரவூர்தியாளர் சங்கத்தின் பிரச்சினைகள் பற்றியும் பரிசீலனைகளை மேற்கொண்டுள்ள தாகவும் இதனால், சாதகமான பதில் கிடைக்குமென்று எதிர் பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மணல் அகழ அடையாளப்படுத்த ப்பட்ட பிரதேசங்களில் மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டால், அப்பகுதியின் அபிவிருத்தக்கு பாரவூர்தி உரிமையாளர்கள் பங்களிக்க வேண்டும் என உரிமையாளர்களிடம் கோரிய போது பாரவூர்தி உரிமையாளர்கள் அதற்கு இணக்கம் தெரிவித்ததாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# மீனவர்கள் தாக்கப்படுவதை கண்டித்து போராட்டம்

(சென்னை)

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை கண்டித்து மீனவர்களுக்கு ஆதரவாக கடல்தாமரை என்ற போராட்டம் இராமேஸ்வரத்தில் இடம்பெற்றுள்ளது.

தமிழக மீனவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக இராமேஸ்வரம் தீவுபாம்பன் பகுதியில் பா.ஜ.கவின் மீனவர் அணி சார்பில் கடல்தாமரைப் போராட்டம் நேற்று முன்தினம் மாநில மீனவர் பிரிவுத்தலைவர் எஸ்.சதீஷ்குமார் தலைமையில் நடைபெற்றுள்ளது.

போராட்டத்தினை ஆரம்பித்து வைத்து கட்சியின் மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் மக்களவை எதிர்க்கட்சித் தலைவ்ர் சுஷ்மா சுவராஜ் ஆகியோர் உரையாற்றியிருந்தனர்.

அப்போது சுஷ்மா சுவராஜ் தனது உரையில்,

குஜராத் மீனவர்களை பாகிஸ்தான் இராணுவமும், தமிழக மீனவர்களை இலங்கை இராணுவமும் எல்லை தாண்டியதாக அடிக்கடி கைது செய்து வருகிறது. தமிழகத்தில் மட்டும் இது வரை 600 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஏராளமானோர் விதவைகளாகி வறுமை நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர்.

மீனவர்கள் பிரச்சனை குறித்து பலமுறை மக்களவையில் பேசியிருக்கிறேன்.பல போராட்டங்களை நடத்தியிருக்கிறேன்.

ஆனால் எந்த பயனும் இல்லை. மீனவப் பெண்கள் பலரும் விதவையாகி விட்டார்களே என்றும் அவர்களது நிலைமை குறித்தும் நீங்கள் ஒரு பெண்தானே, ஏன் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான முடிவை எடுக்க மறுக்கிறீர்கள் என்று கேட்ட போதும் அவர் அதை கண்டு கொள்ளவே இல்லை. இரு தினங்களுக்கு முன்பு கூட இராமேஸ்வரத்தை சேர்ந்த 38 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்திருக்கிறது. இதிலிருந்து ஒன்று மட்டும் தெளிவாகிறது. மீனவர்கள் பிரச்சினையில் காங்கிரஸ் அரசு ஊமையாகவும், செவிடாகவுமுள்ளது என்பது மட்டும் புரிகிறது. மீனவர்கள் பிரச்சினையை தீர்க்க ஒரே வழி பா.ஜ. க.ஆட்சிக்கு வரவேண்டும் என்றார். (அ-2)


## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் தேர்ச்சி மிக்கவாராய் இருப்பின் தெஹிவளை/ கண்டி/ கம்பஹா/ யாழ்/ மாங்குளம்/கொழும்பு பிரதேசங்களில் மேசன்/ தச்சு/பெயின்டர்/(1200/=, 1500/=) கையுதவியாளர் (900/=, 1100/=) தேவை

(சி-6394) தொடர்பு:-0775561883

## வேலைவாய்ப்பு

கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் அதி உயர்ந்த சம்பளத்துடன் நிரந்தர வேலைவாய்ப்பு உற்பத்தி/லேபல்/பொதியிடல்/களஞ்சிய பிரிவு/Loading/ Unloading/ Delivery/ 17-50 வயது தமிழ்/முஸ்லிம் ஆண்-பெண் தேவை. ஜேம்/கோடியல்/பிஸ்கட்/டயர்/ PVC/சொசேஜஸ்/ நூடில்ஸ்/சோயாமீட்/பெயின்ட் தொழிற்சாலைகளுக்கு சம்பளம் 18000/=, 25000/=,34000/= நண்பர்கள்/ குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில் (யாழ்/கிளிநொச்சி/பருத்தித்துறை/திரு கோணமலை/வவுனியா/முல்லைத்தீவு மற்றும் அனைத்துப்பிரதேசம்) வருகைதரும் அன்றே வேலைவாய்ப்பு

(சி-6395) தொடர்பு:-0778430179


# பாரிய மூங்கில் படகு கரையொதுங்கியது

மட்டக்களப்பு, காத்தான்குடி கடற்கரை பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை சுமார் 30 அடிக்கு மேல் நீளமான பாரிய மூங்கில் படகொன்று கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இம்மூங்கில் படகை கரைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக் கையில் காத்தான்குடி நகரசபை ஈடுபட்டுள்ளது.

குறித்த பாரிய மூங்கில் படகு விடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட கடற் றொழில திணைக்கள உதவிப் பணிப்பாளர் டொமின்கோ ஜோர்ஜ் கருத்து தெரிவிக்கையில்,

கரையொதுங்கிய இப்படகில் மனிதர்கள் எவரும் இருக்கவில்லை எனவும் இப்படகு கடற்றொழில் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

நாங்கள் இதனை மக்களின் பார்வைக்காக வைத்துள்ளோம். இப்படகு மியன்மார், தாய்லாந்து, வியட்நாம் போன்ற நாடுகளுடைய பாரிய படகமைப்பை கொண்டதாகவும் இது தற்போது காலநிலை மாற்றத்தால் நங்கூரம் இடப்பட்டு அறுந்து போய் ஆழக் கடலிலே வந்து கரையொதுங்கியுள்ளதாகவும் தெரிவித்தார். (அ-2)


SRI LANKA INSTITUTE OF CREDIT MANAGEMENT

## உயர்தரத்தின் பின்னர் வேகமாக வளர்ந்து வரும் நிதி துறையில் தொழில் வாய்ப்புகள்

ஸ்ரீ லங்கா இன்ஸ்டியுட் ஒப் கிரெடிட் மெனேஜ்மன்ட் (Sri Lanka Institute of Credit Management) ஊடாக முன்னெடுக்கும் உயர்தர டிப்ளோமா/ நிதி முகாமைத்துவத்தில் டிப்ளோமா கற்கை நெறிகளை தொடர்வதன் மூலமாக நிதியியல் துறையில் முன்னணி வாய்ந்த நிறுவனங்களில் உத்தரவாதப்படுத்தப்பட்டதொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளலாம்



Classes in Tamil Medium

தமிழ் மொழியில்

(SLICM) ஸ்ரீ லங்கா இன்ஸ்டியுட் பாராளுமன்ற கட்டளைச் சட்ட இலக்கம் 7இன்2000 ற்கமைய தாபிக்கப்பட்டது.

- SLICM இன் இணை உறுப்பினர்களிலொருவராக வருவதுடன் AICM இன் இணைக்கப்பட்ட சிறப்புரிமைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.
- உயர்தர டிப்ளோமா / நிதி முகாமைத்துவத்தில் டிப்ளோமா மற்றும் பிரசித்தி பெற்ற சிறந்த நிதி நிறுவனங்களில் வேலை வாய்ப்பு (9 மாதங்கள்)
- நிதி முகாமைத்துவத்தில் முதலாம் படிநிலை டிப்ளோமா சான்றிதழ மற்றும் பிரசித்தி பெற்ற சிறந்த நிதி நிறுவனங்களில் வேலை வாய்ப்பு (6 மாதங்கள்)
- நிதி முகாமைத்துவத்தில் ஆரம்ப கட்ட சான்றிதழ் (1.5 மாதங்கள்)
- உயர்தர நிறைவு

### பதிவு செய்து கொள்வதற்கான விபரங்கள்

ஆரம்ப திகதி - 16 மார்ச் 2014 விண்ணப்ப முடிவு திகதி -25 பெப்ரவரி 2014

விரிவுரைகள் ஆற்றப்படும் இடம் - "EWIS Career Training Centre;", இல 53, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

பயிற்சி கட்டணம்-முதலாம் படிமுறை டிப்ளோமா மட்டம்; ரூ.20,000 ; இரண்டாம் படிமுறை டிப்ளோமா மட்டம் ரூ.25,000

SLICM கட்டணம் - பதிவுக்கட்டணம் ரூ.3000, முதலாம் படிமுறை டிப்ளோமா மட்டம் பரீட்சை ரூ.7500, இரண்டாம் படிமுறை டிப்ளோமா மட்டம் பரீட்சை ரூ.7500

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் : 021 7204204

SLICM இன் இணைத் தொழில் தருணர்கள்

(இந் நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்ட வகையில் நிதியியல் சேவை சார்ந்த துறைகளில் வேலை வாய்ப்புகள் வழங்கப்படும)

LANKA ORIX FINANCE (An LOLC Group Company) · ARPICO FINANCE COMPANY PLC · softlogic Finance · BARTLEETFINANCE · Alliance Finance COMPANY PLC Since 1956 · CAPITAL LEASING

இன்னும் அதிக அதிகமாக

(5485)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: 27 சூரி செவ் 5 ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L / வெகுசன தொடர்பு அதிகாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/2786 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 30 செவ் 4 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: விவசாய டிப்ளோமா / அரச தொழில்<br>தொ.இ: G/1430 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 18<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA, MAAT, CIMA / கணக்காளர் (தனியார்)<br>தொ.இ: B/2792 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 1<br>கி.பா: 34 சூரி செவ் 7 ல<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: HNDA, B.Com (Final)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/1433 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 63 செவ் 1 ல<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L / களஞ்சிய பொறுப்பாளர்<br>தொ.இ: B/2795 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 3<br>கி.பா: 31 ¼<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L / தையல்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும். விவாகரத்தானவரும் ஏற்கலாம்.<br>தொ.இ: G/1434 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 34<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: BSc பொறியியலாளர் (லண்டன் - Work Permit)<br>தொ.இ: B/2796 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 79 செவ் 1 ல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: A/L / அழகு கலை<br>தொ.இ: G/1437 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail: kalyanamalai.jaffna@gmail.com

காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்திற்கு இராணுவமே தடை!





ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச்மாதம் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள நிலையில் அமெரிக்காவினால் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள பிரேரணை குறித்து மேலும் தகவல்களைத் திரட்டும் நோக்குடன் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்திய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்புக்கு வருகைதந்த நிஷா தேசாய் பிஸ்வால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், வடமாகாண முதலமைச்சரும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசருமான சீ.வி.விக்னேஸ்வரன் மற்றும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் உள்ளிட்ட குழுவினருக்கிடையில் கொழும்பிலுள்ள இலங்கைக்கான அமெரிக்க நாட்டின் உயர்ஸ்தானிகர் இல்லத்தில் பிற்பகல் 4.30 மணிதொடக்கம் 5.30 மணிவரை சந்திப்பு இடம்பெற்றது.

அத்தோடு இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸையும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினார். இதேவேளை யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக்காலை வருகைதந்திருந்தார். நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு நேற்றுக்காலை 9 மணியளவில் வருகைதந்த அவர் விசேட வழிபாட்டில் ஈடுபட்டார். இந்த வழிபாட்டில் இலங்கைக்கான அமெரிக்க நாட்டின் உயர்ஸ்தானிகர் மிச்சேல் ஜே.சிசன் மற்றும் இராஜாங்கத்திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவினரும் பங்குகொண்டிருந்தனர்.

இந்த வழிபாட்டையடுத்து யாழ்.ஆயர் இல்லத்திற்கு சென்ற அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் உள்ளிட்டவர்கள் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினைச்சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.சுமார் ஒருமணித்தியாலம் இந்தச்சந்திப்பு இடம்பெற்றது.

குறிப்பாக சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் தடையாக இராணுவம் தான் உள்ளது என்ற குற்றச்சாட்டை யாழ்.ஆயர் இந்தச் சந்திப்பில் முன்வைத்திருந்தார். இராணுவத்தின் மீதான குற்றச்சாட்டுக்கள் வலுப்பெற்று வரும் நிலையில் அமெரிக்க இராஜாங்கத திணைக்களத்தின் உதவிச் செயலாளரிடம் இவ்வாறு கூறப்பட்டது அரசாங்கத்திற்கு மேலும் அழுத்தத்தை அதிகரிக்கும் என்பதில் சந்தேகம்கொள்ளத்தேவையில்லை.

இறுதிக்கட்டப்போரில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு பல்லாயிரக்கணக்கானவர்கள் காணாமல் போனதற்கும் இராணுவம்தான் காரணம் என்றும் எனவே இலங்கை அரசின் மீது சுயாதீனமான, பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கை அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் நல்லிணக்கத்திற்கு தடையாக இராணுவமேயுள்ளது என்ற யாழ்.ஆயரின் பகிரங்க குற்றச்சாட்டு அரசாங்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதற்கு அப்பால் ஜெனீவா அமர்விலும் ஓங்கிஒலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கில், யுத்தம் காரணமாக தமது சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் மீள்குடியேற்றத்திற்கும் விவசாயம் உள்ளிட்ட தொழில் நடவடிக்கைகளுக்கும் தடையாக இராணுவம் உள்ளது [illegible] மத்தியில் நல்லிணக்கத்திற்கும் தடையாக இராணுவமேயுள்ளது என்று மறுபடியும் ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக போர்க்குற்ற ஆதாரங்களை முன்வைத்து வருகின்றார் என்பதற்காக மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் ஆண்டகை மற்றும் யாழ்.ஆயர் ஆகியோரைக் கைது செய்யவேண்டும் என்று தென்னிலங்கையிலுள்ள மதவாத சக்திகள் கோஷமிட்டுவரும் நிலையில் இராணுவம் தொடர்பான யாழ்.ஆயரின் குற்றச்சாட்டுக்கு தென்னிலங்கையில் பலத்த எதிர்ப்பு வலுக்க வாய்ப்புள்ளது.

இறுதிக்கட்டப்போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு அரசாங்கம் மறுப்பு தெரிவித்து வருவதோடு அந்தக் கொலைகளுடன் நேரடியாக சம்பந்தப்பட்டதாக இராணுவத்தின் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளையும் மறுத்து வருகின்றது.

ஜெனீவா அமர்வுக்கு முன்பாக வடபகுதியில் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கும் இலங்கை அரசு காணாமல் போனவர்கள் தொடர்பில் தாம் பொறுப்பாக நடந்து கொள்வதாக சர்வதேசத்தை நம்ப வைக்கும் நோக்குடன் ஆணைக்குழுவொன்றினை நியமித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கடந்த 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடக்கில் காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட இந்த விசேட ஆணைக்குழு கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமற்போனவர்கள் தொடர்பான தனது விசாரணையை முடிவிற்கு கொண்டுவந்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு என்பதனால் தமிழ் மக்களுக்கு இந்த ஆணைக்குழுவில் நம்பிக்கையில்லை என்றபோதிலும் உறவினர்களை இழந்து தவிக்கும் உறவுகள் சாட்சியமளிக்க தவறவில்லை.

அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையாவது அமுல்படுத்துமாறு அரசாங்கத்திற்கு சர்வதேச நாடுகளின் அழுத்தம் அதிகரித்து வந்த நிலையில் காணாமற்போனவார்களின் விசாரணையை வேறுவழியின்றி அரசாங்கம் ஆரம்பித்தது.

விசாரணையில் அரசாங்கம் தப்பித்துக்கொள்ளமுடியாதவாறு காணாமற்போனவர்களின் உறவினர்களின் சாட்சியம் அமையப்பெற்றதும் உறவினர்கள் காணாமற்போக இராணுவம்தான் காரணம் என்று உறவினர்கள் சாட்சியமளித்து வலைவிரித்தவர்களையே அதில் சிக்கவைத்துவிட்டனர்.

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை பாவித்ததாக இராணுவத்தின் மீதும் ஏனைய படைகளின் மீதும் போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் குற்றச்சாட்டுக்கள் அதிகரித்த வண்ணமுள்ளனவே தவிர குறைந்தபாடாக இல்லை.

இதற்கிடையில் யாழ்.ஆயர், நல்லிணக்கத்திற்கு தடையாக இராணுவம்தான் உள்ளது எனவும் சமாதானத்திற்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையிலும் வடக்கில் செயற்பட்டு வருவதாகவும் அமெரிக்காவிடம் நேரடியாக முறையிட்டுள்ளார்.

ஐ.நா. அமர்வுக்கு முன்பாக சனல்-4 தொலைக்காட்சி புதிய போர்க்குற்ற ஆதாரங்களை வெளியிடப்போகின்றதா? என்ற கெலிப்பிலுள்ள இலங்கை அரசாங்கத்திற்கு அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் உதவிச்செயலாளர் நிஷாவின் வருகை மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

**எஸ்.ஆர்.கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பு வாசகர்களே!

அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல. 3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அன்பின் வியாசரே!

நம் சின்னஞ் சிறிசுகளை புலமைப பரிசில் பரீட்சை சித்திக்காக பெற்றோர் பாடாய் படுத்துகின்றனரே..?

*சு. ஜெயரூபன், பருத்தித்துறை*

பிஞ்சுப் பழங்களுககு மருந்தடித்து பழுக்க வைத்து விற்பனை செய்ய வருக்கும் இப்படிப்பட்ட பெற்றோருககும் வித்தியாசம கிடையாது.

**Hi வியாசரே!**

சில பாடல்கள் எம்மை சிந்திக்க வைக்கின்றன. அதைப்பற்றி உமது கருத்து?

*V. பிரகஸ்பதி, பருத்தித்துறை*

அநேகமான பாடல்கள் எம் கலாசாரத்தை சந்திக்கு கொண்டு வருகின்றதே.

உதாரணம் (படம்- ஜில்லா)

எப்போ மாமா மாமா ட்றீட்டு நானும் என்னை மறக்க நீயும் விண்ணைத் துறக்க...

அன்பின் வியாசரே!

காலத்தால் அழியாத பல பாடல்களை எழுதிய கண்ணதாசனின் முதல் பாடல் எதுவென்று கூறமுடியுமா?

*கிரு. செந்தூரன், பருத்தித்துறை*

கன்னியின் காதலியில் எனும் படத்தில் **கலங்காதிரு மனமே உன் கனவெலாம் நினைவாகும் ஒரு தினமே....** என்பது முதல் பாடல்.

மூன்றாம் பிறை திரைப்படத்தில் **கண்ணே கலைமானே கன்னிமயிலென கண்டேன் உனை நானே** என்பதுதான் அவரின் இறுதிப் பாடல்.

விஜா அண்ணாவே!

பெண்களுக்கு அதிகம் கோபம் வரக்கூடாது என்பார்கள் ஏன் என்று தயது செய்து சொல்லுங்கள் அண்ணா.

*என். சுஜீவா, திருமுறிகண்டி*

உலக சுழற்சியில் பெண் அச்சாணியை போனறவள். அதனால்தான் இயற்கையை பெண்மைக்கு ஒப்பிடுகின்றார்கள். அப்படிப்பட்ட பெண் அதிகம் கோபம் கொண்டால் இந்த இயற்கையின் சுழற்சியே மாறிவிடும்

**Hi வியாசர்!**

மரியாதை நல் ஒழுக்கம் எல்லாம் மரித்துப்போய் விட்டது. வெளிநாட்டில் மட்டுமல்ல நம் நாட்டிலும்தான். இதைப்பற்றி தங்கள் பதில்?

*எஸ். கலைச்செல்வி Face book*

கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதை மனிதன் எப்போது தேட ஆரம்பித்தானோ அப்போதே நீர் கூறிய எல்லாம் ஆக்கிரமிக்க ஆரம்பித்து விட்டது.

**பெண்ணுங்க எல்லாம் என்னை திரும்பி பார்க்கனும் என்டா என்ன பண்ணலாம்??**

அன்பின் வியா!

நம்பிக்கைக்கு துரோகம் செய்யும் ஆண்களை என்ன செய்யலாம்?

*S.K. றாகினி*
*புன்னாலைக்கட்டுவன்*

முதலில் நம்பிக்கை வைத்தவன் பின்பு நம்பிக்கைத் துரோகம் செய்வானெனின் அவன் இந்த உலக தண்டனையில் இருந்து தப்பித்தாலும் இறைவனின் தண்டனையில் இருந்து தப்பிக்கவே முடியாது.

மிஸ்டர் வியாசர்

பெண்ணுங்க எல்லாம் என்னை திரும்பி பார்க்கனும் என்டா என்ன பண்ணலாம்??

*Heart Pain (Face book)*

அடைக் கோழிக்கு காவோலை கட்டி விட்ட மாதிரி காவோலையைக் கட்டிட்டு றோட்டில போய்ப்பாரும். சும்மா கூட்டம் கொட்டோ கொட்டென்று கூடும்.

**சில பாடல்கள் எம்மை சிந்திக்க வைக்கின்றன. அதைப்பற்றி உமது கருத்து?**



*கொஞ்சம் சிரிங்கப்பா...*

"காலேஜ் பசங்க யாருமே அந்தப் படத்துக்கு ஏன் போக மாட்டேங்கிறாங்க?"

" 'இது படம் அல்ல; பாடம்'னு விளம்பரம் பண்ணாங்களாம்!"

**Hi வியா அண்ணா!**

ஒரு Boy அல்லது Girl தான் தப்பானவர் என்றால் தன்னுடைய நண்பர்களும் தப்பானவங்க என நினைப்பவர்கள் பற்றி?

*மது Face book*

அவர்களிடம்தான் நம்ம உசாராய் இருக்க வேண்டும். துளிவிஷம் போன்றவர்கள் குடம்பாலையும் விஷமாக்கிவிடுவர்.

அன்பின் வியா!

உங்கள் மனைவியைப் பார்த்தவுடன பிடித்து விட்டதா? இல்லை பார்க்கப் பார்க்க பிடித்ததா?

*P. இளவரசி, பருத்தித்துறை*

இதற்கு பதில் கூறினால் இன்று இரவு வீட்டில் எனக்கு சா...ப்...பாடு... கிடைக்காதம்மா பிளீஸ் விட்டுவிடு.

# மக்கள் மீது வன்முறைகளில் ஈடுபடும் படையினருக்கு எதிராக நடவடிக்கை

## நிஷா தேஷாயிடம் கூறினார் ஹக்கீம்

பொது மக்கள் மீதான வன்முறைகளில் ஈடுபடும் படையினருக்கு எதிராக சட்டத்தின் மூலம் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும், இனவாதத்தை தூண்டும் விதத்தில் வெறுக்கத்தக்கதாக பேசப்படும் பேச்சுக்களை தண்டனைக்குரிய பாரதூரமான குற்றச்செயலாக ஆக்குவதற்கு சட்டம் இயற்றப்பட இருப்பதாகவும், பெண்களுக்கும், இளவயதினருக்கும் எதிராக புரியப்படும் குற்றச் செயல்களுக்கு கூடுதல் தண்டனை விதிக்கக்கூடிய விதத்தில் சட்டத்தின் மூலம் வழிவகைகள் செய்யப்படவுள்ளதாகவும் நீதியமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தம்மைச் சந்தித்த ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வாலிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை வந்த ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலாளர் அடுல் கெஷாப் மற்றும் அவர்களது குழுவினர், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே. சிஸன் ஆகியோருடன் நேற்று முன்தினம் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது அமைச்சில் சந்தித்தனர்.

இச்சந்திப்பின் போது நாட்டின் குற்றவியல் சட்டம் தொடர்பாகவும், விரைவில் அமைச்சர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள புதிய சட்டங்கள் மற்றும் சட்ட திருத்தங்கள் தொடர்பாகவும் பரவலாக கலந்துரையாடப்பட்டது.



இவர்கள் சில முக்கிய கேள்விகளை எழுப்பி அவற்றிற்கு உரிய விளக்கங்களைப் பெற்றுக் கொண்டனர்.

குறிப்பாக இலங்கையில் பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் என்பவற்றின் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள், எரியூட்டல் சம்பவங்கள் அதிகரித்திருப்பது பற்றி விசனம் தெரிவித்த நிஷா தேசாய் பிஸ்வால் அவற்றைத் தடுப்பதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருப்பதையிட்டு கவலை வெளியிட்டார்.

அதன் பின்னணியை எடுத்துரைத்த அமைச்சர் ஹக்கீம் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் வணக்கஸ்தலங்கள் மீதான அவ்வாறான தாக்குதல்களுக்கு தூண்டுகோலாய் அமைந்த இனவாதத்தைத் தூண்டும் சிலரின் வெறுப்பூட்டும் பேச்சுக்களின் விபரீதம் குறித்தும் கூறினார்.

இவ்வாறான வெறுப்பூட்டும் இனவாதப் பேச்சுக்களை குற்றவியல் சட்டக் கோவையில் பாரதூரமான குற்றச் செயலாக உள்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் கூறினார். இது பற்றி அமைச்சர் வாசுதேவ நாணயக்கார முதன் முதலில் அரசாங்கத்திற்கு வலியுறுத்தியதாகவும் அவர் கூறினார்.

குற்றச் செயல்களை நீதிமன்றங்களில் வெளிப்படையாக தெரிவிப்பதற்கு அச்சம் காரணமாக தயக்கம் காட்டும் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் சாட்சிகள் விடயத்தில் இத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என உதவிச் செயலாளர் தேசாய் பிஸ்வால் வினவிய பொழுது பாதிக்கப்பட்டவர்களையும், சாட்சிகளையும் பாதுகாப்பதற்கான உத்தேச புதிய சட்டம் அந்த விடயத்தில் ஒரு திருப்புமுனையாகவும், மைல் கல்லாகவும் அமையுமென அமைச்சர் ஹக்கீம் நம்பிக்கை தெரிவித்தார்.

மூன்று தசாப்தகால யுத்தத்தின் விளைவாக வடகிழக்கு மாகாணங்களில் பெரும்பாலும் செயலிழந்திருந்த நீதிமன்றங்கள் மீண்டும் செயற்பட்டு வருவதாகவும், அண்மையில் சகல வசதிகளுடனும் கூடிய புதிய மூன்று நீதிமன்றக் கட்டடத் தொகுதிகள் வட மாகாணத்தில் திறந்து வைக்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார். (அ-2)

## சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு இருபது மாடிக் கட்டடம் அமைக்கப்படும்

கொழும்பு நாரஹேன்பிட்டி சித்திரா வீதி, அன்டர்சன் தோட்டக் காணியில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கென 80 வீடுகளைக் கொண்ட இருபது மாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முதலில் 55 வீடுகளைக் கொண்ட பன்னிரண்டு மாடிக் கட்டடமாக அமைக்க ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது.

சட்டமா அதிபர் திணைக்களத்திலுள்ள சட்ட அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 12 மாடி 20 மாடியாக அதிகரிக்கவும், 55 வீடுகளை 80 வீடுகளாக அதிகரிக்கவும் முடிவுசெய்ய ப்பட்டது.

வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச முன் வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாவிற்கு முழுக்கு போட்ட வீணா மாலிக்

அதிரடி கவர்ச்சி நடிகையான வீணா மாலிக் சினிமாவுக்கு முழுக்கு போடுவதாக அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானை சேர்ந்த பிரபல மொடல் மற்றும் சினிமா நடிகையான வீணாமாலிக் லாகூரில் சில உருதுப் படங்களில் நடித்தார், பின்னர் இந்தியாவுக்கு வந்து இந்தி படங்களிலும் கன்னட, தெலுங்கு, பஞ்சாபி படங்களிலும் நடித்துள்ளார்.

எப்எச்எம் என்ற பத்திரிகைக்கு அவர் கொடுத்த நிர்வாண போஸ் அவரை பரபரப்பான நடிகையாக்கியது. உலகின் செக்ஸியான நடிகைகள் 100 பேரில் ஒருவர் என பத்திரிகைகளில் பட்டியலிடப்பட்டவர் வீணா.

செய்து கொண்டார். அதன் பிறகு படங்களில் நடிப்பதை நிறுத்திவைத்தார்.

இப்போது ஒரேயடியாக முழுக்குப் போட்டுவிட்டார். தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், இனி சினிமாவுக்கு முழுக்கு போடப் போவதாக அறிவித்தார்.

மேலும், ஒரு போதும் கவர்ச்சியாக போஸ் கொடுக்கப் போவதில்லை என்றும் சமூக சேவைகளிலும், மக்களுக்கு நல்லது செய்யும் திட்டங்களிலும் மட்டுமே ஈடுபடப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

**வாய்ப்புக்கள் குறைந்த எல்லா நடிகைகளும் சொல்லும் அதே பழைய பல்லவி தானே..!**



[வீணா மாலிக்]

# சமந்தாவின் பாராட்டு மழையில் "கோலி சோடா"




சமந்தாவின் பாராட்டு மழையில நனைந்துள்ளது 'கோலி சோடா' திரைப்படம்.

சமீபத்தில் திரைக்கு வந்து பெரும்பாலானோரின் பாராட்டை பெற்று ஓடிக்கொண்டிருக்கும் படம் 'கோலிசோடா'.

இந்தப் படத்தை பார்த்த பிரபலங்களில் சமந்தாவும் ஒருவர், கோலிசோடா குறித்து அவர் தனது மைக்ரோ ப்ளாகில், கோலி சோடாவை பார்த்தேன், சூப்பர்! அருமையான இயக்கம். சூப்பர் பர்ஃபார்மென்ஸ். 'கோலிசோடா' டீமுக்கு வாழ்த்துக்கள், கண்டிப்பா பார்க்க வேண்டிய படம், 'ஏடிஎம்' பாத்திரத்தில் நடித்திருக்கும் அந்த சிறுமியின் நடிப்பு சூப்பர், அவருக்கு என்னோட ஸ்பெஷல் பாராட்டுக்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். அட பாராட்டுவதற்கும் ஒருமனசு வேணுங்க.

# கமல்ஹாசனுக்கு "பத்மபூஷண்" விருது




இந்திய அரசின் உயரிய விருதுகளில் மூன்றாவது நிலையில் இருக்கும் பத்மபூஷண் விருது, உலக நாயகன் கமல் ஹாஸனுக்கு கடந்த 26 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அவருக்கு பாராட்டுகளும் வாழ்த்துகளும் குவிந்து வருகின்றன. ஏற்கெனவே மத்திய அரசின் பத்மஸ்ரீ விருது பெற்றவர் கமல் ஹாஸன். அவரை அனைத்து நிகழ்ச்சிகளிலும் பத்மஸ்ரீ கமல்ஹாஸன் என்றே அழைத்து வந்தனர்.

இந்த ஆண்டு பத்மபூஷண் விருது அவருக்குக் கிடைத்துள்ளது.

# சிம்பு - நயன் விரைவில் திருமணம்



நயன்தாராவுக்கு விரைவில் தாலி கட்டப் போகிறார் சிம்பு. பாண்டிராஜ் இயக்கும் பெயரிடப்படாத படத்தில் சிம்பு, நயன்தாரா ஜோடியாக நடித்து வருகின்றனர்.

இந்தப்படத்தில் நயன்தாராவுக்கு இந்து முறைப்படி சிம்பு தாலி கட்டுவது போன்ற காட்சியை எடுக்கிறார்களாம். ஏற்கனவே ராஜா ராணி படத்தில் கிறிஸ்தவ முறைப்படி ஆர்யாவும், நயன்தாராவும் சர்ச்சில் திருமணம் செய்வது போல் காட்சி வைக்கப்பட்டு அதையே நயன்தாரா - ஆர்யா திருமணம், முதலிரவு என்றெல்லாம் பப்ளிசிட்டி செய்து பரபரக்க வைத்தார்கள்.

இந்த முறை, சர்ச்சுக்கு பதில் இந்து கோவில் ஒன்றில் சிம்பு - நயன் திருமண காட்சியை எடுக்கப் போகிறார்களாம். அனுமதி கிடைக்காவிட்டால் செட் போட்டு படமாக்கத் திட்டமிட்டுள்ளோம் என்றார் பாண்டிராஜ்.

# ஹன்சிகா மொத்வானிக்கு கிடைத்த அடுத்த குழந்தை

தனது 25 ஆவது குழந்தையைத் தத்தெடுத்துள்ளார் ஹன்சிகா மொத்வானி.

நடிகை ஹன்சிகா ஆதரவற்ற குழந்தைகளை தத்து எடுத்து வளர்த்து வருகிறார். இதுவரை 24 குழந்தைகளை தத்து எடுத்து அவர்களின் முழு படிப்பு செலவையும் கவனித்து வருகிறார்.

இப்போது 25 ஆவது குழந்தையாக புனேயில் 8 ஆவது படிக்கும் சிறுவன் ஒருவனை தத்து எடுத்துள்ளார். அவன் பெற்றோர் சண்டை போட்டு பிரிந்து விட்டனர்.

தந்தையின் தங்கை பராமரிப்பில் அச்சிறுவன் வளர்ந்தான். தற்போது அப் பெண்ணை புற்று நோய் தாக்கியுள்ளது. இதனால் மாணவனால் படிப்பை தொடர முடியவில்லை.

இந்த பரிதாப கதையை கேள்வியுற்ற ஹன்சிகா அந்த சிறுவனை படிக்க வைப்பதாக தத்து எடுத்துக் கொண்டார்.

**இப்படி நம்ம நடிகைகள் தத்தெடுப்பது ஒன்றும புதிதல்ல தமது புகழுக்கும் விளம்பரத்திற்காகவும இப்படிச் செய்வார்கள். இருப்பினும் ஏது எப்படியோ ஆதரவற்ற சிறுவர்களுக்கு உதவுவது வரவேற்கத்தக்க விடயம். அதற்காக ஹன்சிகாவிற்கு ஒரு சலூட் போடலாம்.**



# சந்தானத்திற்கு கொலை மிரட்டல்



விஷால், நாசருக்கு கொலை மிரட்டல் கடிதங்கள் வந்துள்ள நிலையில், சிவக்குமார், சந்தானத்துக்கும் இதுபோல் கடிதங்கள் வந்திருப்பதாக கூறப்படுகிறது.

இதனால் நடிகர், நடிகைகள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து நாசர் கூறும் போது, எனக்கு மிரட்டல் கடிதம் வந்து இருக்கிறது. அதை அனுப்பியவர் யார் என்று தெரியவில்லை. பெயர் முகவரி இல்லாமல் மொட்டை கடிதமாக அதை அனுப்பி வைத்துள்ளனர். கையால் எழுதாமல் டைப் செய்து அனுப்பியுள்ளனர்.

மோசமான வார்த்தைகளால் திட்டி இருக்கிறார்கள். தைரியம் இருந்து இருந்தால் நேரடியாக என்னிடம் மோதி இருக்கலாம். சிவக்குமார், விஷால், சந்தானம் போன்றோருக்கும் இது போல் மிரட்டல் விடுத்து மொட்டை கடிதங்கள் வந்திருப்பதாக அறிந்தேன்.

இதனை நான் சும்மா விடப் போவது இல்லை. ஐதராபாத்தில் படப்பிடிப்பில் இருக்கிறேன். சென்னை திரும்பியதும் பொலிஸில் புகார் அளிப்பது குறித்து முடிவு செய்வேன். இவ்வாறு நாசர் கூறினார்.


**பாவம் நம் சந்தானம் என்ன பண்ணி தொலைச்சாரோ??**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான அமெ.தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்

## டெசோ கூட்டத்தில் தீர்மானம்

**(சென்னை) ஐ.நா.மனிதவுரிமை ஆணையகத்தில் எதிர் வரும் மார்ச் மாதம் நடைபெறும் கூட்டத்தில் இலங்கை அரசின் நோக்கத்திற்குத் துணை போகாமல் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா முன்மொழியவுள்ள தீர்மானத்தை ஆதரிப்பதோடு, சுதந்திரமான சர்வதேச விசாரணை வேண்டுமென்றும் இந்திய அரசு தனியாகவும் ஒரு தீர்மானத்தை ஐ.நா.மனிதவுரிமை ஆணையகத்தில் முன்மொழிய வேண்டுமென்றும் டெசோ கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.**



தமிழீழ ஆதரவாளர் அமைப்பின் (டெசோ) கூட்டம் தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் அண்ணா அறிவாலயத்தில், நேற்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பின் வரும் தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன.

அவை வருமாறு,

ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தில் மீண்டும் அமெரிக்கா இலங்கையில் நடைபெற்ற தமிழின படுகொலை மற்றும் இன அழிப்பு கொடுமைகளைக் கண்டித்து எதிர்வரும் மார்ச் மாதம் தீர்மானம் கொண்டுவர முடிவு செய்துள்ளது.

அமெரிக்கா கடந்த காலத்தில் இரண்டு முறை இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தில் முன்னெடுத்துச் சென்று அந்த தீர்மானம் ஐ.நா.மனித உரிமை ஆணையகத்தில் நிறைவேற்றப்பட்டது. இலங்கையில் நடைபெற்ற பொது நலவாய மாநாட்டில் கலந்துகொண்ட பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கையில் நடந்த இனஅழிப்புக்கு சுதந்திரமான சர்வதேச விசாரணை வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார். அதை பிரிட்டிஷ் அரசாங்கம் முன்னெடுத்து செல்லும் என்று உறுதியளித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கையில் நடந்த இனப் போராட்டத்தைக் கண்டித்து தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றது.

இலங்கையின் வடக்குமாகாண சபை முதலமைச்சர் சீ.வி. விகனேஸ்வரன் அண்மையில் நடைபெற்ற சபை கூட்டத்திலும் இலங்கையில் நடந்த கொடுமைகளை குறித்து விசாரிக்க சுதந்திரமான சர்வதேச விசாரணை வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

தற்போது அமெரிக்கா சென்றுள்ள இலங்கை ஜனாதிபதியன் செயலாளர் லலித் வீரதுங்க அமெக்காவினாலும் முன்மொழியப்படும் தீர்மானத்தை முறியடிக்க ஐ.நா. உறுப்பு நாடுகளிடம் ஆதரவு திரட்ட, தங்கள் நாட்டு பிரதிநிதிகள் வெவ்வெறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் கூறியுள்ளமை மனித உரிமையில் நம்பிக்கையுள்ள அனைவருக்கும் அதிர்ச்சியளிக்கக் கூடியதாகும்.

இந்நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தில், இலங்கை அரசின் நோக்கத்திற்குத் துணை போகாமல், இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா அரசு முன்மொழியவுள்ள தீர்மானத்தை ஆதரிப்பதோடு, சுதந்திரமான சர்வதேச விசாரணைவேண்டுமென்றும் இந்திய அரசே தனியாகவும் ஒரு தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தில் முன்மொழிய வேண்டுமென்றும் இக்கூட்டம் இந்திய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

இலங்கையில் வடக்கு மாகாண சபை கூட்டம் கடந்த வாரம் நடைபெற்ற போது முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரனுக்கும், வடமாகாண சபை உறுப்பினர்களும் - அங்குள்ள மாகாண சபைக்கும் உரிய அதிகாரங்கள் வேண்டுமென்றும், 13ஆவது அரசியல் சட்ட திருத்தத்தின்படி நியாயமாக வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள்கூட மாகாண சபைகளுக்கு வழங்கப் படவில்லை என்றும்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

வடமாகாண சபை அமைச்சரவையின் பரிந்துரைகளை ஏற்பதற்கும், நிராகரிப்பதற்கும் கூட மாகாண ஆளுநருக்கே அதிகாரமுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முழுவதும் நீர்த்துப் போன அரசியல் அதிகாரப் பங்கீடுகளே அனுமதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழர்களின் விருப்பத்திற்கேற்றவாறு நிரந்தரமான அரசியல் தீர்வு அமைய, வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்கள் மற்றும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களிடையில் "பொது வாக்கெடுப்பு" நடத்தவும், இடைக்கால நிவாரணமாக முழுமையான அதிகாரங்கள் தமிழர்களுக்குக் கிடைத்திடும் வகையில், 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்திடவும் இலங்கை அரசை வலியுறுத்தி தமிழர்களின் விருப்பத்தை நிறைவேற்ற இந்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

இலங்கை கடற்படையால் தொடர்ந்து தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் அடைக்கப்படுவதும் வாடிக்கையாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தலைவர் கலைஞரும் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்கக்கோரி தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வருகின்றார்.

ஒருசில பிரச்சினைகளில் தீர்வு எட்டப்பட்டிருப்பதாக தகவல் வெளிவந்திருந்தாலும் தொடர்ந்து இலங்கை கடற் படையினர் தமிழக மீனவர்களை தாக்கி வருகிறார்கள்.

பேச்சுவார்த்தைக்குப் பின்னரும் கடந்த 30 ஆம் திகதி 38 இந்திய மீனவர்கள் இலங்கை இராணுவத்தினால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

எனவே, இந்த பேச்சுவார்த்தையில் மத்திய மாநில அரசுகள் முனைப்பு காட்டி நிரந்தரமான தீர்வுக்கு வழி வகை செய்யாதது வருந்தத் தக்கதும், தமிழக மீனவர்களுக்கு துரோகம இழைப்பதுமாகும் என இக்கூட்டம் கருதுகிறது.

இந்நிலையில் மத்திய அரசே இலங்கை அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மீனவர்களை பாதுகாப்பதற்குரிய விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

இந்திய நாட்டின் இறையாண்மைக்குக் கட்டுப்பட்ட கச்சதீவின் உரிமையை இலங்கை நாட்டுக்கு விட்டுக்கொடுப்பது சம்பந்தமான பிரச்சினை நாடாளுமன்றத்தில் முறைப்படி விவாதிக்கப்பட்டு, அரசியல் சட்டத் திருத்தம் செய்யப்பட்டு, அதன் பின்னர் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம் அல்ல என்றும், எனவே அந்த ஒப்பந்தம் செல்லாது என்றும் தெரிவிக்க வேண்டுமென்று கோரித்தான் டெசோ அமைப்பின் மூலமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

அந்த வழக்கு உச்சநீதி மன்றத்தில் நிலுவையிலே இருககும்போது, சென்னை உயர்நீதி மன்றத்தில் கச்சதீவில் தமிழக மீனவர்க்ள் மீன்பிடிப்பதைத் தடைசெய்யக் கூடாது என்று தொடர்ந்திருக்கும் வழக்கில் தமிழக மீனவர்களின் மரபுரிமைக்கு மாறாக கச்சதீவில் தமிழக மீனவர்களுக்கு மீன்பிடி உரிமை இல்லை என்று மத்திய அரசு பதில் மனுதாக்கல் செய்திருப்பதை இந்தக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கின்றது. (அ-2)



டில்லி பா.ஜ.அலுவலகத்தில் நடந்த தேர்தல் பிரசார விழாவில் தேசிய தலைவர் ராஜ்நாத்சிங் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

# பேரழிவை ஏற்படுத்தக்கூடிய கூடங்குளம் அணுஉலை அகற்றப்பட வேண்டும்

## ம.தி.மு.க.பொது செயலாளர் வைகோ தெரிவிப்பு

தென்தமிழ்நாட்டுக்கு பேரழிவை ஏற்படுத்தக்கூடிய கூடங்குளம் அணுஉலை அகற்றப் பட வேண்டும்.

அப் பகுதியில் வாழுகின்ற இலட்சோப இலட்சம் மக்களின் உடல் நலனையும் உயிரையும் பாதுகாக்க வேண்டுமெனில் அணு உலை இயங்கக் கூடாது என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது,

உலகில் ஐரோப்பிய நாடுகளில் புதிதாக அணு உலைகள் அமைக்கப்படவில்லை. 2011இல் ஏற்பட்ட புகுஷிமா அணு உலை விபத்து மிகப் பெரிய எச்சரிக்கையாகும்.

இடிந்தகரை அறப் போர்க்களத்தில் 900 நாட்களுக்கு மேலாக, பல்லாயிரக்கணக்கான



மக்கள், குறிப்பாக தாய்மார்கள் வீரஞ்செறிந்த போராட்டத்தை அணுஉலைக்கு எதிராக நடத்தியதை மிரட்டுவதற்காக 360 இற்கும் மேற்பட்ட பொய் வழக்குகள், இரண்டு இலட்சத்து இருபத்து ஏழாயிரம் மக்கள் மீது போடப் பட்டன. அம்மக்கள், குறிப்பாக மனவ தாய்மார்கள்சொல் லொணா துன்பத்திற்கு ஆளானார்கள்.

அணுஉலை இயங்குகிறது என்றும், அதிக மின்சாரம் கிடைக்கிறது என்றும் பொது மக்களை ஏமாற்றுகின்ற வேலையில் மத்திய அரசும், அணு உலை நிர்வாகமும் ஈடுபட்டுள்ளன.

காயப்பட்ட புண்ணில் சூட்டுக் கோலை திணிப்பதைப் போல் கூடங்குளத்தில் மூன்றாவது, நான்காவது அணு உலைகள் தொடங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது, தமிழ் நாட்டுக்கும் குறிப்பாக தமிழக மீனவர்களுக்கும் வஞ்சகமும், துரோகமும் இழைத்து வரும் மத்திய அரசு தென் தமிழ் நாட்டுக்கு பெரும் அழிவை விளைவிக்கும் விதத்தில் இப் பிரச்சினையில் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

கூடங்குளத்தில் மூன்றாவது, நான்காவது அணு உலைகள் அமைக்கக்கூடாது என்றும், ஏற்கனவே அமைக்கப் பட்டுள்ள இரண்டு அணு உலைகள் அகற்றப்பட வேண்டும் என்றும் போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெறவேண்டும் என்றும் கோரிக்கைகளை முன்வைத்து இடிந்தகரையில் காலவரையறையற்ற உண்ணாவிரத அறப் போரை மக்கள் மேற் கொண்டுள்ளனர்.

இது நீதிக்கான போராட்டம். தமிழ்நாட்டின் தென்கோடி முனை மக்களைக்காக்க கடற்கரை மீனவ மக்கள் தொடுத்து இருக்கின்ற சத்திய யுத்தமாகும்.

இந்தப் போராட்டத்துக்கு மறுமலர்ச்சி தி.மு.க. முழுமையான ஆதரவை தெரிவிப்பதோடு, இந்தப் பிரச்சினையில் பாசிச அணுகுமுறை மேற்கொள்ளும் மத்திய-மாநில அரசுகளுக்கு பலத்த கண்டனத்தை யும் தெரிவிக்கிறேன் என வைகோ கூறியுள்ளார். (2)

## தெலுங்கானா மசோதா தடங்கலின்றி நிறைவேற்றப்படும்

### அமை. சுஷில்குமார்

தெலுங்கானா மசோதாவை ஆந்திர சட்டப்பேரவை நிராகரித்தாலும், எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் அது எந்தத் தடங்கலுமின்றி நிறைவேற்றப்படும் என மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் அவர் கூறுகையில், பெப்ரவரி மாதம் 5ஆம்திகதி தொடங்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தெலுங்கானா ம்சோதா நிச்சயம் நிறைவேற்றப்படும். அதற்கு எநதத் தடங்கலும் இல்லை.

ஆந்திரப் பிரதேச சட்டப் பேரவையிடமிருந்து மத்திய அரசு மறுசீரமைப்பு மசோதாவைப் பெறவில்லை. மத்திய அரசு தெலுங்கானா குறித்து அட்டர்னி ஜெனரலின் கருத்துகளைக் கேட்கவில்லை என்று கூறினார்.

காங்கிரஸ் கட்சிக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தும் வகையில், மத்திய அரசு கொண்டு வந்த தெலுங்கானா மசோதாவை ஆந்திர சட்டப்பேரவை குரல் வாக்கெடுப்பின் மூலம் கடந்த வியாழக்கிழமை நிராகரித்தது.

எனினும், மத்திய அரசு தனி தெலுங்கானா மாநிலத்தை உருவாக்குவதற்கு இது எந்த வித தடையையும் ஏற்படுத்தாது என சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, தெலுங்கானா விவகாரத்தில் பிரதான எதிர்க்கட்சியான பா.ஜ.கவின் ஆலோசனைகளை வரவேற்பதாக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஜெய்பால் ரெட்டி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில, நாடாளுமன்றத்தில் தெலுங்கானா மசோதாவை அறிமுகப் படுத்தும்போது, பா.ஜ.க. உள்ளிட்ட அனைத்து தரப்பினருடனும் நாங்கள் கலந்தாலோசிப்போம் என்று தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செல்வம் வேண்டாமா?

மாயனூர் என்ற கிராமத்தில் ராமநாதன் என்ற இளைஞன் இருந்தான். ஒருநாள் கிராமத்திற்கு வருகைதந்த சாமியார் ஒருவர் அவன் கை ரேகைகளைப பார்த்துவிட்டு, "அதிர்ஷ்டம் உன்னைத் தானே தேடிவரும்" என்று சொன்னார். அதிலிருந்து ராமநாதன் வேலை செய்வதை விட்டு வட்டு, தான் பணக்காரனாவது பற்றியே எப்போதும் மனக்கோட்டைக் கட்ட ஆரம்பித்தான்.

ஒருநாள் அவனைத்தேடி வந்த வாலிபன் ஒருவன் "நான் சொல்லும் இடத்தில் நீ ஐந்து வருடம் வேலை செய்தால், உனக்கு நிறைய செல்வம் கிடைக்கும். சம்மதமா?" என்று கேட்டதும்; ராமநாதனுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் இருந்தது.

ஆயினும், அவன் முழு விவரங்களை அறிய விரும்பியதால், ஆனந்தன் விளக்கிக் கூறினான். ஸ்ரீபுரத்தைச் சேர்ந்த ஆனந்தன் அதே கிராமத்திலிருந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டான். ஆனால், அவளுடைய தகப்பன் அவளை மணக்க விரும்புபவர்களிடம், ஆயிரம் பொன் வரதட்சணை கேட்டான், ஆனந்தனிடம் அத்தனை பணம் இல்லை. அப்போது அந்தக் கிராமத்து வியாபாரியான சரவணன் ஆனந்தனை அழைத்துத் தன் வீட்டில் குறைந்தது ஐந்து வருடம் வேலை செய்ய வேண்டும என்றும், அப்படிச் செய்தால் ஆயிரம பொன் தருவதாகவும் கூறினான். உடனே ஆனந்தனும் அவனிடம் வேலை செய்ய ஒப்புக் கொண்டான். ஆனால், வேலைக்குச் சேர்ந்த சில நாட்களிலேயே விசித்திரமான நோயின் காரணமாக அவன் விகாரமாக மாறினான். இதனால் அவன் விரும்பிய பெண்ணும் அவனை நிராகரித்துவிட்டாள். ஆகையால் ஆனந்தன் சன்னியாசியாக முடிவு செய்தான். அந்த முடிவை சரவணன் ஏற்கவில்லை. இருப்பினும் ஆனந்தன் தான் தீர்த்த யாத்திரை சென்று வருவதாகவும், அதன்பின் தன் பணியைத் தொடர்வதாகவும் உறுதி அளித்துவிட்டுச் சென்றான்.



பிருஹதாரண்யத்தில் ஆனந்தன் பிரகாண்டர் என்ற ரிஷியை சந்தித்தான். அவரிடம் தன்னைப் பற்றிக் கூறி தனக்கு சந்நியாசியாக விருப்பம் என்றும், அவரைத் தனக்கு தீட்சை அளிக்குமா றும் வேண்டினான்.

அதற்கு பிரகாண்டர், "உனகது ஏற்பட்டுள்ள விரக்தி தற்காலிகமானது. அதனால் நான் உனக்கு தனமந்திரம் ஒன்று சொல்லித் தருகிறேன். அதை இடைவிடாமல் ஜெபித்தால் உனக்குப் புதையல் கிடைக்கும்.



புதையல் கிடைத்த பின்னும் அதை அனுபவிக்க ஆசை ஏற்படவில்லை எனில், நீ சந்நியாசியாகத் தகுதியானவன்.

ஆனால், ஒரு வருடத்திற்குள் உன் தவப்பலனை உணர்ச்சி வசப்பட்டு வீணாக்கினால், நீ சந்நியாசி ஆகமுடியாது" என்று கூறி அவனுக்கு தன மந்திரத்தை உபதேசித்தார்.

ஆனந்தன் தனியாக தனக்கென ஓர் ஆசிரமம் அமைத்துக் கொண்டு, இடைவிடாமல் தன மந்திரத்தை ஜெபித்தான்.

சில நாட்களிலேயே, அவனுடைய மனக்கண்ணில் ஒரு அரச மரத்தடியில் உள்ள புதையல் புலனாகியது. ஆனாலும் இறைவனை தியானம் செய்ய ஆரம்பித்தான்.

அப்படியிருக்கையில் ஒரு நாள் அவனைத் தேடி நீலாம்பரி என்ற இளம்பெண் ஆசிரமத்துக்கு வந்தாள்.

ஆனந்தனிடம் அடைக்கலம் கேடட அவள் தன் பிரச்சினையை விளக்கினாள். அவள் ஏழையாக இருந்தாலும், சிறுவயது முதல் செல்வத்திலும், சுகபோகங்களிலும் அபார ஈடுபாடு இருந்தது. அவளை சோமு என்ற வாலிபன் வரதட்சணை ஏதுமின்றி திருமணம் செய்துகொள்ள விரும்பினான்.

அவன் ஏழை என்பதால் அவனை மணம் செய்ய நிராகரித்துவிட்டாள். ஆனால் அவள் தந்தை அதற்கு சம்மதித்துவிட்டார். அதனால் வீட்டை விட்டு ஓடி வந்த அவள், ஆனந்தனிடம் தனக்கு புகலிடம் தருமாறு வேண்டினாள்.

அதற்கு சம்மதித்த ஆனந்தன், "நீலாம்பரி! ஒரு வருடம் வரை புதையலைப் பாதுகாத்தவாறு எனக்கு உதவி செய்து கொண்டு இருந்தால், உனக்கு அந்தப் பணம் கிடைக்க ஏற்பாடு செய்கிறேன்" என்று கூறினான். அவளும் அதற்குச் சம்மதித்தாள்.

ஒருநாள் அவளை மனதார விரும்பிய சோமு அவளைத் தேடி ஆசிரமத்திற்கே வந்து விட்டான். தன்னைத் திருமணம செய்து கொள்ளும்படி மீண்டும் அவளை நச்சரித்தான். அதற்கு அவள், "ஆனந்தனை நீ கொன்று விட்டால். அந்தப் புதையலை நாம் எடுத்துக் கொண்டு திருமணம் புரிந்து மகிழ்ச்சியுடன் இருப்போம்" என்றாள்.....

(தொடரும்)




- 1509 - போர்த்துக்கல்லுக்கும் துருக்கிக்கும் இடையில் இந்தியாவின் தியூ என்ற இடத்தில் கடற்சமர் மூண்டது.
- 1790 - வீரபாண்டிய கட்டபொம்மன் 47 ஆவது பாளையக்காரராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.
- 1812 - கலிபோர்னியாவின் கரையோரங்களில் ஃபோர்ட் றொஸ் என்ற இடத்தில் தோல் வர்த்தக குடியேற்றமொன்றை ரஷ்யா அமைத்தது.
- 1822 - இலங்கையின் ஆளுநராக சேர் எட்வேர்ட் பஜெட் நியமிக்கப்பட்டார்.
- 1848 - மெக்சிக்கோவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் போர் நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டது.
- 1848 - கலிபோர்னியாவில் தங்கம் தேடுவதற்காக சீனர்கள் கப்பலில் சான் பிரான்சிஸ்கோ வந்திறங்கினார்கள்.
- 1880 - முதலாவது மின்சார வீதி விளக்குகள் இந்தியாவில் நிறுவப்பட்டன.
- 1897 - பென்சில்வேனியாவின் தலைநகர் ஹரிஸ்பேர்க் தீயினால் அழிந்தது.
- 1899 - ஆஸ்திரேலியாவின் தலைநகரை சிட்னிக்கும் மெல்பேர்னிற்கும் இடையில் கன்பராவில் அமைப்பதென முதலமைச்சர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.
- 1901 - விக்டோரியா மகாராணியின் இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.
- 1908 - 60 ஆண்டுகளுக்கு ஒரு தடவை இடம்பெறும் இந்துக்களின் சிறப்பு நாளான அருத்தோதயம் நிகழ்வு.
- 1920 - எஸ்தோனியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது.
- 1933 - ஜேர்மனியின் நாடாளுமன்றத்தை ஹிட்லர் கலைத்தார்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஸ்டாலின்கிராட் போரின் பின்னர் கடைசி ஜேர்மனியப் படைகள் சோவியத ஒன்றியத்திடம் சரணடைந்தன. 91,000 பேர் உயிருடன் பிடிக்கப்பட்டனர்.
- 1946 - ஹங்கேரியக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1972 - டப்ளினில் பிரித்தானிய தூதரகம் தேசியவாதிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.
- 1989 - ஒன்பது ஆண்டு கால முற்றுகையின் பின்னர் கடைசி ரஷ்யத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறின.
- 1989 - செய்மதித் தொலைக்காட்சிச் சேவை ஸ்கை தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1522 - லியூஜி ஃபெறாரி, இத்தாலியக் கணித ஆய்வாளர் (இ. 1565)
- 1871 - பா. வே. மாணிக்க நாயக்கர், அறிவியல் தமிழ் வளர்த்த தமிழறிஞர் (இ. 1931)
- 1882 - ஜேம்ஸ் ஜோய்ஸ், ஐரிய எழுத்தாளர் (இ. 1941)

### இறப்புகள்

- 1907 - திமீத்ரி மென்டெலீவ், ரஷ்ய வேதியியலாளர் (பி. 1834)
- 1970 - பேட்ரண்ட் ரசல், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1872)
- 1980 - வில்லியம் ஸ்டெயின், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1911)
- 1987 - அலிஸ்ரர் மக்லீன், ஆங்கில எழுத்தாளர் (பி. 1922)

### சிறப்பு நாள்

- உலக ஈரநில தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...தங்கள் பெருமை அறியாமல் மாயையால் மயங்கி, நான் செய்த அபசாரக் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும். பாசத்தால் கட்டுப்பட்டு நான் செய்த அவமரியாதைகளையும் மன்னித்தருள வேண்டும் என்று முறை யிட்டுக்கொண்டான்.

கருணைக் கடலாகிய சித்த மூர்த்திகள் சந்தோஷம் அடைந்தார். மன்னா! உனக்கு வேண்டிய வரத் தைக் கேள், தருகிறேன் என்றார்.

சித்தரை வணங்கிய பாண்டியன் மன்னர், பெருமானே எல்லாச் செல் வங்களும் இருந்து மக்கட் செல்வம் இல்லாமல் வருந்திக்கொண்டிருக்கி றேன். எளியேனுக்கு நல்ல குமாரன் பிறக்கும்படி அருள் செய்ய வேண்டும் என்று விண்ணப்பித்தான்.


சித்தரும் அப்படியே ஆகட்டும் என்று நல்வரம் தந்தருளினார். பின்னர் யானையின் மேலே தனது கையை வைத்து கடைக்கண்ணால் நோக்கி னார். யானை தனது துதிக்கையை நீட்டி பாண்டியனிடம் பறிந்த முத்து மாலையை அவனிடம் திரும்பக் கொடுத்து.

பாண்டியன் கையேந்தி மாலையை வாங்கினான். வாங்கி நிமிர்வதற்குள் ளாக சித்தர் மறைந்துவிட்டார். யானையும் தனது பழைய நிலையை அடைந்து மீண்டும் கல் யானையாகி விட்டது.

இந்தப் பேரற்புதத்தைக் கண்ட பாண்டியன் திகைத்து நின்றான்.

பாண்டியன் திகைத்து நிற்பது இருக்கட்டும். இவ்வளவு நேரம் சித்த வித்தைகள் நிகழ்த்திய அந்த சித்தர் எங்கே மாயமாய் மறைந்தபோனார். இதுதான் சித்தர் ஜாலமோ?

## மாவூத்து தரிசனம்



மாவூத்து

சதுரகிரி மலையின் அடிவாரத்தி லுள்ள ஊர் மாவூத்து. மதுரையிலிரு ந்து ஸ்ரீவில்லிபுத்தூர் செல்லும் சாலையில் கிருஷ்ணன் கோயிலிலிரு ந்து வத்திராயிருப்பு, தம்பிப்பட்டி வழியாகச் சென்றால் சுமார் 18 கி.மீ தொலைவில் மாவூத்தை அடையலாம். அல்லது வத்திராயிருப்பிலிருந்து தாணிப்பாறை செல்லும் வழியில் தாணிப்பாறையின் நிறுத்தத்திற்கு முன்னுள்ள நிறுத்தத்தில் இறங்கி 10 கி.மீ. தொலைவில் இந்த மாவூத்து கிராமத்தை அடையலாம்.

ஊர் ஏதுமற்ற சாலையில் மாவூத்து மகாலிங்கர் சந்நிதிக்குச் செல்லும் வழி 10 கி.மீ என்ற பெயர்ப்பலகை மட்டுமே நம்மை வரவேற்று நிற்கும். பஸ் நிறுத்தத்தில் இறங்கி வடக்கு நோக்கி பொடிநடை போட வேண்டியதுதான். ஒப்பந்த ஊர்தி மூலம் செல்பவர்கள் இதில் சுமார் 7 அல்லது 8 கி.மீ தூரம் வரை பயணம் செய்யலாம். பின்னர் நடைபாதை பயணம்தான்.

கொங்கண மகா முனிவரின் வன த்தை விட்டுக் கிழக்கே சென்றால் எல்லைக்கல் குட்டமிருக்கிறது. அதி லிருந்து தெற்கே போகிற பாதை வழியே மலை மெத்தாப்பிற்குப் போய் தென் பக்கச் சரிவில் மூன்று நாழிகை தூரம் வந்தால் தபோவனம் என்ற மாவூத்தை அடையலாம் என்று கோரக்கர் இந்த மாவூத்துக்கு வழிகாட்டினாலும் அவர்

**ஆன்மீகம் 21**

சொல்லும் அந்தக் காட்டுப் பாதை யைக் கண்டுபிடித்து மாவூத்தின் வழியே சதுரகிரியை அடைவது சாத்தியமில் லாதது. ஆகவே, மாவூத்துப் பயண த்தை தனியேயும் சதுரகிரி யாத்திரை யைத் தனியேயும் திட்டமிட்டுப் போய் வரவேண்டும்.

ஆகையால் இந்த மாவூத்துப் பயணத்தை சதுரகிரி யாத்திரையின் முதல் தபோவனத் தலமாகத் தரிசித்து விட்டு மலையேற ஆரம்பிப்போம்.

மாவூத்து என்றால் பெரிய ஊற்று என்று பெயர். இந்தச் சதுரகிரி மலைக்கானலில் இருக்கும் ஊற்றுக் களில் இதுதான் பெரிய ஊற்றோ!

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



நடிகை மஞ்சுளா விஜயகுமார்

**33**

ஜி.என்.வேம்ணி செம்மலை வைத்து *பரம பிதா* எடுக்க ஆரம்பித்தார்.

அது ஒரு திருத்தந்தையின் கதை, அக்கதையமைப்பை கேட்டபின் ஒரு திருத்தந்தைக்குரிய சட்டங்கள், சம்பிரதாயங்கள் தெரிந்த பின் நடிக்க விரும்பினார் செம்மல். என்னிடம் அதைப் பற்றித் தெரிந்து வரச்சொன் னார்.

அப்புனித வாழ்வைப் பற்றி முழுமையாகத் தெரிந்து சொல்ல, திருத்தந்தை அருளப்பா அவர்களி டம் போய்க்கேட்டேன்.

அவர்கள் மகிழ்ந்து... "நான் எம்.ஜி.ஆர் அவர்களைப் பார்க்க வேண்டும். அவர் *பரமபிதா*வில் நடிக்கப் போகும் படத்தின் விளம் பரம் பார்த்தேன். அந்த வேடத் திற்குப்பொருத்தமாகவும், அருள் நிறைந்த மூத்த தோற்றத்தில் மற்றவர் மதிக்கும்படியாகவும் இருந் தது" எனச் சொல்லி புத்தகம் ஒன் றையும் கொடுத்து அனுப்பினார்.

கதையில் வரும் பாதிரியாருக்கு ஏற்கனவே ஒரு காதலி உண்டு. இவர் மாதா கோவிலுக்கு திருத் தந்தையாக வந்தபின் அவர் வருகி றாள். இவருக்கு மனச் சலனம் ஏற்படு கிறது. அடக்கி அவளுக்கு உபதேசம் செய்கிறார் என்பது கதையின் கருத்து.

செம்மல் சொன்னார்: "பாதிரி களாவதற்குள்ள வழிமுறைகள், அவர்கள் வரவேண்டிய முறை களைப் படித்த பின் அவர்களை சாதுக்கள் என எண்ணவில்லை. மாவீரர்களாக மதிக்கிறேன்.

அலெக்சாண்டர், நெப்போலி யன், புருஷோத்தமன், அசோகன் ஆகியோர் உலகைப் பகையோடு, போராடி வென்றவர்கள்.

ஆனால், இவர்கள் இரத்தத்தோடு கலந்த உணர்ச்சிப் பகையோடு போராடி வெல்பவர்கள். மனித குல வழிகாட்டி களை மாசுள்ளவர்களாக நடிக்கவும்



எம்.ஜி.ஆருடன் நடிகை மஞ்சுளா விஜயகுமார்

வேண்டாம். நினைக்கவும் வேண்டாம்"

*பரமபிதா* படமுயற்சி அத்துடன் நின்றது.

## குரு குலம்

இசைக்காக எடுக்கப்பட்ட மேடை நாட்டுப் படம் *சவுண்ட் ஆஃப் மியூசிக்* அதன் தழுவலே *சாந்தி நிலையம்*. அதில் குழந்தை நட்சத்திரமாக நடித்தார் மஞ்சுளா. புகைப்பட மேதை ஆர்.என்.நாகராஜராவ், மஞ்சுளாவை செம்மலுக்கு அறிமுகப்படுத்தினர்.

நாடகக் காவலர் ஆர்.எஸ்.மனோ கர் லதாவை செம்மலுக்கு அறிமுகப் படுத்தினார். அவர் பெரியம்மா ஒரு சமூக சேவகி. மாம்பலம் தஞ்சாவூர் சாலையில் இருந்தார். ராஜபரம்பரை யென்றும் சொன்னார்.

## மஞ்சுளா-லதா

இருவருக்கும் ஆற்காடு முதலி தெருவிலிருந்த செம்மலின் அலுவல கத்தில் குருகுலம் நடந் தது. பழம்பெரும் நடி கர் பி.டி.சம்பந்தம் அவர்கள் இருவருக் கும் தமிழ் ஆசிரியராக அமர்த்தப்பட்டார்.

ஏ.கே.சோப்ரா, புலியூர் சரோஜா இருவரும் நடன ஆசிரி யர்களாக அமர்த்தப்பட் டார்கள்.

சலங்கை ஒலியும் தமிழ்க் குரலும் திரும் பத் திரும்பக் கேட்டன. தேடிப் பிடித்தோம். நடிக்க வைத்தோம் என்று இல்லாமல் தொழிலைத் தெரிந்து தேறி பணி யாற்ற வேண்டும் என்பதே செம்ம லின் கொள்கை. முதலில் தகுதி, பிறகு பதவி இதுவே செம்மலின் இலட்சியம்!

*ரிக்‌ஷாக்காரன்* படத்தில் மஞ்சுளா செம்மலுக்கு ஈடு கொடுத்து நடித்தார். *அழகிய தமிழ் மகள்* பாடலுக்காக, சந்திரமண்டல அரங்கு போடப்பட் டிருந்தது. அது மஞ்சுளாவை சந்திர மண்டல உயரத்துக்கே கொண்டு போய்விட்டது.

லதாவுக்கு முதல் படம் நேற்று இன்று நாளை நல்ல பெயர்!

மஞ்சுளாவும் லதாவும் சேர்ந்து செம்மலுடன் பல படங்களில் நடித் தார்கள். அவர்கள் இருவருக்கும் சம பங்கு இருக்கும்படி கதைகளை மாற் றியமைக்கச் சொல்லுவார்.

இருவரும் சேர்ந்து நடித்த படங்களில் *நினைத்ததை முடிப்ப வன்* மறக்க முடியாத திரைக்காவி யமாகத் திகழ்ந்தது.

*உலகம் சுற்றும் வாலிபனுக்* காக கீழ்த்திசை நாடுகளுக்கு போய் வந்த பிறகு, தனிப்பட்ட அழைப்பின் பேரில் சிங்கப்பூர் போனார் செம்மல். அது நாடோடி மன்னனின் வெற்றி விழாவுக்காகப் போக வேண்டிய பயணம். 22 வருடத்துக்குப் பிறகு தான் அப்பயணம் நிறைவேறியது.

கடைசிவரை லதா செம்மலுடன் நடித்தார். *உழைக்கும் கரங்கள், நவரத்தினம், பல்லாண்டு வாழ்க* இவைகளில் தனித்து நடித்தார். கடைசிப்படம்- *மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்.* (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் பிரதான நிலையங்களுக்குள் இராணுவம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

யுத்தத்திற்கு பின்னர் வடக்கில் பிரதான மூலோபாய நிலையங்களுக்குள் மாத்திரம் இராணுவம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இது எமக்கு பாரிய சவாலாகும். இந்த சவால்களுக்கு முகம் கொடுத்து நாட்டின்பாதுகாப்புக்கு உறுதி செய்யும் பொறுப்பு இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சார்ந்ததாகும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள் ளார்

அம்பலாங்கொடை பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை இராணுவத்தின் புலனாய்வு தலைமையகத்தின் திறப்பு விழாவும் உயிர்நீத்த படை வீரர்களுக்கான நினைவுத்தூபி அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்காமலும் புதிய பயங்கரவாத குழுக்கள் உருவாகாமலும் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு பாதுகாப்பு படையினன்ர சார்ந்ததாகும்.

இதில் புலனாய்வுத்துறையினருக்கு முக்கிய பொறுப்பு காணப்படுகிறது.

வடக்கில் குறுகிய காலப்பகுதிக்குள இராணுவத்தினர் பாரிய அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளனர். கண்ணி வெடிகளை அகற்றுதல், இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தல், சரணடைந்த முன்னாள் வடுதலைப்புலிகள் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல் போன்ற பல்வேறு சவால்களுக்கு இராணுவம் முகம் கொடுத்து வந்தது. தொடர்ந்தும் வெவ்வேறு சவால்களுக்கு இராணுவம் முகம் கொடுத்து வருகிறது.

எந்தவொரு நடவடிக்கையை முன்னெடுப்பதாயினும் புலனாய்வுத் தகவல் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

யுத்தத்தின் போது புலனாய்வுத் தகவல்கள் இந்த பாரிய வெற்றியை பெற்றுத்தந்தது.

அதே போன்று யுத்தத்திற்கு பின்னரும் நாட்டின் பாதுகாப்பு மிக முக்கியமானது. அதற்கும் புலனாய்வுத் தகவல் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

எனவே தான் யுத்தம் முடிவுற்றாலும் புலனாய்வு பிரிவுக்கான எண்ணிக்கையை நாங்கள் அதிகரித்தோம.

சகல விதமான சவால்களுக்கும் முகம் கொடுக்கும் வகையிலான பயிற்சிகளையும் வழங்கினோம்.

தற்பொழுது சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டும் பொறுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. என்றாலும் நாட்டின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு தொடர்ந்தும் செயற்பட வேண்டியது புலனாய்வுத் துறையின் பொறுப்பு என்றும் தெரிவித்தார். (அ-2)

## தென்சூடான் செல்வதற்கு மீளவும் பதிவு நடவடிக்கை

தென் சூடானில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலையை அடுத்து இலங்கை பணியாளர்கள் அங்கு செல்வதற்கான பதிவு வழங்கல் இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், மீளவும் அங்கு செல்வதற்கான பதிவுகள் நேற்று முதல் வழங்குவதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தீர்மானித்துள்ளது.

கடந்த மாதமளவில்தென்சூடானில் இடம்பெற்ற மோதல் காரணமாக தென்சூடானுக்கு வேலை வாய்ப்பிற்காகச் செல்லும் இலங்கை பணியாளர்களுக்கு பதிவு வழங்கலை தற்காலிகமாக இடைநிறுத்தவும் பணியாளர்கள் அங்கு பயணிப்பதற்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சமூகநலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தடை விதித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது அங்கே சமாதானமான சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக இலங்கை பணியாளர்கள தென்சூடானுக்கு வேலை வாய்ப்பிற்காக செல்வதற்காக இலங்கை வேலை வாய்ப்பு பணியகத்தினால் வழங்கப்பட்டுவரும் பதிவு வழங்கலை நாளை முதல் வழங்குவதற்கு அமைச்சர் உத்தரவு பிறப்பித்துள்ளார். (அ-2)

# அனல்மின் நிலையத்தை சீன நிறுவனம் ஆராயும்

நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையம் செயலிழந்துள்ள நிலையில், முழுமையான கண்காணிப்புக்கு உட்படுத்த அதன் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள சீன சீமெக் நிறுவனம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

சீமெக் நிறுவனத்தின் தலைவர் ஷேன்சுன் உள்ளிட்ட நிறுவனத்தின உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று அண்மையில் மின்சாரத்துறை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியை சந்தித்தது.

அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தையின் பின்னரே நிறுவன அதிகாரிகள் இணக்கப்பாட்டிற்கு வந்ததாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.சி. பெர்டிணான்டோ தெரிவிததுள்ளார்.

வெளிநாட்டு பொறியியலாளர்களின் ஆதரவும் இதன்போது, பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. மின்சாரத் துறையைச் சார்ந்த நிபுணர்களை இலங்கைக்கு அழைத்து பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் அந்த நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளது.

பல சந்தர்ப்பங்களில் பழுதடைந்த நுரைச்சோலை அனல் மின் நிலையம் சீன சீமெக் நிறுவனத்தின நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தினால் அரசுக்கு ஆதரவளிக்கத் தயார்-ரணில்

இலங்கையில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்துமானால் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க தயார் என்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் தெற்காசியாவுக்கான உதவி இராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால் நேற்று முன்தினம் இரவு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த போதே அவர் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார.

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இது தொடர்பில் நல்ல ஆரம்பங்களை அரசாங்கம் எடுத்தாலும் அதனை தாம் வரவேற்போம்.

பிஷ்வாலுடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க கூறுகையில்,

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அரசாங்கம்நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமானால் அதற்கு ஆதரவளிக்கத் தயார் என்றார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரவுள்ள பிரேரணை குறித்து பிஸ்வால் தம்முடன் கலந்துரையாடியதாகவும் அவர் குறிபபிட்டார். (அ-2)

# தேயிலை உற்பத்தியில் சாதனை; 1.54 பில். அமெ. டொலர் வருவாய்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய வருமானத்தில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கும் தேயிலை உற்பத்தி 2013 ஆம் ஆண்டில் இது வரை பெற்ற மிகக் கூடிய வருமானமாக 1.54 பில்லியன் அமெரிக்க டொலரை எட்டியுள்ளது. எதிர்வரும் காலங்களில் தேயிலை மீள் நடுகையின் மூலம் தேயிலை உற்பத்தியை பலமடங்காக அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பத்திரிகையாளர் மாநாடு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே அமைச்சர மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர்,

2013 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசெம்பர் வரையான காலப் பகுதியில் ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த தேயிலை உற்பத்தி 319.6 மில்லியன் கிலோவாகும். 2012 ஆம் ஆண்டு இது 319.9 மில்லியன் கிலோ வாக இருந்தது. இதேவேளை வருடாந்த தேயிலை உற்பத்தியானது 7 வீதத்தால் அதிகரித்திருக்கிறது.


எமது மொத்த தேயிலை ஏற்றுமதியில் 16 வீதத்தை கொள்வனவு செய்யும் நாடாக ரஷ்யா தொடர்ந்தும் முன்னிலை வகிக்கின்றது.

ஈரான் 12 வீதத்தை கொள்வனவு செய்துள்ளதுடன் துருக்கி 10 வீதத்தை கொள்வனவு செய்து மூன்றாவது இடத்தில் இருந்து வருகின்றது என்றார். (அ-2)

# பாலங்களை புனரமைக்க குவைத் நிதியம் நிதியுதவி

நாட்டில் 25 பாலங்களை அமைப்பதற்கு 3 கோடி 60 இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க குவைத் நிதியம் தீர்மானித்துள்ளது. இந்த விடயம் தொடர்பான ஒப்பந்தம் நேற்று முன்தினம் நிதியமைச்சின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தரவிற்கும் குவைத் நிதியத்தின் பிரதி இயக்குநர் நாயகம் ஹெஷாம் அல் வக்குவாயனுக்கும் இடையே கையெழுத்திடப்பட்டு ள்ளது.

குறித்த நிதி முலம் 7 மாகாணங்களில் பாலங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. முழு திட்டத்திற்கும் சுமார் 550 கோடி ரூபா நிதி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.77 சதவீதமான செலவீனம் குவைத் நிதியத்தினால் வழங்கப்படும்.இலகு முறையிலான கடனிலிருந்து பெறப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மிகுதித் தொகை இலங்கை அரசினால் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. (அ-2)



வலிகாமம் வடக்கு துணை தவிசாளரினால் அளவெட்டி தமிழ் நிலா, அளவெட்டி தாமரை, பன்னாலை தவளைகிரி, அளவெட்டி உதயநிலா ஆகிய தாய்மார் கழகங்களுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்ட போது... (படங்கள்:-உ.சாளின்)

# ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக அரச சார்பற்ற நிறுவனங்கள்

## சிங்கள நாளேடு குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக செயற்பட உள்நாட்டு வெளி நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆயத்தமாகி வருவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தும் நோக்கல் 20இற்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் ஜெனீவா பயணம் செய்ய உள்ளனர்,

பிரான்ஸ், கனடா மற்றும பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்களும் இவ்வாறு ஜெனீவா பயணம் செய்ய உள்ளனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதிக்கு முன்னதாக ஜெனீவா சென்று, மாநாட்டில் பங்கேற்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகளின் ஆதரவினை அமெரிக்காவிற்காக திரட்டுவதே அரச சார்பற்ற நிறுவனங்களின் நோக்கமாகும் என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இலங்கையிலிருந்து செல்லும் ஐந்து அரச சார்பற்ற நிறுவனச் செயற்பாட்டாளர்களின் பயணத்திற்கான செலவுகளை அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனவா அமர்வுநடைபெறவுள்ளது. இதன்பொருட்டு இலங்கையின் உண்மை முகத்தை தெரிந்து கொள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளா நவநீதம்பிள்ளை முதல் அமெரிக்க இராஜ தந்திரிகர்கள் பலர் வருகை தந்து நிலைமைகளை ஆராய்ந்து சென் றுள்ளனர்.

இறுதியாக நேற்று முன்தினமும் அமெரிக்கா இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வாலும் வருகை தந்துள்ளனமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை பேரவையை பயன்படுத்தி இலங்கையை கட்டுப்படுத்த முயற்சி!

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொதிப்பு



**(கொழும்பு) நாட்டினதும் மக்களினதும் சுயாதீனத்தை ஒரு போதும் எவருக்கும் காட்டிக் கொடுக்க முடியாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

மத்துகம மற்றும் அகலவத்தை பிரதேசங்களுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அப்பகுதியில் பல்வேறு அபிவிருத் தித் திட்டங்களை உத்தியோகபூர் வமாக நேற்றுமுன்தினம் ஆரம் பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்தும் ஜனாதிபதி உரையாற்றுகையில்,

எமது தாய்நாட்டை நேசிப்பது போலவே அதனைப் பாதுகாப்பதி லும் சகலரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

படையினர் உயிரைத் தியாகம் செய்து வெற்றி கொண்ட நாட்டை வேறு வழிகளில் அடிமைப்படுத்த சில வெளிநாடுகள் முயல்கின்றன.

நாட்டின் இறைமையையும் சுயாதீனத்தையும் காட்டிக்கொடுக்க எமது மக்கள் ஒருபோதும் தயா ரில்லை எனபதை வெளிநாடுக ளுக்கு ஞாபகப்படுத்துகின்றேன்.

தொலைக்காட்சியில் நாம் பார்த் தது ஒரு பக்கம் பலியான இளை ஞர்கள், படையில் பணிபுரிந்த சிங்கள இளைஞர்கள் அவர்கள் எனினும் இன்னொருபக்கம் வடக் கில் தமிழ் இளைஞர்கள் பலியா கினர். அந்த எண்ணிக்கை எவ் வளவு? யுத்தத்தில் ஒரு பக்கம் மட்டும் இறப்பதில்லையே இரு தரப் பிலும் தினமும் நூற்றுக் கணக் கான இளைஞர்கள் பலியாகினர்.

இந்த இளைஞர்கள் அனை வ்ருமே எமது நாட்டின் சொத்துக் கள். இளைய சொத்துக்களை நாம் இழந்துள்ளோம். இதற்குக் கார ணமான கொடூர யுத்தத்தை நிறுத் துவதற்கான பொறுப்பு எம்முடை யதாயிருந்தது.

நாம் நாட்டை சுதந்திரமாக்கி இருதுண்டாக பிளவுபடவிருந்த நாட்டை ஐக்கியப்படுத்தினோம்.

எனினும் இதற்காக எமக்குக் கிடைத்த பிரதிபலன் தான் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஜெனீவா வில் குண்டு வெடிக்கின்றது.

நாட்டில் இப்போது குண்டு வெடிப்பதில்லை. எனினும் ஆறு மாதத்துக்கு ஒரு முறை ஜெனீ வாவில் மிதி வெடி வெடிக்கிறது.

இதனைக் கண்டு இங்குள்ள சிலரும் அதனை வாய்ப்பாக்கிக் கொண்டு தமக்கான சந்தர்ப்பத்தை எடை போடுகின்றனர். இதைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடிக்கல மென்று எதிர்க் கட்சியினர் கனவு காண்கின்றனர்.

பொருளாதார ரீதியாகவும் மற் றும் வெவ்வேறு வழிகளில் வெவ் வேறு முறைகளில் எம்மை அடி மைப்படுத்த தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு ஐக்கிய நாடுகள் சபையை உபயோகப்படுத்துகின்றனர். மனித வுரிமை பேரவையை வாய்ப்பாக் கிக் கொள்கின்றனர்.

உலகில் யுத்தம் நடைபெற்ற எந்த நாட்டிலும் இந்தளவு விரை வாக இனங்களுக்கிடையில் ஐக்கி யம் ஏற்படுத்தப்பட்டதில்லை. அழிவு களை மீளக் கட்டியெழுப்பியதில்லை. நாமே அதற்கு முன்னுதாரணமான வர்கள்.

யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் 100இற்கு 98 வீதம் மின்சாரம் வழங்கியுள்ளோம். புகையிரதப் பாதைகளை அமைத்துள்ளோம். அனைத்துத் தேர்தல்களையும் சுதந்திரமாக நடத்தியுள்ளோம்.

நாம் சுயாதீனமாகவும் சுதந்திர மாகவும் இத்தகைய நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளோம்.

தேர்தல் நடத்தியது மட்டுமன்றி முன்னாள் புலி உறுப்பினர்களுக் கும் புனர்வாழ்வளித்து 14ஆயிரம் பேரை விடுவித்துள்ளோம். அவர் களை படைகளிலும் பொலிஸ் துறையிலும் கூட இணைத்துக் கொண்டுள்ளோம்.

இத்தனையையும் முறையாக மேற்கொண்டுள்ள போதும் மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக குற்றஞ் சாட்டப்படுகிறது.

30 வருட யுத்தத்தில் இறுதி மூன்று நாட்களில் நடந்தது என்ன என கேள்வியெழுப்பப்படுகிறது. எத்தனை பேர் பலியாகினர். எத்த னை பேர் காயமடைந்தனர். எத் தனை பேர் காணாமற் போயினர் என கேள்வி யெழுப்பப்படுகிறது.

இதே கேள்வியை மற்ற பக்கத் திலும் எழுப்பினால் எவ்வாறிருக் கும்? உலக யுத்தத்தின் போது கடைசி இரு தினத்தில் எத்தனை மனித உயிர்கள் பலியாகின என கேட்க முடியும்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அப்போது அதனைச் செய்தவர்களுக்குத் தண்டனை எதுவும் கிடையாது. அவ்வாறா னால் அந்தப் பக்கத்திலும் கேள்வி எழுப்பப்பட வேண்டும்.

நாம் இந்த நாட்டை நேசிப்பது போலவே இந்த நாட்டைப் பாது காப்பது முக்கியம். பெற்றுக் கொண்ட் சுதந்திரத்தை காட்டிக் கொடுக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது.


எமது மக்கள் அவ்வாறு செயற் பட தயாரில்லை என்பதை நான் சர்வதேசத்துக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

நாட்டுக்காகவும் நாட்டு மக்க ளுக்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு தாய்நாட்டைப் பாது காக்க எப்போதும் செயற்பட வேண்டு மென சகலரையும் கேட்டுக்கொள் கிறேன்.

வரலாற்றில் ஒருபோதுமில்லாத வாறு க. பொ. த. உயர்தரத்தில் புதிதாக தொழில்நுட்ப பாடத்தையும் சேர்த்துக்கொண்டு தேசிய சர்வ தேச தொழில்வாய்ப்புகளுக்கு ஏற்ப எமது பிள்ளைகளை உருவாக்கும் செயற் திட்டங்களை நாமே நடை முறைப்படுத்தியுள்ளோம் என் றார். (அ-2)





யாழ்.பல்கலைக்கழகத்தின் கணக்கியல் துறைசார்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பாலசுந்தரம் நிமல்தாஷனுக்கு இந்திய புதுச்சேரி மாநில அபிவிருத்தி விஞ்ஞான கல்வியாளர் அமைப்பினால் வழங்கப்பட்ட சிறந்த விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சியாளர் விருது கிடைத்தமைக்கான பாராட்டு விழா அண்மையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் ஆராச்சியாளர் விருது பெற்ற கலாநிதி பா.நிமலதாஷனுக்கு வடக்குமாகாண கல்வி அமைச்சர் விருது வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்.)

# யுத்தக் குற்றம் தொடர்பில் சுயாதீன விசாரணை வேண்டும்

## பிரிட்டன் எதிர்க்கட்சி வலியுறுத்து

இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசா ரணைகள் அவசியமானது என பிரித்தானிய தொழிற்கட்சி அறிவித் துள்ளது.

மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றச் செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டுமென பிரித்தானி யாவின் எதிர்க்கட்சியான தொழிற் கட்சி கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதனை வலியு றுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென தொழிற்கட்சித் தலைவர் ஈட் மில்லி பான்ட் தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணைகளை வலி யுறுத்தி தீர்மானம் நிறைவேற்று மாறு பிரித்தானிய அரசாங்கத்தை வலியுறுத்தவுள்ளதாகக் குறிப்பிட் டுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் நம்பகமான ஓர் பொறிமுறைமையை இலங்கை அர சாங்கம் உருவாக்கத் தவறினால் சர்வதேச விசாரணைகளை வலியு றுத்த வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய தமிழர் பேரவை, உலகத் தமிழர்பேரவை மற்றும் தமிழ் ஸ் போ லேபர் போன்ற பிரித் தானிய வாழ் தமிழ் அமைப்புக்களைச் சந்தித்த போது அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

இராணுவ மயமாக்கல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

குற்றச் செயல்களுக்கு தண் டனை விதித்தல் மற்றும் நல்லிணக் கத்தை ஏற்படுத்தல் ஆகிய விவகா ரங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென இலங்கை அரசாங் கதை வலியுறுத்தமாறு பிரித்தானிய அரசாங்கத்திடம் கோருவதாக மில் லிபான்ட் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஐ.நாவை நோக்கி தொடரும் நீதிக்கான நடை பயணம்

நெதர்லாண்ட் நாட்டில் டென் ஹாக் நகரில் கடந்த 29ஆம் திகதி அனைத்துலக குற்றவியல் நீதி மன்றத்துக்கு முன்பாக ஆரம்ப மான ஐ.நா. நோக்கிய நீதிக்கான நடை பயணமானது நேற்றுமுன் தினம் காலை மூன்றாவது நாளாக 35கிலோ மீற்றர் தூரத்தை கடந்து பிரேடா நகரத்தை சென்றடைந்தது.


நடைபயணத்தில் ஈடுப்பட்டுள்ள உறவுகள் நெதர்லாண்ட் நாட்டில் வாழ்கின்ற தமிழ் உறவுகளை சந் தித்து தமிழீழ விடுதலைப் போராட் டம் குறித்து கலந்துரையாடி னார்கள். இச்சந்திப்பில் தமிழ் இளையோர்க ளும் கலந்து கொண்டார்கள்.

நெதர்லாந்து, பிரித்தானியா ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் நாடு களைச் சேர்ந்தோர் கடும் குளிர் காற்று எனக் காலநிலை சீராக இல்லாத சூழ்நிலையிலும் மேற் கொண்டு வருகின்றனர்.

தமிழின அழிப்பை பல்லின மக்களுக்கு எடுத்துரைக்கும் முக மாக பல்வேறு மொழிகளில் துண் டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டு வரு கின்றன. நான்காவது நாளாக ஆரம்பமாகவிருக்கின்ற நடை பயண மானது மதியம் 12 மணியளவில் பெல்ஜீயம் நாட்டின் எல்லையை வந்தடையவுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா பொறிக்குள் இந்தியாவையும் சிக்க வைக்க முனையும் இலங்கை...!



வன்னியில் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு ஒப்பான படுகொலைகள் குறித்து, சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம், வடக்கு மாகாணசபையில் கடந்த திங்கட்கிழமை ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 25 ஆவது அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில்தான் வடக்கு மாகாணசபையில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா மூன்றாவது தீர்மானத்தையும் கொண்டு வரும் முனைப்பில் ஈடுபட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் தீர்மானம் கொண்டுவரப்படுவது உறுதி என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இத்தகைய சூழலில், அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை வலுப்படுத்தும் ஒரு முயற்சியாகவே, வடக்கு மாகாணசபையின் தீர்மானமும் அமைந்துள்ளது.

வடக்கு மாகாணசபையில் ஆளும் கட்சியாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, வரும் ஜெனிவா கூட்டத்தொடர் குறித்து இரண்டு கவலைகள் இருக்கின்றன. முதலாவது கவலை, அமெரிக்காவினது தீர்மானம் கடுமையானதாக- இலங்கை அரசுக்கு கடிவாளம் போடத்தக்கதொன்றாக இருக்க வேண்டும் என்பது.

இரண்டாவது அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்துக்கு ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பெரும்பான்மையான உறுப்பு நாடுகள் ஆதரவளிக்க வேண்டும் என்பது.

கடந்த ஆண்டுகூட அமெரிக்கா, ஆரம்பத்தில் சமர்ப்பித்த தீர்மான வரைவு கடைசி நேரத்தில் இந்தியாவின் தலையீட்டினால் நீர்த்துப் போகச் செய்யப்பட்டது.

அதுபோன்றில்லாமல், இந்தமுறை தீர்மானம் கடுமையானதாக இருக்க வேண்டும் என்பதே- அதாவது, போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை கோரும் தீர்மானமாக அது அமைய வேண்டும் என்பதே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பு.

அடுத்து அமெரிக்கா கடுமையான தீர்மானத்தை முன்வைப்பதால் மட்டும் பலனில்லை. அதற்கு இந்தியா உள்ளிட்ட பெரும்பாலான நாடுகளினதும் ஆதரவும் தேவை.

சர்வதேச விசாரணை கோரும் தீர்மானத்தை அமெரிக்கா முன்வைத்தால் பல நாடுகளின் ஆதரவை இழக்க நேரிடலாம் என்பது அமெரிக்காவினதும் கவலை மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் உள்ள கவலைதான்.

வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், வடக்கிலுள்ள தமிழ் மக்களின் ஒட்டுமொத்த கருத்தாகவே பார்க்கப்படும் என்பதால் இது அமெரிக்காவுக்கும் சரி, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கும் சரி அழுத்தம் கொடுக்கும் ஒன்றாகவே இருக்கும்.

இந்தக் கட்டத்தில்தான், இம்முறை ஜெனிவா தீர்மானத்துக்கு ஆதரவு திரட்டுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் களத்தில் இறங்கத் தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே, 2012 ஆம் ஆண்டு முதன் முறை அமெரிக்க தீர்மானம் கொண்டு வந்தபோதே, அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு திரட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவா செல்ல வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

ஆனால், அப்போதைய உள்நாட்டு அரசியல் சூழல் சாதகமாக இல்லாததால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவா செல்லவில்லை. பின்னர், கடந்த ஆண்டும் அதேபோன்ற கோரிக்கையும் எதிர்பார்ப்பும் எழுந்தது.

ஆனாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகாரபூர்வமாக ஜெனிவா கூட்டத் தொடரில் பங்கேற்கவில்லை.

அமெரிக்கா கொண்டுவரும் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கக் கோரி, உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடிதங்களை அனுப்பியது.

இம்முறை ஜெனிவா கூட்டத் தொடருக்கு கூட்டமைப்பு செல்ல வேண்டும் என்ற அழுத்தங்கள், கோரிக்கைகள் உருவாக முன்னரே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜெனிவாவில் பிரசாரத்தில் ஈடுபடுவது குறித்து அறிவித்துள்ளார்.

அதாவது, வடக்கு மாகாணசபைத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அளிக்கப்பட்டுள்ள மக்கள் ஆணை என்ற கவசத்தையும் பலத்தையும் வைத்துக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவா களத்தில் குதிக்கப் போகிறது.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யார், யார் ஜெனிவா கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர் என்று உறுதியாகவில்லை. இப்போதைக்கு அனந்தி சசிதரன் ஜெனிவா செல்வது மட்டும் உறுதியாகியுள்ளது.

இந்தச் சூழலில், வடக்கு மாகாணசபை நிறைவேற்றிய, சர்வதேச விசாரணை கோரும் தீர்மானத்தை தேவையற்றதொன்று என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்குப் போதுமான சட்டங்கள் உள்நாட்டிலேயே இருக்கின்றபோது எதற்காக சர்வதேச விசாரணை என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது கோரிக்கை சர்வதேச விசாரணை பற்றியதாக இருந்தாலும் அமெரிக்கா இன்னமும் தமது தீர்மானம் சர்வதேச விசாரணைக் கோரும் ஒன்றாகவே இருக்கும் என்று உறுதியாக கூறவில்லை. அமெரிக்காவினால் மட்டும் இதனை தீர்மானிக்க முடியாது. தீர்மான வரைவு, உறுப்பு நாடுகளின் மத்தியில், உலாவவிடப்பட்டு முன்மொழியப்படும் திருத்தங்கள் செய்யப்பட்டு, இறுதி வரைவு தயாரிக்கப்பட்டு சபையில் சமர்ப்பிக்கப்படும். இந்தநிலையில், சர்வதேச விசாரணையை கோரும் தீர்மானத்தை அமெரிக்கா முன்வைத்தாலும்கூட, அதனை பெரும்பான்மையான உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொள்ளும்நிலை இருந்தால்தான், அது சாத்தியமாகும்.

சர்வதேச விசாரணையைக் கோரும் தீர்மானத்தை முன்வைப்பது குறித்து அமெரிக்கா இன்னமும் முடிபு செய்யாத நிலையில், இலங்கை அரசாங்கமோ, அமெரிக்கத் தீர்மானம் சர்வதேச விசாரணை கோரும் ஒன்றாக இருக்கலாம் என்பதை மைப்படுத்தியே கருத்துக்களை வெளியிட்டு வருகிறது.

அத்தகைய விசாரணையால், நாட்டில் குழப்பங்கள் ஏற்படும் என்றும், இராணுவத்தினர் மத்தியில் ஒழுக்கம் குலையலாம் என்றும் வோசிங்டனில் வைத்து ஒரு மிரட்டல் விடுத்திருக்கிறார் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க.

அதுமட்டுமன்றி, சர்வதேச விசாரணை நடத்துவதானால், 1980 இல் இருந்து நடந்த சம்பவங்கள் குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்றும், அத்தகைய விசாரணை வளைத்துக்குள் இலங்கைப் படையினர் மட்டுமன்றி முன்னாள் போராளிகளும், இந்திய அமைதிப் படையினரும் கூட அகப்படுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

சர்வதேச விசாரணையைக் கோருவதைப் பலவீனப்படுத்தும் உத்தியை இப்போது இலங்கை அரசாங்கம் கையாளத் தொடங்கியுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்துவதன் மூலம் புலம்பெயர் தமிழர்களின் அழுத்தங்களைக் குறைக்க முனைகிறது அரசாங்கம்.

அதுபோலவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இருந்த தொடர்பை வைத்து மிரட்டும் முயற்சிகளும் நடக்கின்றன.

மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரனை புனர்வாழ்வுக்கு அனுப்பவுள்ளதாகவும் மிரட்டல்கள் வெளியாகின.

இவையெல்லாம் தமிழர் தரப்பில் இருந்து சர்வதேச விசாரணை அழுத்தங்களை குறைப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்.

அதுபோலவே இந்திய அமைதிப் படையினரின் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்தும் விசாரிக்க நேரிடும் என்று மிரட்டுவதன் மூலம் இந்தியாவின் ஆதரவையும் இழக்கச் செய்யும் முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளது.

இத்தகைய விசாரணை ஒன்றுக்கு முகம் கொடுப்பதற்கு இந்தியா விரும்பாது. ஏனெனில் அது இந்தியாவினது கௌரவத்தைப் பாதிக்கும்.

இதனை அரசாங்கம் புரிந்து வைத்துக்கொண்டுதான், சர்வதேச விசாரணை வந்தால், இந்தியாவுக்கும் ஆபத்து இருக்கிறது என்று அரசாங்கம் மிரட்டத் தொடங்கியுள்ளது.

சர்வதேச விசாரணை ஒன்றையே அமெரிக்கா வலியுறுத்தும் என்ற கோணத்திலேயே அரசாங்கம் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது.

ஆனால், அமெரிக்கா கோருவது போன்று சுதந்திரமானதொரு விசாரணைப் பொறிமுறைக்கு இன்னமும் இணங்க அரசாங்கம் தயாராக இல்லை.

இருந்தாலும், இலங்கை அரசின் சுதந்திரமான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை என்பது எந்தளவுக்கு நம்பகமானதாக இருக்கும் என்ற கேள்வி சர்வதேச சமூகத்திடம் உள்ளது.

உள்நாட்டு விசாரணைப்பொறிமுறையை மேற்குலகம் வலியுறுத்தினாலும் அத்தகைய விசாரணை நம்பகமானதாக இருக்கும் என்ற நம்பிக்கை அவர்களிடத்தில் இல்லை.

ஏனென்றால், அத்தகைய நம்பிக்கையை உருவாக்கும் வகையில் இலங்கை நடந்துகொண்டிருக்கவில்லை.

போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிக்க ஓர் இராணுவ விசாரணை நீதிமன்றம் நியமிக்கப்பட்டது.

பொதுமக்களை இலக்கு வைத்து படையினர் தாக்குதல் நடத்தவில்லை என்ற அந்த நீதிமன்றம் இறுதியான முடிபை அறிவித்தது.

அதனை உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

அந்த விசாரணை அறிக்கை நம்பகமானதாக இருந்திருந்தால் அமெரிக்கத் தூதரகம் தனது டுவிட்டர் பக்கத்தில் 2009 ஜனவரியில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் படையினரின் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்ட இடம் என்று இரணைப்பாலை சென்.அந்தனிஸ் மைதானத்தை அடையாளப்படுத்தியிருக்க முடியாது.

இரண்டாவது, கடந்த ஆண்டு வெலிக்கடை சிறையில் நடந்த கலவரத்தின் போது, 27 கைதிகள் கொல்லப்பட்டது குறித்த விசாரணை அறிக்கையும் சர்ச்சைக்குரியதொன்றாவே கருதப்படுகிறது.

இது இன்னமும் வெளியிடப்படாத போதிலும் கைதிகள் தமக்குத் தாமே சுட்டுக்கொண்டு இறந்ததாகவே விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

தப்பியோடிய கைதிகள், நடுவீதியில் வைத்து இராணுவத்தினரால் சரமாரியாக சுட்டுக்கொல்லும் காட்சிகள் ஊடகங்களால் வெளிப்படுத்தப்பட்டன.

ஆனாலும், அதையெல்லாம் அனுபவமில்லாத கைதிகள் துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டுக் கொண்டதால் ஏற்பட்ட மரணங்கள் என்று விசாரணை அறிக்கை கூறியுள்ளதே, உள்நாட்டு விசாரணை ஒன்றின் நம்பகத்தன்மை எத்தகையதாக இருக்கும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

சர்வதேச விசாரணைக்கோரிக்கையை வலுவிழக்கச் செய்வதற்குப் பதிலாக அதை வலுப்படுத்துவதிலேயே இதுவரை கவனம் செலுத்திய அரசாங்கம், இப்போது அந்தப் பொறியில் எல்லோரும் மாட்டிக்கொள்ள நேரிடும் என்று கூறி தப்பிக்க முனைகிறது.

இது எந்தளவுக்கு அரசாங்கத்தைக் காப்பாற்றும் என்பது, ஜெனிவாவில்தான் தீர்மானிக்கப்படும்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதி பெறாதவர்களுக்கு

# ஓர் அரிய வாய்ப்பு பிசப் சவுந்தரம் கம்பஸ்

அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்கவில்லை என்ற கவலையா? - வேலை செய்து கொண்டே கல்வி கற்க வேண்டுமென்ற விருப்பமா? - வீட்டில் இருந்து கொண்டே தொலை தூர கல்விமுறை வழியாக பட்டப்படிப்பினை மேற்கொள்ள எண்ணமா? இதோ அனைத்துக் கேள்விகளுக்கும் ஒரே பதில் பிசப் சவுந்தரம் கம்பஸ்தான்.

உடன் விரையுங்கள். யாழ்ப்பாணம் இலக்கம் 891, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிசப் சவுந்தரம் கம்பசை நோக்கி அல்லது தொடர்பு கொள்ளுங்கள் தொலைபேசி: 021 222 6085, 0777 165147, 021 3219407

2001 ஆம் ஆண்டு முதல் ஊடகக்கல்வியையும் ஊடக தமிழ்ப்புத்தகங்களையும் வழங்கி ஊடகப் பணியாற்றி வந்த பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் 2012 ஆம் ஆண்டு முதல் பிசப் சவுந்தரம் கம்பஸ் என்ற பெயரில் அனைத்துப் பாடங்களுக்குமான இலங்கைப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டக் கல்வியை வழங்கத் தொடங்கியுள்ளது.

2012 ஆம் ஆண்டு பிசப் சவுந்தரம் கம்பஸ் இணைப்பாளர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் மற்றும் பிசப் சவுந்தரம் கம்பசின் இலங்கை முழுவதிற்குமான இணைப்பாளர் எம்.றோய் ஆகியோர் பாரதியார் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் ஜேம்ஸ் பிச்சை, இந்தியா முழுவதிற்குமான இணைப்பாளர் டாக்டர் வெங்கடாச்சலம், தொலைக கல்வி இயக்குநர் டாக்டர் கோவிந்தராஜ் மற்றும் பேரவை உறுப்பினர் டாக்டர் லோகநாதன் ஆகியோருடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் வழியாக மேற்படி வசதி செய்யப்பட்டுள்ளது.

**பிசப் சவுந்தரம் கம்பஸ் மூலம் இலங்கையில் அனைத்து துறைகளிலும் வீட்டிலிருந்தவாறே பட்டம் பெறலாம்--உடன் விரையுங்கள்**

இன்று பிசப் சவுந்தரம் கம்பஸானது தனக்குக்கீழ் (1) பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் (2) இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க ரீ.சி.என்.எல் ரீ.வி மற்றும் (3) இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக் ரீ.சி.என்.எல் இணையத்தளம் என்பவற்றோடு (4) மரியாம்பிள்ளை மீடியா வெளியீட்டகம் என்பவற்றை கொண்ட ஓர் அன்புப் பணி நிறுவனமாக செயற்படுகிறது.

இந்தியா கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக கலைமாணி - முதுமாணி

பட்டக்கல்வியையும் பி.பி.எ - எம்.பி.ஏ போன்ற தொழில்சார் பட்டக் கல்வியையும் சான்றிதழ் மற்றும் டிப்ளோமாக் கல்வியையும் இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் எவரும் கற்கக் கூடிய அரிய சந்தர்ப்பத்தை இப்போது பிசப் சவுந்தரம் கம்பஸ் வழங்குகிறது.

அத்துடன் பிசப் சவுந்தரம் கம்பஸ் கிளிநொச்சி - முல்லைத்தீவு - வவுனியா - மன்னார் - கொழும்பு - கண்டி - கற்றன் - பதுளை - திருகோணலை - மட்டக்களப்பு - புத்தளம் - சிலாபம் போன்ற இடங்களில் கல்வி மையங்களை அமைத்து பட்டக்கல்விக்கான பதிவுகளை மேற்கொள்ளவும் பரீட்சை எழுதவும் வசதிசெய்யவுள்ளது.

ஜி.சீ.இ. சாதாரண தரத்தை கற்றவர்கள் சான்றிதழ்க் கல்வியையும் உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்கள் பட்டப்படிப்பினையும் பட்டப்படிப்பினை மேற்கொண்டவர்கள் பட்டப்பின் படிப்பினையும் பிசப் சவுந்தரம் கம்பஸில் மேற்கொள்ள முடியும்.

பிசப் சவுந்தரம் கம்பஸானது ஊடகக்கல்வியில் அன்று முதல் இன்று வரை விசேட கவனம் செலுத்தி வருவது குறிப்பிடப்பட வேண்டிய விசேட விடயமாகும். இங்கு ஊடக சான்றிதழ்க் கல்வியையும் ஊடக பட்டப்படிப்பினையும் ஊடக பட்டப்பின் படிப்பினையும் மேற்கொள்ள முடியும் என்பது விசேட அம்சமாகும்.

இந்த தகுதியினை இலங்கையில் பெற்றிருக்கும் ஒரே நிறுவனம் பிசப் சவுந்தரம் கம்பஸாகும்.

பிசப் சவுந்தரம் கம்பஸ் பாரதியார் பல்கலைக்கழகத்தில் மேற்குறிப்பிட்ட ஊடகக் கற்கை நெறிக்குத் தேவையான அனைத்து வகுப்புக்களும் பயிற்றப்பட்ட தகுதி வாய்ந்த ஊடகத்துறையில் முழுமையாக ஈடுபடும் பத்திரிகையாளர்கள் ஊடகக்கற்கையில் நேரடியாக ஈடுபடும் ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக் கழக ஊடக விரிவுரையாளர்களினால் வழங்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடப்படவேண்டிய மிக முக்கிய விடயமாகும்.

ஊடகப்பட்ட முதலாண்டுத் தேர்வில் கடந்த வருடம் எட்டுப் பேர் தோற்றியிருந்தனர்.

இந்த வருடம் மே மாதம் பத்தாம் திகதி இரண்டாம் ஆண்டுத் தேர்வை இவர்கள் எழுதவுள்ளனர். மொத்தமாக 27 மாணவர்கள் ஊடகக் கற்கை கலைமாணி மற்றும் முதுமாணி பட்டக்கல்விக்கு மட்டும் பதிந்துள்ளனர் என்பது பிசப் சவுந்தரம் கம்பஸில் மாணவர்கள் பெற்றுள்ள நன்மதிப்பும் பெருநம்பிக்கையும் தெளிவாகுகிறது.

விளம்பர மற்றும் வியாபார நோக்கின்றி செயற்படும் பிசப் சவுந்தரம் கம்பஸில் கற்கும் மாணவர்களின் நலன் கருதி வங்கிக் கடன் பெறும் வசதியும் பிசப் தீயோகு புலமைப்பரிசில் பெறும் வசதி பற்றியும் செயற்பாடுகள் நடைபெற்று வருகிறது என்பது வரவேற்கத்தக்க செய்தியாகும்.

இத்திட்டம் சரிவரும் பட்சத்தில் கற்க விரும்பும் மாணவர்கள் பெரும்பயன் பெறமுடியும். இத் திட்டம் வெற்றி பெற்று மாணவர் படித்துப் பயன் பெற்று வாழ்க்கையில் முன்னேற வசதி படைத்த உதவி நோக்கு கொண்ட அன்பு நெஞ்சங்கள் பிசப் சவுந்தரம் கம்பஸிற்கு உதவ வேண்டும் என்பதே பல மாணவர்களதும் நலன் விரும்பிகளதும் அன்பு வேண்டு கோளாகும்.

பிசப் சவுந்தரம் கம்பஸ் பாரதி




யார் பல்கலைக்கழக ஊடக இரண்டாம் வருடமாணவன் ஜெ.ஜெகன் தனது ஊடக கல்வி பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் இப் பல்கலைக் கழகத்தில் ஊடகத்துறை பாடத்தினைக் கற்று வருகின்றேன்.

ஊடகத்துறையானது இலங்கையில் தற்பொழுது முக்கியம் வாய்ந்த துறையாக திகழ்கிறது. பல்கலைக் கழகங்களிலும் ஊடகத்துறையானது அறிமுகம் செய்யப்பட்டு அதிகமான மாணவர்கள் விரும்பிக்கற்று வருகின்றனர். அத்துடன் இலங்கையில் அரச பாடசாலைகளிலும் இவ் ஊடகத்துறையானது அறிமுகமசெய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது வடமாகாணத்தில் சில பாடசாலைகளில் இப் பாடம் அறிமுகம் செய்யப்பட்டு கணிசமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். பல்கலைக் கழகங்களில் இப் பாடத்தினைப் பட்டப்படிப்பாகத் தெரிவு செய்து வெளியேறும் பட்டதாரிகள் ஊடக நிறுவனங்களில் பணிநியமனம் பெறுவதோடு பாடசாலைகளிலும் ஆசிரியர்களாகவும் வேறு நியமனங்களும் பெறத்தகுதி வாய்ந்தவர்களாகவுமுள்ளனர்.

படித்து முடித்தவுடன் உடனடியாக வேலை வாய்பினைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதால் நான் இக்கல்வியை கற்று வருகிறேன் என்றார்.

**எல்லோரும் பட்டதாரிகள் ஆக--என்ற விருது வாக்குடன் பிசப் சவுந்தரம் கம்பஸ் செயற்படுகிறது.**

இலங்கையில் உயர்தர பரீட்சை எழுதுகின்ற மாணவர்களில் ஏழு வீதமான மாணவர்களே பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகின்றனர். மிகுதி தொண்ணூற்று மூன்று வீதமான மாணவர்கள் இரண்டாம் தடவை உயர்தரம் எழுதுவோரும் வெளிவாரிப்பட்டப் படிப்பினைத் தெரிவு செய்வோரும் தொழில் துறையினைத் நாடிச் செல்வோருமாகவுள்ளனர் எனப் புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

இலங்கையில் போதுமான பல்கலைக்கழகங்கள் இல்லாமையினால் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றும் பல்கலைக்கழக அனுமதி பெறமுடியாமல் பலர் உள்ளனர்.

தனியார் பல்கலைக்கழகக் கல்வியானது பெரிதும் வளராத நிலையில் இம்மாணவர்கள் பல்கலைக்கழக கல்வியைப் பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

குறிப்பாக ஊடகக் கல்வியை பெற விரும்புவோருக்கு எந்தவிதமான உதவியும் பல்கலைக்கல்வியும் அற்ற நிலையில் எனது தனிப்பட்ட விருப்பினாலும் முயற்சியாலும் ஆங்கில அறிவினாலும் ஊடகக்கல்வியைக் கற்று பட்டம் பெற்று இன்று பல்கலைக்கழக ஊடக விரிவுரையாளராக உயரும் அளவிற்கு வளர்ந்துள்ளேன்.

இத் துறையைக் கற்க விரும்புவோருக்குத்துணை செய்யும்நோக்குடனேயே 11 ஊடகவியற் புத்தகங்களைத் தமிழில் எழுதியுள்ளேன்

இவற்றை நிவர்த்தி செய்யும் நோக்குடனேயே **எல்லோரும் பட்டதாரிகள்** ஆக என்ற விருது வாக்குடன் பிசப் சவுந்தரம் கம்பஸை உருவாக்கும் எண்ணத்தைப பெற்றோம் என பிசப் சவுந்தரம் கம்பஸ் இணைப்பாளர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தெரிவித்தார்.

பிசப் சவுந்தரம் கம்பஸ் மூலம் பி.ஏ - பி.எஸ்.சி போன்ற பட்டக்கல்வியையும் எம்.ஏ எம். எ.எஸ்.சி போன்ற பட்டபின் கல்வியையும் பி.பி.எ - எம்.பி.ஏ போன்ற தொழில்சார் பட்டக் கல்வியையும் சான்றிதழ் மற்றும் டிப்ளோமாக் கல்வி பற்றிய மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் பிசப் சவுந்தரம் கம்பஸ் இலக்கம் 891, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவுகள்வருடம்முழுவதும்மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் ஊடக பட்டக்கல்வியையோ அல்லது வேறு எந்த துறையிலான பட்ட மற்றும் பட்ட பின் கல்வியையோ மேற்கொள்ள விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி: 021 222 6085, 0777165147, 021 3219407 இலங்கை முழுவதிற்குமான இணைப்பாளர் எம். றோய் - 077 9914260, 075 7573629

தொலைதூரக்கல்வி மூலமான மேற்படி பல்கலைக்கழகக் கல்விக்கான பாடக்குறிப்புக்கள் வழங்கப்பட்டு ஆசிரியர்களினால் சில வழிகாட்டல் வகுப்புக்களும் வழங்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. உழைததுக்கொண்டே கல்வி கற்க விரும்புவோருக்கு அல்லது வீட்டிலிருந்தவாறே கல்வி கற்க விரும்புவோருக்கு இத்திட்டம் பெரும் பயன் தரும்.

மே மற்றும் டிசெம்பர் மாதங்களில் பரீட்சைகள் பிசப் சவுந்தரம் கம்பஸில் நடத்தப்படுகின்றன. பரீட்சைகள் காலதாமதமின்றி நடைபெற்று அதற்கான பெறுபேறுகளும் உடனடியாக குறுகிய காலத்தில் வெளியாகுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பட்டப் படிப்பு பிசப் சவுந்தரம் கம்பஸில் மூன்று வருட காலத்துக்குள் முடிவடைவதோடு பட்டப் பின் படிப்பு இரண்டு ஆண்டுகளிலும் டிப்ளோமா பட்டம் ஒரு வருட காலத்திலும் சான்றிதழ் கல்வியை ஆறு மாத காலத்திலும் முடிவடைகிறது.

2015 ஆம் ஆண்டில் தனது முதலாவது பட்டமளிப்பு விழாவினை பாரதியார் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் ஜேம்ஸ் பிச்சையின் தலைமையில் நடத்த பிசப் சவுந்தரம் கம்பஸ் பாரதியார் பல்கலைக் கழகமானது தயாராகி வருகிறது எனது மகிழ்வான ஒரு தகவலாகும்.

**அ.றொக்சன்**

# வடமாகாண சபையின் தீர்மானம் இலங்கைக்கு ஆபத்தான குறியீடு

## இராஜதந்திரி தயான் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் இறுதிப்போரின் யுத்த மீறல்கள் குறித்து அனைத்துலக விசாரணை கோரும் இலங்கையின் வடமாகாண சபைத் தீர்மானம், இலங்கை அரசுக்கு எதிரான ஆபத்தான குறியீடு என தயான் ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு மீதான அனைத்துலகத்தின் அழுத்தங்களில் இருந்து சிங்கள தேசத்தினை காப்பாற்றுவதற்கு பரிந்துரைகளையும், கருத்துக்களையும் இலங்கை அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக வழங்கி வருகின்ற தயான் ஜெயதிலக, அனைத்துலக விசாரணை வேண்டுமென்ற தீர்மானத்தின் மூலம், வட மாகாண சபை உறுப்பினர்கள் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு துரோகம் இழைத்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

அனைத்துலக விசாரணை தொடர்பில் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகின்ற புலம்பெயர் தமிழர் அமைப்புக்களில் குறிப்பாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினை கோடிட்டுக்காட்டி இணையத்தளம் ஒன்றில் வெளிவந்துள்ள வட மாகாணசபை தீர்மானம் தொடர்பிலான செய்தி இலங்கை, அரசாங்கத்துக்கு எதிரான முக்கியமான முனனகர்வு என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் யுத்தக் குற்றத்தில் ஈடுபடவில்லை என்றால், எதற்காக அனைத்துலக விசாரணை ஒன்றை மேற்கொள்ள தயங்க வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் எழுப்பியிருந்த கேள்வி யினைசுட்டிக்காட்டியுள்ள தயான் ஜெயதிலக, தமிழர் தரப்பின் இந்த முன்னகர்வு இலங்கை அரசுக்கு எதிரான ஆபத்தான குறியீடு எனத் தெரிவித்துள்ளார். (அ-2)

## கரணவாய் தெற்கில் பார்த்தீனிய செடி

கரணவாய் தெற்கு இந்து மயானத்தை அண்டிய பகுதிகளில் பார்த்தீனியச் செடியின் பரம்பல் அதிகரித்துள்ளதால் உடன் நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த மயானம் அமைந்துள்ள பகுதிகளில் விவசாய நிலங்கள் காணப்படுகின்றன. இந்நிலையில் இச்செடியை அழிக்காமல் விடும் பட்சத்தில் விவசாயம் பாதிப்படைந்து விடுமென விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்தோடு கரணவாய் தெற்கில் உள்ள சில வீதிகளின் வடிகான்களை அண்டிய இடங்களிலும் இச் செடி காணப்படுகின்றது.

எனவே கரவெட்டி பிரதேச செயலகமோ அல்லது பிரதேச சபையோ குறித்த இடத்தில் பரவியுள்ள இச் செடியை அழிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-60)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இரண்டாயிரம் தொழுநோயாளர்கள் வருடாந்தம் இனம் காணப்படுகின்றனர்

## சுகாதார கல்வி பணியகம் தகவல்

கொழும்பு ,மொரட்டுவை உள்ளிட்ட மேல் மாகாணத்தைச் சேர்ந்த பகுதிகளிலேயே தொழுநோயாளர்கள் அதிகளவில் காணப் படுவதுடன், மிகக் குறுகிய காலத்திலேயே இவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாகவும் சுகாதாரக் கல்விப் பணியகம் தெரிவித்துள்ளது.

வருடாந்தம் ஒரு இலட்சத்து 82 ஆயிரம் தொழுநோயாளர்கள் உலகில் இனங்காணப் படுகின்றனர்.

இலங்கையில் ஆண்டு தோறும் புதிதாக இனங்காணப்படும் 2ஆயிரம் பேரில் ஆகக் கூடுதலாக 300 பேர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என சுகாதார சேவைகளுக் கான கொழும்பு பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர்.வி.டி.எஸ்.கே.சிறிவர்த்தன தெரிவித் துள்ளார்.

இதன்படி மொரட்டுவை பிரதேசத்திலேயே அதிகூடியளவு தொழுநோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இது சருமம் மற்றும் நரம்புகள் சம்பந் தப்பட்ட நோயாகும். இதற்கான பிரதான கார ணம் சிறிய வீடுகளில் அதிக எண்ணிக்கை யானவர்கள் நெருங்கி வாழுதல், சிறந்த காட் டோற்றம் இன்மை மற்றும் வீட்டுக்குள் போதி யளவு சூரிய ஒளி இல்லாமை காரணமாகவே தொழுநோய்க்கான பக்றீரியா தாக்கம் அதிக ரித்துச் செல்வதாகவும் தெரிவித்தனர்.

ஆனால் அலட்சியம், சிகிச்சை முறை மையை சரிவரப் பின்பற்றாமை ஆகியன காரணமாகவே பாரதூரமான விளைவுகள் ஏற்படுகின்றன. 20 சதவீதமானவர்கள் சரும அடையாளங்கள் மறைந்ததும் சிகிச்சையை இடைநடுவில் கைவிட்டு விடுகின்றனர்.

இது தவறான செயல்முறை. இதனால் உடலிலுள்ள பக்றீரியாவை முழுமையாக அழிக்க முடியாது என்றும் கூறினர்.

ஆரம்பத்திலேயே இனங்கண்டு முறை யாக ஆறு அல்லது 12 மாதங்கள் சிகிச்சை பெற்று வந்தால் ஒரே குடும்ப உறுப்பினர்க ளுக்கிடையே இந்நோய் பரவுவதற்கு வாய்ப்பு இல்லை.

மற்றும் தொடுவதனாலும் இந்நோய் சாதாரணமாகத் தொற்றாது. இலகுவில் தொற றக்கூடியதல்ல. சருமத்தில் சந்தேகத்துக்கு இடமான தழும்புகள் ஏற்பட்டாலோ அந்தப் பகுதி உணர்வு இன்றிக் காணப்பட்டாலோ காலந்தாழ்த்தாது அருகிலிருக்கும் அரசாங்க வைத்தியசாலையை நாடி உடனடியாக சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. (அ-2)

# பிரிட்டனுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுக

## மத்திய மாகாண முதலமைச்சர்

பிரித்தானியாவிற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய மாகாண மாதாந்த விசேட கூட்டத்தில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு இதனைக் குறிப்பிட்டுள்ளார். பிரித்தானிய ஆட்சியாளர்கள் இலங்கையின் சுதந்திரப் போராட்டவீரர்களை படுகொலை செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது இலங்கை சுதந்திரப் போராட்ட வீரர்களை படுகொலை செய்த பிரித்தானியாவிற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

வட மாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரித்தானியாவிற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் பிரேரணை ஒன்றை சரத் ஏக்கநாயக்க மத்திய மாகாணசபையில் சமர்ப்பித்துள்ளார்.

எனினும், எதிர்க்கட்சியினர் தங்களது கரு த்தை வெளியிட சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர் கே.கே. பியதாச தெரிவித்துள்ளார்.

நாடு பிளவுபடக் கூடாது என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது என்ற போதிலும் முதலமைச்சர் தேர்தலை இலக்கு வைத்து கருத்துக்களை வெளியிட்டு மக்களின் கவனத்தை திசை திருப்ப முயற்சிப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.(அ-2)

# தங்க நகைகளை கடத்த முயன்றவர் கைது

(கொழும்பு)

சுமார் 20 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான 586 கிராம் எடைகொண்ட தங்ககட்டி மற்றும் நகைகளை வெள்ளி முலாம் பூசிய நிலையில் சென்னைக்கு எடுத்துச் செல்ல முற்பட்ட இந்தியர் ஒருவரை விமான நிலைய சுங்க பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

சென்னைக்கு புறப்பட ஆயத்தமான எயார் இந்தியாவுக்குச் சொந்தமான ஐ.எக்ஸ் 672 ரக விமானத்தில் நேற்று முன்தினம் காலை செல் வதற்காக வந்த போதே சுங்க அதிகாரிகளான சுங்க அத்தியட்சகர் நிமல்திலக்க தலைமை யிலான குழுவினர் இவரை கைது செய்தனர்.

இவரிடமிருந்து வெள்ளிமுலாம் பூசப்பட்ட தங்க காப்பு ஒன்றும் தங்க செயின் ஒன்றும் மெருகூட்டப்படாத தங்க நகைகள் சிலவற் றையும் மீட்டுள்ளனர். (அ-2)

# இணக்கம் கண்ட விடயத்தை குழப்பும் வகையில் தமிழக மீனவர்கள்

## கடற்படை பேச்சாளர் குற்றச்சாட்டு

இலங்கை -இந்திய மீனவர்களுக்கிடை யில் இணக்கம் காணப்பட்ட விடயங்களைக் குழப்பும் வகையில் கடற்படையினர் ஒரு போதும் செயற்படமாட்டார்கள் என கடற்படைப பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்தார்.

இந்திய மீனவர்களுக்கும், இலங்கை மீனவர்களுக்கும் இடையில் காணப்பட்ட இணக்கத்தை குழப்பும் வகையில் இலங்கை கடற்படையினர் செயற்படுவதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா குற்றஞ்சாட்டியிரு ந்தார். இது குறித்து வினவிய போதே கடற் படைப் பேச்சாளர் மேற்படி கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் கடல் எல்லைக்குள் சட்ட விரோதமாக நுழைபவர்களையும், கடலின் வளத்துக்குக் கேடு விளைவிப்பவர்களையும் தடுப்பதே கடற்படையின் முக்கிய பணி. அவ் வாறு நடந்து கொள்பவர்களையே கைது செய்கின்றனர்.

.பொட்டம்," ரோலிங் முறைமையைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதில்லையென்றும் இலங்கை கடற்பரப்புக்குள் வருவதில்லை யென்றும் பேச்சுவார்த்தையில் இணக்கம் கண்ட பின்னரும் மீண்டும் தமிழக மீனவர் கள் அத்துமீறி நுழைந்ததும் அல்லாமல் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கையிலும் ஈடுபட் டுள்ளனர்.

தமிழக மீனவர்களே இணக்கப்பாட்டை குழம்பும் வகையில் செயற்பட்டுள்ளனரே தவிர கடற்படை குழப்பும் வகையில் செயற் படவில்லை.

சட்டவிரோத மீன்பிடி முறையைப் பயன் படுத்தும் மீனவர்களை இடைநிறுத்துவதற்கு இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதையும் இடைநிறுத்துவ தாகவும், இது தொடர்பில் மத்திய அரசுடன் பேசி தீர்மானம் ஒன்றுக்கு வர இந்திய மீனவர்கள் 14 நாட்கள் கால அவகாசம் கோரியிருந்தனர்.

இதற்கு இலங்கைத் தரப்பு மீனவர்கள் இணக்கம் தெரிவித்ததுடன் இந்த 14 நாட்களுக்குள் அத்துமீறி நுழைந்தால் இந்திய மீனவர்களைத் தாமே கைது செய்து கடற்படையினரிடம் கையளிப்போம் என்றும் கூறியிருந்ததாக தெரியவருகின்றது. (அ-2)

# எரிபொருள் மானியம்கோரி மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

(நீர்கொழும்பு)


நீர்கொழும்பு மீனவர்கள், கடந்த எட்டு மாத காலமாக எரிபொருள் மானியம் வழங்காமை க்கு எதிர்ப்பு தெரிவித்து படகுகளில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நீர்கொழும்பைச் சேர்ந்த மீனவ சங்கங் கள் பல ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டம் நீர்கொழும்பு கொத்தலா வல பாலத்தின் கீழ் ஆரம்பமானது.

ஆர்ப்பாட்டத்தில் 500 இற்கும் மேற்பட்ட சிறிய படகுகளில் பல நூற்றுக்கணக்கான மீனவர்கள் சுலோக அட்டைகளை ஏந்தி தமது எதிர்ப்பு கோசங்களை எழுப்பினர்.

வரவு செலவு திட்ட வாக்குறுதியை காப் பாற்று, எரிபொருள் மானியத்தை தொடர்ந்து தா, பொய் வாக்குறுதிகளை வழங்கும் அமை ச்சர் தேவையில்லை, ஜனாதிபதியே எமது கோரிக்கைகளுக்கு செவிமெடுங்கள், வலை கள் வேண்டாம்,எரிபொருள் வேண்டும் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங் களுடன் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"எமது மீனவ சகோதரர் ஒருவரின் உயிரை பலிகொடுத்த பின்னரே எரிபொருள் மானியம் கிடைத்தது. ஆயினும் கடந்த எட்டு மாத கால மாக அது கிடைக்கவில்லை. இதன் காரண மாக மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள னர். மீனவர்களின் துன்பத்தை புரிந்து எரி பொருள் மானியத்தை உடனடியாக வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர். (அ-2)




சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் எழுதிய தவமுனிவனின் தமிழ் மந்திரம் என்ற நூலின் அறிமுக விழா அண்மையில் சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், வட மாகாண முதலமைச்சர் உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

### தே(ளு)ன்

தன்னிறைவு பெறும் நோக்கில்
அந்த தேனீக்கள்
தன்னுடைய பாட்டில்
தேனை உற்பத்தி செய்தபடி...
காலம் தொட்டு
தேன்கூட்டுக்கு
யாரோ கல்லெறிந்தபடி...
கல்லெறிபடும்போது
தேனீக்கள் கலைவதும்
பின் கல்லெறிந்த
விழிகளுக்கு மண்தூவி
மீண்டும் ஒரு இடத்தில்
கூடுகட்டுவதும் அவற்றின் வழமை...
பறப்பதும் பின்பு ஒன்றுபடுவதும்
அவற்றின் இயல்புதான்...
இம்முறையும் தேன்கூட்டை

**ஆ.முல்லைதிவ்யன்**

### கல்லூரி வாசல்களில்

அது உயர்ந்த இடம்
நான் உயரத்தில்
பறந்த இடம்
எது என்னைவிட்டு
சென்றாலும்
இது உன்னை விட்டுப் போகாது
புதுகனவுகள் தந்த
வாசல் இதுதான்
புது உராய்வுகளைத்தந்த
வளைவும் இதுதான்
இறக்கைகள் இல்லையெனத் தெரிந்தும்
என்னையும் உன்னையும்
இரண்டு வான நடுவில்
பறக்க வைத்த வானமிது
துடுப்பில்லையெனத் தெரிந்தும்
தொடுப்பு நதிகளிலும்
நடுக்கடல்களிலும்
வலம்வரும்படி கூறி
பலம் தந்த படகிது...

**பி.முல்லைதாசன்**
**முல்லைத்தீவு**

### ஓயாத ஒலி

பாரதப் போரில் அன்று
கிருஸ்ணர் ஊதிய
சங்கின் ஒலி...
இன்னும்
ஓய்ந்த பாடில்லை
அது மனித வாழ்வோடு
மூச்சாகிப் போனதால்

### அவதாரம்

சிலுவைகளை
அடுத்தவர் பாவங்களை
எவராலும் சுமக்க முடியாது
அப்படி சுமப்பதற்கும்
ஒரு தகுதி வேண்டும்

### பக்தன்

நானும் கர்ப்பிணிதான்
பத்து மாதங்களல்ல
சில நொடிகள்
அவ்வளவு கனம்
இறைவா- உன்
நினைவுகள்

**ச.ரமேஸ்குமார்**
**மருதனார்மடம்**

### இமயம் தொட...

உன் வியர்வைத் துளிகளில்
சேர்த்த செல்வமதை
பசியால் வாடும் ஏழைக்கு
உவந்து கொடு
அப்போதுதான்
உன் உழைப்பு
முழுமைபெறும்
இறைக்க இறைக்கத்தான்
கிணறு சுரக்கும்

மாவை.நா. கஜேந்திரன்

### ஆண்டவனிடம் மண்டியிடுகிறேன்

என்ன நடக்கிறது எனக்கே தெரியல
ஆயுள்முடிவது போல பிரமை ஏற்படுகிறது
தலையோ சுற்றி மயக்கம் வருகிறது
உயிர் ஏதோ எனைவிட்டு
போவது போல் தெரிகிறது
அருகில் இருப்பது எதுவும் புரியல
மேலே நகர்கையிலே உயிரும் விலகுதே
ஆண்டவா? இது என்ன சோதனை
என்னைக் காப்பாற்று என்று கேட்கிறேன்

**மருதங்கேணியூர்**
**வே.வே.அகிலேஸ்வரன்**

K-N



# மௌனத்தின் தேடல் – 189

### தவிக்கின்றேன்

தவியாய் தவிக்கின்றேன்
தண்ணீரும் துளியாய் வடிகின்றதே
மனதால் தவிக்கின்றேன்
கண்ணீரும் சொரியாய் சொரிகின்றதே
தந்தை முகம் தேடி
அன்னை முகம் பார்க்கின்றேன்
அன்னை விடும் கண்ணீர்
என் முகம் கழுவுகின்றதே

நா.தளையசிங்கம்
கொக்குவில்

### எதிர்பார்ப்பு

பல கோடி செல்வத்தில்
திளைக்கும் இப்பூமியில்
குழாய் நீர் கொண்டு
பசி மறந்து நீ வாழ்கிறாயா
கலங்காதே கண்ணே
ஒரு நேரம் வரும் உனக்கு
குழாய்நீர் போன்று
குதூகலிப்பாய் உன் வாழ்வில்

யு.சோபியா
விசுவமடு

### யாருக்கு பிடிக்கும்

தண்ணீரைக் கண்டால்
எனக்குப் பிடிக்கும்
தாகம் தீர்க்கும்
என்னைக் கண்டால்
யாருக்குப் பிடிக்குமோ

திருமதி நி.பன்னீர்ச்செல்வம்
சுழிபுரம்

### அடம்பிடிப்பு

என் போன்ற மழலைகளின்
விளையாட்டில்
நீர் விளையாடும் ஒன்று
பற்றிப் பிடித்த நீர்க்குழாயை
விடமாட்டேன்
யார் தடுத்தாலும்

பி.பிரணவன்
சுழிபுரம்

### புதுக்கதை

குடத்தடி நீரைக்கண்டு
குறுனிக் கற்களை
எடுத்துப்போட்டு
கடுந்தாகம் தீர்த்த காகம்!
யுகங்கள்தான்
மறைந்திடவே
மனிதரும் காகம் போலே
தாகங்கள் தொடர்ந்திடவே...

இரா.பிரம்மா
நெடுந்தீவு

### சிறுவனின் நிலைமை

தெருவோரத்தில்
நீர் அருந்திய
அநாதைக் குழந்தை
பசியால் வாடி
ஆதரவற்ற நிலையில்
காணப்பட்டது
எனவே பெற்றோர்கள்
தங்கள் குழந்தைகளை
வெறுக்காமல்
நற்பிரஜையாக
வளர்க்க வேண்டும்

ந.விதுர்ஜனா, மயிலங்காடு

### விதியா? சதியா?

பறிபோகும் உயிரை
பறித்தெடுப்பதற்காய்
ஒரு துளி
முலைப்பாலுக்காய்
தவித்தாய்
முள்ளிவாய்க்காலில்
நேற்று
வரள்கின்ற நாவுக்கு
ஒரு துளி நீரூற்ற
வலி சுமந்து
நிற்கின்றாய்
இன்று இதுதான்
நம் விதியோ?
யாருமிட்ட சதியோ...?

ஏ.கஜன்
மல்லாவி

### தாகம்

காலங்கள் மாறின
சோகங்கள் குடியேறின
வாழ்வே பறி போய்விட
மீண்டும் தொடங்கும்
மிடுக்காய்
மெதுமெதுவாய் உயிர்க்க
வரட்சி வந்து கருக்கிறதே
வரளும் நாவுக்கு
ஒரு துளி நீரின்றி
வளரும் பயிரதற்கு

கவிமகன்
துணுக்காய்

### பசி

பால்மாவின் விலை பரிதவிக்க
பாலகன் வயிறு பசியில் தவிக்க
பானையிலும் சோறு இல்லை
பருகவென வாராதோ
நீர்த்திவலை...?

சு.சுதாஹரன்
கொக்குவில்

### தவிக்குதே

பால் மணம் மாறாத
பச்சிளம் பாலகனே!
ஏன் இந்த நிலை
உனக்கு பெற்றவளும்
உற்றவரும்- பாழாய் போன
யுத்தத்திலே உன்னை
பாவியாக்கி விட்டுச்
சென்றதால் தானா

செ.பாஸ்கரன்
சண்டிலிப்பாய்

### தத்து

பெற்றோர்கள்
குழந்தையை விட்டு பிரிகிறார்கள்
குழந்தை அநாதையாகி
அரவணைக்க யாருமின்றி
தண்ணீர் குழாயருகில் நிற்கிறது
அவனை அணைத்து வளர்த்து
மகிழ்வாய் வாழ்வோமாக

ர.ஜன்சிகா, மயிலங்காடு

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –190



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 06.02.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கோரிக்கைக்கு கைவிரித்தது இந்திய அரசு

## எக்கொனமிக் நாளிதழ் தகவல்

**(சென்னை)**

**ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானத்தை தோற்கடிக்க எந்த வகையிலும் உதவ முடியாது என்று இந்தியா கைவிரித்து விட்டதாக எக்கொனமிக் ரைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.**

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வருவதாலேயே, தமிழர்களின் உணர்வுகளைக் காயப்படுத்த விரும்பாக இந்திய மத்திய அரசு இலங்கைக்கு உதவ மறுத்துள்ளது.

கடந்த புதன்கிழமை புதுடில்லியில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சந்தித்துப் பேசியிருந்தார்.

இதன்போது, ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானத்தில், அனைத்துலக விசாரணை கோரப்படாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு மன்மோகன் சிங் அரசாங்கம் உதவ வேண்டும் என்று பீரிஸ் கோரியிருந்தார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் மனோநிலையில் இருந்த சல்மான் குர்ஷித் இதற்கு எந்த வாக்குறுதியையும் கொடுக்கவில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அதேவேளை, வோஷிங்டனுடனேயே இதுபற்றி நேரடியாகப் பேசிக் கொள்ளுமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிசுக்கு, சல்மான் குர்ஷித் ஆலோசனை கூறியுள்ளார்.

இந்த தீர்மானம் தொடர்பாக புதுடில்லி சரியான நேரத்தில் முடிவெடுக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி இன்னமும் தமிழ்நாட்டில் எந்தக் கூட்டணியையும் அமைக்கவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்டதாக குற்றம் சாட்டப்படும் நிலையில், இந்த நேரத்தில் கொழும்புக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தால், தமிழ்நாட்டில் உணர்வுபூர்வமான விவகாரமாக உருவெடுக்கும். அங்கு கூட்டணி அமைப்பதில் சிக்கலை ஏற்படுத்தும் என்பதாலேயே இலங்கையுடன் மெத்தனப் போக்கை கடைப்பிடிப்பதாகவும் எக்கொனமிக் ரைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில் இலங்கையுடன் கூட்டாளியாக இருப்பதற்கும் இந்தியா விரும்புவதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை அரசாங்கம் எதிர்வரும் மார்ச்மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா அமர்வில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக கொண்டு வரும் பிரேரணையை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என மேற்குலக நாடுகளின் ஆதரவை தேடி வருகின்றது.

இதற்காக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசும் பல்வேறு நாட்டு தலைவர்களைச் சந்தித்து ஆதரவு தேடி வருகின்றனர்.

முன்னதாக டில்லி சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் 82 நாடுகளின் தூதுவர்களை சந்தித்து இலங்கை அரசாங்கத்தின் நிலைமையை எடுத்துரைத்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## இலங்கை மீதான அழுத்தம் பயங்கரவாதத்திற்கே உதவும்

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் போரில் ஈடுபட்டிருந்த போது செயற்படுத்திய நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியே இலங்கைக்கு எதிரான மனிதவுரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டு என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதனால் ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் மனித உரிமை ஆணைக குழுவின் கூட்டத் தொடரில் அந் நாடுகள் எந்த வகையான யோனையை முன் வைத்தாலும் அது பயங்கரவாதத்திற்கு உதவி யளிப்பதாகும.

போர் நடைபெற்ற போது சில சர்வதேச நாடுகள் அவற்றின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படும் கைப்பாவைகளாக இலங்கை அரசை மாற்ற முயற்சித்தன்.

அவர்களின் கைப்பாவைகளாக மாறி, அந்த நிகழ்ச்சி நிரலை செயற்படுத்தாத காரணத்தினால் அடிப்படையற்ற குற்றச் சாட்டுக்களை முன்வைக்க முயற்சித்து வருகின்றனர்.



பயங்கரவாதத்தை தோற்கடித்தன் காரணமாகவே சர்வதேச நாடுகள் யோசனைகளை கொண்டு வருகின்றன.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்படாதிருந்தால், அந்நாடுகள் இலங்கைக்கு அமைதிப் படையை அனுப்பியிருக்கும் எனவும் அமைச்சர் ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கல்வளை முதியோர் பகல் பராமரிப்பு நிலைய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக புதிதாக அமைக்கப் பெற்ற நிலையத்தில் க.தம்பாபிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் எஸ். முரளிதரன், சிறப்பு விருந்தினர்களாக சங்கானை வலி.மேற்கு சமூக உத்தியோகத்தர் வே.அருந்தவராஜா, வலி. தென்மேற்கு முதியோர் சங்க சமாச முன்னாள் தலைவர் எம்.எக்ஸ். சர்வானந்தன், சண்டிலிப்பாய் வலி.தென்மேற்கு சமூக சேவை உத்தியோகத்தர் வே.சிவராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-2)

## இல்லமெய்வல்லுநர் போட்டி


(யாழ்ப்பாணம்)

யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் அ. ஆனந்தராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.வரதராஜமூர்த்தி, சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கட்டடத் திணைக்கள ஓய்வு பெற்ற நிறைவேற்றுப் பொறியியலாளர் ஐ.சிவலோகநாதன், யாழ். மாவட்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உதவிப் பொறியியலாளர் பா.ஜீவராசா ஆகியோர் கலந்து கொள்வர். (அ-2)

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:**
**021 321 0815,**
**0215671532**



வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் வவுனியா மாவட்ட ஆடல் அணியினர் குருஷேத்திரம் ஆடல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் நிற்பதையும், கலைஞர் ஒருவரை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கௌரவிப்பதனையும், நிகழ்வின் ஒரு காட்சியினையும் படங்களில் காணலாம். (படங்கள்: பூநகரி, மானிப்பாய் செய்தியாளர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

புதிய உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு வேலைகளுக்காகவும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் இன்றுஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மணியந்தோட்டம், உதயபுரம், நெடுங்குளம், தூண்டி, வசந்தபுரம், ஆனந்தன்வடலி வீதி, மகேந்திரபுரம், தேவபுரம், கொழும்புத்துறை வீதியில் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்

8.30 மணியிலிருந்து மதியம் ஒரு மணிவரை பிறவுண் வீதி, கே.கே.எஸ் வீதி, தட்டார் தெரு, கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி,மானிப்பாய் வீதியில் ஒரு பகுதி, சிவன் பண்ணை வீதி, கன்னாதிட்டி ,மணிக் கூட்டு கோபுர வீதி, கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி, இராமநாதன் வீதியில் ஒரு பகுதி ஆகிய இடங் களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (எ-11)

# குற்றவாளிகளின் கைவிரல் அடையாளங்கள் கணனிமயம்

(கொழும்பு)

நாட்டில் குற்றவாளிகள் பட்டியலில் இருக்கும் சுமார் 5 இலட்சம் பேரின் கைவிரல் அடையாளங்கள் கணனி மயப்படுத்தப்பட்டு சேமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் குற்றச் செயல்கள் இடம்பெறும் இடங்களில் அடையாளம் காணப்படும் குற்றவாளிகளின் கைவிரல் அடையாளங்களை சில நிமிடங்களில் பரீட்சித்து பார்க்க முடியும் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

அதேவேளை வெளிநாடுகளுக்கு செல்வதற்காக பொலிஸ் சான்றிதழை பெறும் போது கைவிரல் அடையாளங்களை பதிவு செய்வது இதன் மூலம் துரிதப்படுத்தப்படும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

மொறட்டுவ, கொழும்பு பல்கலைக்கழங்கங்கள், தகவல் தொழில் நுட்ப நிறுவனம், ஆதர் சி கிளார்க் மத்திய நிலையம் ஆகியவற்றின் உதவியோடு இந்த கைவிரல் அடையாளங்களை கணனிமயப்படுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### சிவலிங்கப்பிள்ளை தனபாலசிவரஞ்சிதன்

7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இராஜவீதி,தோப்பு அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கப்பிள்ளை தனபாலசிவரஞ்சிதன் கடந்த 30 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தோப்பு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.



### கொண்டு சண்முகம்

சாவகச்சேரி தேவாலய வீதியைப் வசிப்பிடமாகக் கொண்ட கொண்டு சண்முகம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி பாலசிங்கம் மகேஸ்வரி

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் மகேஸ்வரி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### இரத்தினம் கிருஷ்ணகாந்தா

நுணாவில் கிழக்கு , கல்வயல் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் கிருஷ்ணகாந்தா கடந்த 29 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### நாகப்பு நல்லையா

(ஓய்வு பெற்ற எழுதுவினைஞர், விவாகப்பதிவாளர்) மாலா வத்தையை வசிப்பிடமாகக் கொண்ட நாகப்பு நல்லையா கடந்த 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# ஈரநிலங்களைப் பாதுகாப்போம்



**ரம்சார் உடன்படிக்கையும் உலக ஈரநில தினமும்**

"ரம்சார்" என்பதுஈரான் நாட்டின் ஒரு நகரமாகும். 1971ஆம் ஆண்டு இந்த நகரில் முக்கியமானதொரு சர் வதேச உடன்பாடு எட்டப்பட்டது. அது தான் "ஈரநில உடன்படிக்கை" ஆகும். பூமியின் மொத்த நிலப்பரப்பில் 6 சத வீதமாக உள்ள ஈரநிலங்களைப் பாதுகாத்துக் கொள்ளவென ஏற்படுத்தப்பட்ட இந்த உடன்படிக்கையே "ரம்சார் உடன்படிக்கை" என்று பிர பல்யம் பெற்றுள்ளது. 1971இல் செய்து கொள்ளப்பட்ட ரம்சார் உடன்படிக்கை யின் படி, அந்த உடன்படிக்கையினை அமுலபடுத்துவதற்குச் சர்வதேசப் பிரஜைகளின் கவனத்தை ஈர்ப்பது அவசியமாகும்.

அதனையிட்டு, 1997ஆம் ஆண்டு "உலக ஈரநிலதினம்" பிரகடனப்படுத் தப்பட்டது. அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திக தியில் "உலக ஈரநில தினம்" அனுஷ் டிக்கப் படுகின்றது. 2014ஆம் ஆண்டு உலக ஈரநில தினத்தின் சர்வதேச ஆய்வுப் பொருள்"ஈரநிலமும் விவசாயமும்" என்பதாகும்.

ஈரநிலங்களின் பரம்பலா னது இடத்திற்கிடம் வேறுபட்டுக் காணப் படுகின்றது. அதாவது குறைவாக விருத்தியடைந்த நாடுகளிலேயே இவை அதிகமாகக் காணப்படுகின்றன.

குறிப்பாக இலங்கை, இந்தியா, வங்காளதேசம் போன்ற நாடுகளில் அதிக ஈரநிலங்கள் பரம்பிக் காணப்படுகின்றன. இவற்றினைத் தவிர ஐக்கிய அமெரிக்கா, கனடா, அலாஸ்கா, ஆபி ரிக்கா, தென்மத்திய பிறேசில் போன்ற நாடுகளிலும் ஓரளவிற்குப் பரம்பிக் காணப்படுகின்றன. உலகிலேயே மிகப்பெரிய ஈரநிலங்கள் காணப்படும் இடமாக தென்மத்திய பிறேசில் காணப்படுகின்றது.

பங்களாதேசில் காணப்படும் ஈரநிலங்களை "சந்தர்பண்ட்ஸ்" என சிறப்பாக அழைக்கின்றனர். இலங்கையிலும் பல்வேறு வகையான ஈரநில வகைகள் காணப்படுகின்றன. அதாவது ஆழமற்ற குடாக்களையும், நீரிணைகளையும் கொண்டவை மற்றும் கடனீரேரிகள் கரையோரத்தை அடுத்துக் காணப்படும் தீவுகள், பாறைக் கடற்கரைகள், நீர்த்தேக்கப் பகுதிகள், சதுப்பு நிலங்கள், வெள்ளச் சமவெளிகள், பொங்கு முகங்கள், வில்லுகள் போன்ற வடிவங்களில் ஈரநிலங்கள் பரந்து காணப்படுகின்றன.

ஈரநிலவகைகளை பொதுவாக இயற்கையான ஈரநிலங்கள், செயற்கையான ஈரநிலங்கள்என இரண்டாக வகைப்படுத்தலாம். இவ்விரண்டையும்நன்னீர ஈரநிலம், உவர்நீர்ஈரநிலம், சவர்நீர் ஈரநிலம் என்று மேலும் மூன்று பிரிவுகளாக பிரித்தறிய முடியும்.

ஈரநிலங்களில் பலதரப்பட்ட உயிரி னங்களைக் காண முடியும். பல ஈரநில உயிரினங்களுக்கு இப்பிரதேசங்கள் இருப்பிடமாக இருப்பதே இதற்குக் காரணமாகும். அங்கு வசிக்கும் உயிரினங்களுக்கும் வசிக்காத உயிரினங்களுக்கும் தேவையான உணவுகள் ஈரநிலங்களில் காணப் படுகின்றன. நன்னீரிலும் ,களப்பிலும் வசிக்கும் நத்தைகள், வண்ணத்துப் பூச்சிகள், இறால்கள், சிங்கி இறால் கள், மீன் இனங்கள், பட்சிகள், பாலூட் டிகள், ஈரூடகவாழிகள், ஊர்வன என்பனவும் ஈரநிலங்களுக்கு உரியனவாகும். ஈரநிலங்கள் சுற்றுலாப் பறவைகளுக்கும் தற்காலிக இருப்பிடமாக உள்ளன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஈர நிலங்கள் மனிதனுக்கு பல்வேறு வழிகளில் பயன்பட்டு வரு கின்றன.

இவை சில வேளைகளில் மனிதனுக்கு நேரடியாக பயன்பட்டு வருகின்ற அதேவேளை மறைமுகமாகவும் சில சமயங்களில் பயன்பட்டு வருகின்றன. பொதுவாக ஈரநிலங்களின் பயன்பாட்டினை இரண்டு வகையாக பிரித்து நோக்கலாம்.



ஈரநில உயிர்ச் சூழல் தொகுதி

அவையாவன

1.பொருளாதார முக்கியத்துவம்.

2.சமூக.கலாசார முக்கியத்துவம் ஆகும்.

பொருளாதார முக்கியத்துவம் என் பதனுள் மீன்பிடி, நீர்மின் உற்பத்தி கள், போக்குவரத்து, கைத்தொழில் விருத்தி, விவசாயம் போன்றன உள் ளடங்குகின்றன.

ஈரநிலங்கள் தமது அங்கிகளுக்கு சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்குவதோடு அவற்றின் செயற்பாடுகளையும் விருத்தி செய்து பேணுகின்றது.

இதன் மூலம் அங்கிகளின் பல் இனத் தன்மை அதிகரிக்கப்பட்டு அங்கிகளுக்கு இடையே இயற்கைச் சமநிலை பேணப்பட்டு உயிர் பல்வகைமை பாதுகாக்கப்படுகின்றது.

இதே போன்று நீரியல் வட்டத்திலும் பங்களிப்பு செய்கின்றது. ஆவியாக்கம், படிவுவீழ்ச்சி இவை இரண்டையும் சமனிலையில் வைத்திருக்கும் இடமாகவும் விளங்குகின்றது.

இன்று உலகில் அதிகரித்து வரும் சனத் தொகை காரணமாக ஈரநிலங்கள் சம அளவிலும், பரம்பலிலும், பல்வேறு மாற்றங்களையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றன.

இதன் காரணமாக ஈரநிலங்கள் தற்போது அழிவடைந்து கொண்டு வருகின்றன.

**இலங்கையில் ஈரநிலங்கள்**

இலங்கையிலுள்ள ஈரநிலங்களை நோக்கும் போது, 2013ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வரையில் இலங்கையில் ஆறுஈரநிலங்கள் ரம்சார்ஈரநிலங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவை

★ பூந்தல தேசிய வனம்
★ ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதி
★ மாது கங்கை
★ வங்காலை சரணாலயம்
★ குமண – குடும்பிகல சரணாலயம்
★ வில்பத்து சரணாலயம் ஆகும்.

· ரம்சார் உடன்படிக்கை யினூடாக இலங்கையில் ரம்சார் ஈரநிலங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்ட ஈரநிலங் களைத் தவிர சுற்றாடல் பாதுகாப்புப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள எட்டு பிரதேசங்களுக்குள் அடங்கும் ஈரநிலங்களும் உள்ளன.

1980 இலக்கம் 47 என்ற சுற்றாடல் சட்டத்திற்கமைய அதிவிசேட வர்த்தகமானி அறிவித்தலினூடாக இந்த முக்கியத்துவம் வாய்ந்த சுற்றாடல் வலயங்கள் சுற்றாடல் பாதுகாப்புப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றுள் முத்துராஜவெல சதுப்பு நிலம், பொலகொட சுற்றாடல் பாது காப்புப் பகுதி வளவவத்த வத்துரான சதுப்புநிலக்காடு, தலங்கம வாவி, கற்கரி வாவி போன்றன முக்கியமாக குறிப்பிடத்தக்கவை.

இயற்கைச் சூழல் தொகுதியில் உள்வாங்கப்படுகின்ற ஈரநிலங்களானது சூழல் அங்கிகளின் வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைவதோடு உயிரினப் பல்வகைமையினையும் பாதுகாக்கும்ஒரு இடமாகவும் தொழிற் படுகின்றது.

அத்துடன் மனிதனுக்கு பல்வேறு வழிகளிலும் அதாவது நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிவருகின்றது.

எனவே ஈரநிலங்களானவை உண்மையில் வெறும் ஈரநிலங்கள் மட்டுமல்ல என்பதையும் அவை சூழலில் பன்மடங்கு பெறுமதிமிக் கவை என்பதையும் இதன் மூலம் அறிய முடிகின்றது. எனவே இவற்றை பேணி பாதுகாக்க வேண்டியது நம் அனைவரினதும் பொறுப்பாகும்.

திருமதி சுபாஜினி உதயராசா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாய்லாந்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அதை புறக்கணிக்க எதிர்க்கட்சி வலியுறுத்தி வருகிறது. இது தொடர்பாக நடந்த பேரணியில் கலந்து கொண்ட எதிர்க் கட்சித் தலைவர் சுதேப் தாக்சுபனை படத்தில் காணலாம்.

## மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்தமை பாராட்டுக்குரியது-ஐ.நா.வல்லுநர்கள்

(நியூயோர்க்)

கைதிகள் 15 பேரின் மரணதண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து உத்தரவிட்டுள்ள இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஐ.நா. மனித உரிமை வல்லுநர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

கருணை மனுக்கள் மீது முடிவு செய்வதில் நீண்ட தாமதம் ஏற்பட்டதால் வீரப்பன் கூட்டாளி உட்பட 15 பேரின் தூக்குதண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து சமீபத்தில் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மனநோயால் அவதிப்பட்டு வரும தீவிரவாதி புல்லர் உள்ளிட்ட 2 பேரின் மரண தண்டனையை நிறுத்தி வைத்தும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் இந்த நடவடிக்கைக்கு ஐ.நா. மனித உரிமை வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இது குறித்து, ஐ.நா. மனித உரிமைகள் வல்லுநர் கிறிஸ்டாப் ஹெய்ன்ஸ் கூறியதாவது,

மனித உரிமைகளுக்கு முக்கியதுவமும், மனித உயிருக்கு மதிப்பும் தரப்படுவது அவசியம் என இந்திய அரசியலமைப்பு சட்டம் தெரிவிக்கிறது. எனவே அதில் உள்ள உறுதிப்பாட்டை உயர் நீதிமன்றம் தீர்ப்பு நிலை நாட்டியுள்ளது.

தூக்கு தண்டனை கொடுத்தே தீர வேண்டும் என்ற கட்டாய நிலை ஏற்பட்டால் அதற்காக உள்ள சர்வதேச சட்ட நெறிமுறைகளை பின்பற்றி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும.

மனநோயால் பாதிக்கப்படும் கைதிகளுக்கு தூக்குதண்டனை வழங்கக் கூடாது என்றும் சர்வதேச சட்டம் கூறுகிறது.

அதை பின்பற்றி சமீபத்தில உயர்' நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பு மனநிறைவை தருகிறது என்று தெரிவித்துள்ளார். (2)

# கடும் போராட்டங்களுக்கு மத்தியில் தாய்லாந்து பாராளு. தேர்தல் இன்று



**(பாங்கொக்)**

**தாய்லாந்து பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் இன்று நடைபெறுகிறது.**

இத்தேர்தலில் வாக்குரிமை பெற்ற 4 கோடியே 90 இலட்சம் மக்கள் வாக்களிக்கவுள்ளனர்.

இதற்காக நாடு முழுவதும் 93 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்காக சுமார் 2 இலட்சம் பொலிஸாருடன் இராணுவ வீரர்களும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இன்றையதினம் வாக்குப் பதிவின் போது வன்முறை சம்பவங்கள் தலைதூக்கினால் உடனடியாக வாக்குச் சாவடிகளை இழுத்து மூடும் படி தாய்லாந்து தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

அப்பகுதியில் வாக்களிக்காத மக்கள் பின்னர் ஒரு நாளில் வாக்களிக்கலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் பிரதமர் யிங்லக் ஷினவத்ரா பதவியிறக்கம் செய்யப்பட்டு பொதுத் தேர்தல் மூலம் புதிய பிரதமரை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுதீப் தாக்சுபன் தலைமையில் கடந்த நவம்பர் மாதம் போராட்டம் தொடங்கியது.

தீவிரமடையத் தொடங்கிய இந்தப் போராட்டத்தின் விளைவாக 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தைக் கலைத்த பிரதமர் யிங்லக், காபந்து பிரதமராகப் பதவியில் தொடருகிறார். அவர் பதவி விலகினால்தான் நாங்கள் தேர்தலில் ஈடுபட முடியும் என்று கூறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்து தங்களின் போராட்டங்களை தீவிரப்படுத்தி வருகின்றனர்.

ஆனால், பதவி விலகும் பேச்சுக்கே இடமில்லை என்று யிங்லக் திட்டவட்டமாக தெரிவித்து விட்டார்.

அரசுக்கு எதிரான வன்முறை வெறியாட்டங்கள் உச்சகட்டத்தை எட்டியதால், கடந்த 2 மாதங்களாக நாட்டின் பல பகுதிகளில் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டு, இன்று வரை தொடர்ந்து அமுலில் உள்ளது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் கடந்த மாதம் 37 எதிர்க்கட்சி தலைவர்களுடன் ஆலோசனை நடத்திய இடைக்கால பிரதமர் யிங்லக், போராட்டக்காரர்களுக்கு பயந்து தேர்தலை தள்ளி வைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை. திட்டமிட்டபடி பெப்ரவரி 2 ஆம் திகதி தேர்தல் நடந்தே தீரும் என்று அறிவித்தார்.

இதனையடுத்து, இன்று நடைபெறும் தாய்லாந்து பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் வாக்குரிமை பெற்ற 4 கோடியே 90 இலட்சம் மக்கள் வாக்களிக்க உள்ளனர். இதற்காக நாடு முழுவதும் 93 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. (2)

## பத்துக் கோடி ரூபாய் ஹெரோயின் பறிமுதல்

(ஜம்மு)

இந்தியா- பாகிஸ்தான் எல்லையில 10 கோடி ரூபாய் மதிப்பிலான ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டது.

உலக சந்தையில் 10 கோடி ரூபாய் மதிப்புள்ளதாக கருதப்படும் ஹெரோயின் போதைப் பொருள் எல்லை பாதுகாப்பு படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தங்களுக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து பாதுகாப்பு படைப்பிரிவு 32 ஆவது பிரிவினர் தங்களுக்கு கிடைத்த இரகசிய தகவலைக் கொண்டு எல்லைப் பகுதியான பிரம்மன் பேலா மற்றும் பர்க்வேல் பகுதியில் சோதனையில் ஈடுபட்டனர்.

2 இலட்ச ரூபாய் மதிப்பிலான போலி ரூபாய் நோட்டுகளையும், 2 கிலோ மதிப்புள்ள ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. கைப்பற்றப்பட்ட பொருட்கள் பூமக்கடியில் 5 மீற்றர் ஆழத்தில் வைத்து எரிக்கப்பட்டன. (2)




## ஈரான் அணுசக்தி பேச்சுவார்த்தை; வியன்னாவில் ஆரம்பமாகும்

ஈரானின் பொருதாளரத் தடைகளை விலக்கும் விதமாக அந்நாட்டின் அணுசக்தித் திட்டம் குறித்த அடுத்த கட்ட பேச்சுவார்த்தை எதிர்வரும் 18 ஆம் திகதி வியன்னாவில் நடைபெறும் என்று அறிவக்கப்பட்டுள்ளது.

இதன் முன்னோடியாக கடந்த நவம்பர் மாதத்தில் ஈரான் உலக நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா, சீனா, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் ஜெர்மனி ஆகியவறறுடன் தங்களின் அணுசக்தித் திட்டம குறித்த ஒரு ஒப்பந்தத்தை மேற் கொண்டது.

அந்நாட்டின் அணு உலைகள் மேலைநாட்டு நிபுணர்களால் பார்வையிடப்பட்டன. மேலும் செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்பும் குறைக்கப்பட்டது. இதன்மூலம் ஈரானின் மீது விதிக்கப்பட்டிருந்த சில பொருளாதாரத் தடைகள் தற்காலிகமாக நீக்கப்பட்டன.

ஈரானுடனான அணுசக்திப் பேச்சுவாரத்தைகளை நடத்திய ஐரோப்பிய யூனியனின் வெளியுறவுத்துறை அமைச்சர் கேதரின் ஆஷ்டன் மியூனிச் பாதுகாப்பு மாநாட்டின்போது ஈரானிய வெளியுறவுத்துறை அமைச்சரான முகமது ஜாவேத் சரிபுடன் சுவாரஸ்யமான கலந்துரையாடலை மேற்கொண்டதாகக் குறிப்பிட்டார்.

இன்னும் இரண்டு வாரத்தில் வியன்னாவில் நடைபெறவுள்ள கூட்டம் பற்றிக் குறிப்பிடுகையில் அனைவருடனும் இணைந்து பணியாற்றுவதை தான் மிகவும் எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

அணுசக்தித் திட்டம் குறித்த இரண்டாவது கட்டப்பேச்சுவார்த்தை நியூயோர்க்கில் நடைபெறும் என்று இந்த வாரத் தொடக்கத்தில் குறிப்பிட்ட அமெரிக்காவும் அதன்பின் கூட்டம் நடைபெறும் இடத்தையும், திகதியையும் உறுதி செய்துள்ளது.

ஆரம்பத்திலிருந்தே தங்களது அணுசக்தித் திட்டம் அமைதிக்கான முயற்சிதான் என்று ஈரான் தொடர்ந்து வலியுறுத்தி வந்தபோதிலும், நம்பிக்கையினமை காரணமாக மேற்கத்தேய நாடுகள் அந்நாட்டின்மீது கடுமையான பொருளாதாரத் 'தடைகளை விதித்தன.

தற்போது மேற்கொள்ள உள்ள இந்தப் புதிய ஒப்பந்தத்தின்படி ஈரான் நடக்குமேயானால் அந்நாட்டின் மதான பொருளாதாரத் தடைகள் முற்றிலுமாக விலக்கப்படும் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (2)

## முஷாரப்பை நேரில் ஆஜராகுமாறு சிறப்பு நீதிமன்றம் உத்தரவு



பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பிற்கு பிணையில் வெளிவரத்தக்க பிடியாணை பிறப்பித்து சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேசதுரோக குற்றத்துக்காக முஷாரப் மீது வழக்கு தொடரப்பட்டு நீதி மன்றத்தில் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

இந்த வழக்கில் உடல்நலக் குறைவு காரணமாக நேரில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்குமாறும் முஷாரப் தரப்பில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

எனினும் அவர் மனு நிராகரிக்கப்பட்டு நேரில் ஆஜராக வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் நேரில் ஆஜராகாததால் மூன்று நீதிபதிகள் கொண்ட சிறப்பு நீதிமன்றம் எதிர்வரும் 7 ஆம் திகதி நேரில் ஆஜராகும்படி பிணையில் வெளிவரத்தக்க பிடியாணையை பிறப்பித்து சிறப்பு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயம் தூய்மையாக இருந்தால் வாழ்வில் எதைக் கண்டும் பயம் ஏற்படாது.
- ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜெனிவாத் தீர்மானத்துக்கு தோஷ பரிகாரம் செய்திருக்கலாம்

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் மூன்று ஏழரைச் சனிக்கு இடமுண்டு என்பது சோதிடத்தின் கணிப்பு.

அதில் முதலாவது பொங்கு சனி, இரண்டாவது மங்கு சனி, மூன்றாவது மரணச் சனி.

பொங்கு சனி வேண்டியதை எல்லாம் அள்ளிக் கொடுக்கும். மங்கு சனி கொடுத்ததை பறிக்கும். மரணச் சனி ஆளின் வாழ்க்கைச் சுற்றோட்டத்திற்கு முடிவு கட்டும். இது சோதிடத்தின் முடிவு.

இப்போது இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டு வரப்படும் தீர்மானம் மூன்றாவது தடவையானது.

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டு வரப்படும் தீர்மானத்தை சனி திசைக்கு ஒப்பீடு செய்தால் முதலாவது தீர்மானம் பொங்கு சனி என்று கூறலாம்.

அந்தத் தீர்மானம் இலங்கைக்கு சர்வதேசம் உதவுவதாக- நாட்டின் அபிவிருத்திக்கு பரோபகாரம் செய்வதாக அமைந்திருந்தது.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் என்று கூறப்பட்டாலும் முதலாவது தீர்மானம் உலக நாடுகள் இலங்கைக்கு நல்ல வாய்ப்புக் கொடுப்பதாக அமைந்திருந்தது.

ஆக, ஐ.நாவின் முதலாவது தீர்மானம் இலங்கைக்குப் பொங்கு சனியாகப் பொங்கித் தள்ளியது.

ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட இரண்டாவது தீர்மானம் போர்க்குற்றம் தொடர்பில் இலங்கை அரசு உள்ளக விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தியதுடன், எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் அந்த உள்ளக விசாரணை நிறைவடைய வேண்டும் எனவும் காலக்கெடு விதித்திருந்தது.

இலங்கைக்கு எதிராக இரண்டாவது தடவையாக ஜெனிவாவில் தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்னதாகவே தமிழகம், என்றுமில்லாதவாறு கொதித்தது.

தமிழக காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இந்திய மத்திய அரசை சாடும் அளவில் நிலைமை மாறியது.

இதன்காரணமாக இலங்கை அரசு மலை போல் நம்பி இருந்த இந்தியா ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்தது.

ஒருவனுக்கு அயல் வீடு பகை என்றால் அது அட்டமத்துச் சனி என்பார் திருமுருக கிருபானந்த வாரியார்.

எனவே ஜெனிவாத் தீர்மானத்தை இந்தியா ஆதரித்தபோது-இரண்டாவது தடவையாக ஜெனிவாத் தீர்மானம் நிறைவேறிய போது இலங்கைக்கு மங்கு சனி ஆரம்பித்து விட்டது என்பதே பொருள்.

என்ன செய்வது மங்குசனி மாரகச் சனியாக-மரணச் சனியாக மாறாமல் இருப்பதற்கு சில தோஷ நிவாரணங்களை அரசு செய்திருக்க வேண்டும்.

சோதிடத்தில் எங்ஙனம் கிரக தோஷ பரிகாரம் சொல்லப்பட்டிருக்கிறதோ,

அதுபோல இலங்கை அரசைப் பிடித்துள்ள மங்கு சனிக்கும் தோஷ நிவாரணம் உண்டு.

ஆம்; இடம்பெயர்ந்த மக்களை அவர்தம் வாழ்விடங்களுக்கு அனுப்புதல், நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், போர்க் குற்ற விசாரணைகளை நடுநிலையோடு மேற்கொள்ளல், வன்னிப் போரில் உயிரிழந்த குடும்பங்களுக்கு நஷ்ட ஈடுவழங்குதல், குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கு குறைந்தது ஐந்து வருடங்களுக்கேனும் மாதாந்த உதவு தொகை வழங்குதல் உள்ளிட்ட நலத் திட்டங்களை மேற்கொண்டிருந்தால் மரணச் சனியால் ஏற்படும் ஆபத்து தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போயிற்று என்பதாக முடிந்திருக்கும்.

ஆனால், கெடுகிறன் பிடி பந்தயம் என்றால் விதியெதுவோ அதுவே நடந்தாகும் என்று கூறுவதை விட நமக்கு வேறெதுவும் தெரியவில்லை.

## இளைஞர் கழக நிர்வாகத் தெரிவு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச சம்மேளனத்திற்குட் பட்ட இளைஞர் கழகங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இதன்படி மானிப்பாய் மேற்கு ஜே/140 இளைஞர் கழகத்தின் இவ்வாண்டிற் கான புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் கட்டுடை சைவ வித்தியா சாலையில் இடம் பெற்றது.

புதிய ஆண்டுக்கான தலைவராக அ.கீர்த்தனா, செயலாளராக பே.சாம்பவி, பொருளாளராக பி.சக்திபாகன், அமைப்பாளராக எஸ். பிரபாகர், உப தலைவராக க.உஷாந்தன், உப செயலராக இ.கலின் ஆகியோரும் விளையாட்டுத் துறைக்கு ஜீ.சர்மிளா, கலாசாரம் மற்றும் அறிவிப்புத் துறைக்கு எஸ்.உதயன், கல்வி பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவிற்கு ச.குமரன் உள்ளிட்ட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். (அ-9-23)

## தப்பிப் பிழைத்தன கதிர்கள் அறுவடை ஆரம்பமானது

(பூநகரி)

சாவகச்சேரி பிரதேசத்திலுள்ள தனங்கிளப்பு, மறவன்புலா ஆகிய கிராமங்களில் காலபோக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


கடந்த வருடம் காலபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்ட போது பருவமழை பெய்யவில்லை.

இதனால் நீரின்றி விவசாயிகளின் பெரும்பாலான நெற்செய்கை அழிவடைந்து அவர்கள் பெரும் நட்டத்தை எதிர் நோக்கியிருந்தனர்.

இந்நிலையில் தனங்கிளப்பு, மறவன் புலோ போன்ற பிரதேசங்களில் விவசாயிகள் தம்மால் முடிந்தளவு கிணறுகளினூடாகவும் சிறு குளங்களினூடாகவும் தண்ணீரைப் பாய்ச்சி நெல் வயல்களைபாதுகாத்து தற்போது அறுவடையை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆயினும் விவசாயிகள் வழமையாக காலபோகச் செய்கையில் பெற்று-அத்தோடு அறுவடை செய்யப்படுகின்றநெற்களின் விளைச்சலும் குறைவாகவே காணப்படுகின்றது. (அ-9-84)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### தம்மையன்றி வேறொன்றும் காணார்

தம்மைத்தம் மாலறிந்த சாலப் பெரியோர்கள்
தம்மையன்றி வேறொன்றுந் தாங்காணார்- பின்னைப்
பிறப்பும் இறப்புமில்லைப் பேய்ப்பித்தர் போல்வார்
மறப்பன்றி வாழ்வார் மகிழ்ந்து

மதியு மிரவியும் மன்னுஞ் சமாதி
பதியும் படியாக்கிப் பாழ்த்த- விதிவென்று
வாழ்வாரை வாழ்த்தி வளரு மடியவர்க்குத்
தாழ்வுண்டோ தம்பிநீ சாற்று

## நிறுவுநர் நாள் நிகழ்வும் மலர் வெளியீடும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நாள் நிகழ்வும் தாமோதரன் மலர் வெளியீடும் எதிர்வரும் 5-ம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் அ.கைலாயபிள்ளை தலைமையில் கல்லூரியின் அருணாசல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார், கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், ஹற்றன் நஷனல் வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளர் ப.பரணிதரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கட்டிளம் பருவத்தினரை தூயகற்றலின் பால் ஈடுபடுத்துவதற்கு கையாளப்பட்ட உத்திகள் எனும் தலைப்பிலான நிறுவுநர் வி.தாமோதரம்பிள்ளையின் நினைவுப் பேருரையை ச.லலீசன் ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து 'தாமோதரம்' எனும் நூலினை முதன்மை விருந்தினர் வெளியிட்டு வைக்க ப.பரணிதரன் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

நூலின் ஆய்வுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு ஆற்றவுள்ளார். (அ-9-29)

## எம் குறுகிய பார்வை விரிவுபெற இயேசுவின் ஒளியால் நாம் நிரப்பப்படுவோம்

இன்று இயேசுவைக் கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்த விழாவை நாம் கொண்டாடுகிறோம். ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும் என்று பைபிளில் எழுதியுள்ளபடி, இயேசு இன்று காணிக்கையாக கொடுக்கப்பட்டார். இயேசுவின் இந்த அர்ப்பணம் பற்றி நோக்கும்போது திருச்சட்ட மரபினை தாய் மரியாவும் வளாப்புத்தந்தை யோசேப்பும் கடைப்பிடித்தார்கள.

எனவேதான், ஆண்மகவு பிறந்தும அதைக் கடவுளுக்கு அர்ப்பணிக்க எருசலேம் கோவிலுக்குச் சென்றார்கள் என்பது தெளிவாகிறது. அருளாளரான திருத்தந்தை 2ஆம் ஜோன்போல், 1997ஆம் ஆண்டில் முதன் முறையாக இந்நாளை அனைத்துலக துறவியர் தினமாக அறிவித்து, இத்தினத்தைச் சிறப்பித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வரலாற்று காலத்தைப் பின்பற்றி சிறப்பிக்கப்படும்

### பரமபிதா காட்டிய பாதை

இவ்விழா, கிறிஸ்து பிறப்பில் இருந்து சரியாக நாற்பதாம் நாளில் கொண்டாடப்படுகிறது. திருக்காட்சி விழாவில் நிறைவு பெறும் கிறிஸ்துமஸ் கால விழாக்களின் பண்பான கிறிஸ்துவே உலகின் ஒளி என்றமையக்கருத்து இன்றைய விழாக் கொண்டாட்டத்திலும் நீட்டிக்கப்படுகிறது. எம் அர்ப்பண வாழ்வை எண்ணிப பார்க்கத் தூண்டும் இவ்விழா இறைவனோடு எமக்குள்ள உறவை உறுதி, நாம் எம்மை இறைவனுக்குக் கையளிப்பதற்கு எம்மக்களுக்கு இருக்கும் எண்ணங்களையும் உணர்வுகளையும் மீண்டும் தூண்டுவதற்கு வழிகாட்ட வேண்டும்.

அன்று அந்த ஆலயத்தில் நேர்மையாக வாழ்ந்துவந்த சிமியோன் என்னும் ஒரு பெரியவரும் வயது முதிர்ந்த அன்னா என்னும் இறைவாக்கினரும் இருந்தனர். இந்த இருவரையும யூத சமய மரபின் உருவகங்களாக நாம் காணலாம். கடவுளின் வாக்குறுதி ஒருநாள் நிறைவேறும் என்றும் இயேசு மெசியா மக்களிடையே வருவார் என்றும அவருடைய வருகைக்காகக் காத்திருந்த [illegible]டதும் அவரே மெசியா என்பதை அறிந்து கொள்கிறார்கள்.

சிமியோன் குழந்தையைக் கையில ஏந்துகிறார். கடவுளைப் போற்றி தம் குரலை எழுப்பி, இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும் என அறிக்கையிடுகிறார்.


இயேசுவின் பிரசன்னம் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாயிருக்கும் என்றால அது முற்றிலும் உண்மை. எங்கெங்கு இயேசு இருக்கிறாரோ, அங்கெல்லாம் எழுச்சியும் வீழ்ச்சியும் கட்டாயம் இருக்கும். சிமியோன் இறைவாக்கினர் சொன்னது முற்றிலும் உண்மை. மண்ணகத்தின் அரசர்கள், ஆட்சிகள் ஆட்டம் கண்டன. வீழ்ந்தன.

யூதமும் அதன் சட்டமும் வீழ்ச்சி கண்டது. கிறிஸ்தவமும் அதன் ஆவியின் செயறபாடுகளும் எழுச்சிபெற்றன. அநீதி, ஆணவம் அதிகார வர்க்கம், ஆளும வர்க்கம் வீழ்ச்சியடைந்தது. நீதியின்படி வாழ்வோர், தாழ்ச்சியுடையோர், நலிந்தோர் எழுச்சி பெற்றனர். பாவிகள், பெண்கள், ஒதுக்கப்பட்டோர் தலை நிமிர்ந்து வாழத்தொடங்கினர்.

இன்றும் இயேசுவும் அவரது திருச்சபையும் அவரைப் பின்தொடரும் கிறிஸ்தவனும் இவ்வாறே பலருடைய எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமாக இருக்கிறார்கள். இருக்க வேண்டும். இத்தகைய நிலைப்பாடும் செயற்பாடும் கொணடால் மட்டுமே சமத்துவ சகோதரத்துவ சமுதாயத்தை உருவாக்க முடியும். இந்த சமுதாயத்தை உருவாகக வேண்டும் என்ற இலட்சியம் முளையிலேயே இயேசுவில் இருந்ததை சிமியோன உணர்ந்து முன்னுரைக்கிறார்.

புதிய சமுதாயம் உருவாக்க எழுச்சி தேவை. வீழ்ச்சியைத் தவிர்க்க முடியாது. இவை நடைபெறும்போது பாராட்டுவோம்; ஒத்துழைப்பு கொடுப்போம்.

இயேசுவின் வருகை சிமியோம், அன்னாவின் வாழ்விலும் நிறைவு கொண்டு வந்தது. கடவுளின் வருகையை எதிர்பார்த்துக்காத்திருப்போர் ஒருநாளும் ஏமாற்றமடையார் என்பதை இங்கே நாம் காண்கிறோம். நம வாழ்வில் கடவுள் புகுந்திட நாம் திறந்த உள்ளம் கொண்ட வரகளாக இருக்க வேணடும். இருளை அகற்றும் ஒளி யாக வருகின்ற இயேசு நம் இதயத்தை யும்



வாழ்வையும் ஒளிர்விப்பார் என நாம் உறுதியாக நம்ப வேண் டும்.

அப்போது நம் வாழ்வில் நிலவுகின்ற இருள் மறைந்து விடும். நாமும் இயேசுவின் ஒளியால் நிரப்பபபடுவோம். நம் குறுகிய பார்வை விரிவு பெறும். கடவுளின பார்வை நமதாக மாறும். அனைத்துமே ஒரு புதிய ஒளியில் தோன்றும்போது நமது பழைய கண்ணோட்டங்களும் மதப்பீடுகளும் மறைந்து போய் புதியதொரு நிலைக்கு நாம் ஏறிச் செல்ல முடியும்.

நாமும் உண்மையான உலகினின் ஒளியான இயேசுவின் வழியே அவரோடு பயணித்து உலகிற்கு அணையாத ஒளியாக மாறுகிறோம். எம் வாழ்வு ஒளியாக திகழவேண்டும் என்பதையே ஆண்டவர் விரும்புகிறார். ஆகவே எம்மை தூய்மையாக்கி இறைவனுக்கு எம்மையே காணிக்கையாக்குவோம் நாம் ஆலயத்திற்குச் செல்வது எம்மை தூய்மைப்படுத்துவதற்கே. நாம் தூய்மையடையாமல் காணிக்கை செலுத்துவதோ அல்லது இறைவனுக்கு எம்மை காணிக்கையாக்குவதோ ஏற்றதல்ல.

இறைவனின் தூய்மை எம்மில் மிளிர வேண்டும். அப்போதுதான் நாம ஒளியின் மக்களாக வாழ முடியும என்பதை உணர்வோம். ஒளிபடைத்த கண்களோடு நாம் கடவுளின் திருவுளத்தைக கண்டு, அதை நம் வாழ்வில் செயற்படுத்த முன்வருவோம். அப்போது கிறிஸ்துவின் ஒளி எங்கும் பரவும். அனைவரும் கடவுளின் வெளிப்பாட்டினை தம் உள்ளத்திலும் இல்லத்திலும் சமூக வாழ்விலும் அனுபவித்து வாழ்வர்.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறிபோனது நம்பர் 1

# நாம வீக்குத்தான் ஆனா இப்படி ஆயிற்றே!

எப்படியிருந்தம் ⇨



"நம்ம பவுலிங் வீக் தான் என்ன செய்யிறது எண்டு தான் தெரியலகொஞ்சமாவது மூளையை உபயோகித்து பந்துவீச வேண்டும்."

இது இந்தியாவுக்கு உலககோப்பையை கைப்பற்றிக் கொடுத்த இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி கூறியது.

நியூசிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி ஒரு நாள் தொடரில் 4:0 என்ற கணக்கில் படு மோசமாக படுதோல்வியடைந்துள்ளது.

உலக சர்வதேச ஒருநாள் தரவரிசையில் முதல் இடத்தில் இருந்த இந்திய அணி சர்வதேச தரவரிசையில் 7 ஆம் இடத்தில் உள்ள நியூசிலாந்து அணியிடம் நியூசிலாந்து மண்ணில் மண் கௌவியது. கௌரவமான ஆறுதலுக்கு கூட ஒரு போட்டியிலும் வெற்றி பெறவில்லை.

சமீபத்தில் தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்திய அணி டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடரிலும் தென்னாபிரிக்காவிடம் வாங்கிக் கட்டி திரும்பியது.

இந் நிலையில் இந்திய ரசிகர்களின் பலத்த எதிர்பார்ப்பு மத்தியில் நியூசிலாந்து தொடர் அமைந்திருந்தது. ஆனால் இந்தியாவோ சொதப்பல் ஆட்டத்தினை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது.

இந்திய அணியின் இவ் ஆட்டம் இந்திய ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு இந்திய அணியின் முன்னணி வீரர்கள் மற்றும் கிரிக்கெட் வல்லுநர்களின் பெரும் விமர்சனத்தையும் பெற்றுள்ளது.

இது குறித்து முன்னாள் இந்திய அணியின் கப்டனும் தொலைக் காட்சி வர்ணனையாளருமான சுனில் கவாஸ்கர் கருத்து தெரிவித்ததாவது,

இந்திய அணியின் மிகப்பெரிய பிரச்சினை பந்துவீச்சுத்தான் தொடர்ந்து கவலை அளிக்கும் வகையில் இருக்கிறது. அவர்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்றே தெரியவில்லை.

அவர்கள் ஏதாவது வழிமுறைகளை பின்பற்றுகிறார்களா? இல்லையா? என்பது தெரியவில்லை. அவர்கள் செய்த தவறுகளை மீண்டும் மீண்டும் செய்கிறார்கள்.

தவறுகளில் இருந்து விரைந்து அவர்கள் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். பந்துவீச்சாளர்கள் பாடம் கற்றுக் கொள்ளாவிட்டால் அடுத்த ஆண்டு அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் நடைபெறும் உலக கோப்பையை தக்கவைத்துக்கொள்வது மிகவும் கடினம்.

இந்திய அணியில் செய்யப்பட்ட மாற்றம் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இவ்வாறு கவாஸ்கர் கூறியுள்ளார்.

மற்றொரு முன்னாள் கப்டன் அசாருதீன் கூறும்போது, நமது தொடக்கம்தான் மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது இதை சரி செய்யாவிட்டால் உலககோப்பை போட்டியில் பாதகமாக அமையும் என விமர்சித்துள்ளார்.

இந்திய அணி சொந்த மண்ணில் சோபித்தாலும் அந்நிய மண்ணில் இவ்வாறாக சோபிப்பதில்லை.

2011 ஆம் ஆண்டு உலக கோப்பைக்கு பின்னர் இங்கிலாந்து, வெஸ்ட் இன்டீஸ், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை சொந்த மண்ணில் கைப்பற்றியது. ஆனால் அந்நிய மண்ணில் பங்கேற்ற இரு நாடுகளுக்கு இடையிலான தொடரில் இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து அணிகளிடம் தோற்றது.

ஆக அந்நிய மண்ணில் இந்தியாவால் எடுபட முடியவில்லை.

அடுத்த ஆண்டு அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகள் இணைந்து நடத்தும் உலககோப்பை போட்டியில் இந்தியாவின் நிலை என்ன? என்பதே இப்போது கேள்வியாகவுள்ளது.

தரவரிசையில் மிகவும் பின்தங்கியுள்ள நியூசிலாந்துக்கு எதிராகவே இவ்வாறு மோசமாக விளையாடினால் உலகின் முன்னணி அணிகளை எப்படி எதிர்கொள்வார்கள் என்றே தெரியவில்லை.

சர்வதேச தரவரிசையில் முதல் இடத்தில் இருந்த இந்திய அணி நியூசிலாந்து தொடரை தோற்றபின் தரவரிசையில் முதல் இடத்தை இழந்தது. இந் நிலையில் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இந்தியாவின் ஆட்டம் என்னவாக இருக்கும் என்று பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

**க.மதீசன்**



## இன்றைய போட்டிகள்

கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

இன்று காலை 7 மணி முதல் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

8 மணி முதல் பெண்களுக்கான எல்லேப் போட்டிகள் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

எனவே பதிவு பெற்ற இளைஞர் கழக அணிகள் குறித்த நேரத்தில் வருகை தந்து போட்டிகளில் பங்குபற்றுமாறு கரவெட்டி பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் மனோராஜ் கேட்டுள்ளார். (க-23)

xxxxx

அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் மின்னொளியிலான தாச்சிப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

24 அணிகள் பங்குகொள்ளும் இச் சுற்றுப் போட்டிகள் அளவெட்டி கிழக்கு கும்பலை பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி இடம்பெறுகின்றன.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் தாவடி காளியம்பாள் அணியும் உடுவில் உதயசூரியன் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தாவடி காளியம்பாள் அணி 12:1 பழங்கள் அடிப்படையில் வென்றது.

இன்று இடம்பெறவுள்ள போட்டியில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணியை எதிர்த்து மயிலிட்டி பாரதி அணி மோதவுள்ளது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## தலைவர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட போட்டி



வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் பெற்ற காற்பந்து அணிகளுக்கிடையிலான போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் வெற்றிக்கிண்ணத்திற்காகவே இப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

வலிகாமம் லீக்கில் பதிவு பெற்று அங்கத்துவமுடைய கழகங்கள் இப் போட்டிகளில் பங்கு கொள்ளவுள்ளன.

போட்டிகள் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இன்று ஆரம்பமாகும் போட்டிகளின் முதலாவது போட்டியில் இளவாலை ஹென்றீஸ் விளையாட்டுக்கழக அணியும் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.

2ஆவது போட்டியில் அராலி திருமகள் அணியும் அராலி வானவில் அணியும் மோதவுள்ளன.

மிக நீண்ட காலத்திற்குப் பின்னர் கடந்த 2013ஆம் ஆண்டு அமைக்கபட்ட வலிகாமம் லீக் இச் சுற்றுப்போட்டியை ஏற்பாடு செய்து நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண தெரிவுப் போட்டி ஸ்கொட்லாந்து அணி சம்பியன்

நியூசிலாந்தில் நடைபெற்று வந்த உலகக்கிண்ண தெரிவு காண் போட்டிகளின் இறுதிப் போட்டியில், ஐக்கிய அரபு இராச்சிய அணியை வெற்றி கொண்டு ஸ்கொட்லாந்து அணி சம்பியன் ஆகியுள்ளது.

நேற்று நியூசிலாந்து லிங்கோன் மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் முதலில் துடுப்பாடிய ஸ்கொட்லாந்து அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 285 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் அணித் தலைவர் பிரஷ்டன் மொமேசன் 139 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். ரிச்சி பெரிங்டன் 63 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். இவர்கள் இருவரும் இணைந்து 138 ஓட்டங்களை ஐந்தாவது விக்கெட் இணைப்பாட்டமாக பெற்றுக் கொண்டனர். இவர்களது துடுப்பாட்டமே இந்த போட்டியில் ஸ்கொட்லாந்து அணி வெற்றி பெற முக்கியமான காரணமாக அமைந்தது. பந்து வீச்சில் ஐக்கிய அரபு




இராச்சிய அணி சார்பாக மஞ்சுல கமகே 3 விக்கெட்களைப் பெற்றுக் கொண்டார். இவர் இலங்கை அளுத்கம பிரதேசத்தை சேர்ந்தவரும் இலங்கை சிங்ஹ கிரிக்கெட் கழகத்திற்கு விளையாடியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பதிலுக்கு துடுப்பாடிய ஐக்கிய அரபு இராச்சிய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஸ்வப்னில் பட்டில் ஆட்டமிழக்காமல் 99 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். அஜ்மட் அலி, குராம் கான் ஆகியோர் தலா 34 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் ஸ்கொட்லாந்து அணி சார்பாக ஜன் வோர்ட்லவ், ரொப் ரெய்லர், ஷபியான் ஷெரிப் ஆகியோர் தலா 3 விக்கெட்களைப் பெற்றுக் கொண்டனர். போட்டியின் நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் ஸ்கொட்லாந்து அணித் தலைவர் பிரஷ்டன் மொமேசன் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த இரண்டு அணிகளும் 2015ஆம் ஆண்டு உலகக்கிண்ண போட்டித்தொடரில் பங்கு பற்ற தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது (க)

# கால்பந்தாட்ட போட்டி

கிளிநொச்சி உருத்திபுரம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 20 வயதுப்பிரிவு பாடசாலை கால்பந்தாட்ட அணிகளுக் கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று உருத்திரபுரம் வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமானது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 17 பாடசாலை அணிகள் பங்குபற்றவுள்ள இச்சுற்றுப் போட்டியின் போட்டிகள் அனைத்தும் விலகல் முறையில் நடைபெற்று இறுதிப் போட்டி 3-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டி நிகழ்வுகளில் பிரதம அதிதியாக வடமாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார்.

உருத்திரபுரம் பழைய மாணவர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியானது இவ்வருடம் முதன்முறையாக நடத்தப்படவுள்ளதுடன் தொடர்ந்தும் வருடா வருடம் நடத்தப்படும் எனப் பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவித்தனர். (கு-23)

## ஆணொருவரின்...

கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சடலத்துடன் மோட்டார் சைக்கிலும் அநாதரவாக கிடந்துள்ளது.

சப்பாத்து அணிந்திருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட இனங்காணப்படாத சடலத்தின் வயது சுமார் 40 மதிக்கத்தக்கதாகும்.

தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த கிளிநொச்சி பொலிஸார் மற்றும் திடீர் மரண விசாரணை அதிகாரி என்போர் சடலத்தை மீட்டு கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.


குறித்த சடலம் தொடர்பான விபரங்கள் தெரிந்தவர்களை உடனடியாக கிளிநொச்சி பொலிஸ் அல்லது வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-9-254)

## தமிழ் பொலிஸ்...

கத்தரது சடலம் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் பிரேதப் பரிசோதனைக்காக நேற்று மாலை 4.55 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டது.

பிரேதப்பரிசோதனையின்பின்னர் 6.40 மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-6-11)

## தெல்லிப்பளையில்...



பெரிய தம்பிரான் ஆலயத்தில் கொண்டு சென்று விடப்பட்டுள்ளது.

வீட்டில் வெள்ளை நாகபாம்பு ஒன்று படமெடுத்தபடி நின்றதை அவதானித்த உரிமையாளர் அயலவர்கள் உதவியுடன் பாம்பினைப் பிடித்து ஏழாலை பெரியதம்பிரான் ஆலயத்தில் கொண்டு சென்று விட்டார்.

இந்த வெள்ளை நாகபாம்பினைப் பார்ப்பதற்காக அப்பகுதியினைச் சேர்ந்த பெருளமவான மக்கள் அவ்விடத்தில் திரண்டிருந்தனர் (செ-11)

# இங்கிலாந்தை வீழ்த்தி ஆஸி வெற்றி

அவுஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபது-20 சர்வதேசப் போட்டித் தொடரின் இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ளது.




மெல்பேர்ன் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது.

வேகமான ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்ட போதிலும், இங்கிலாந்து அணி தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்து




தடுமாறியிருந்தது. இறுதி நேரத்தில் ஓட்டங்கள் பெறப்பட்ட போதிலும், சிறந்த ஓட்டங்களைப் பெற அவ்வணி தடுமாறியது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜொஸ் பட்லர் 27 பந்துகளில் 22 ஓட்டங்களையும், மைக்கல் லம்ப், ஜோ றூட், ரிம் பிரெஸ்னன், ஸ்ருவேர்ட் பிரோட் (ஆட்டமிழக்காமல்) ஆகியோர் தலா 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஜொஸ் ஹேஷல்வூட் 4 விக்கெட்டுக்களையும், நேதன் கோர்ட்டர் நைல், ஜேம்ஸ் முவ்றிஹெட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

131 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 14.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது விக்கெட்டுக்காக 48 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி சார்பாக, 3வது விக்கெட்டுக்காக பிரிக்கப்படாத 78 ஓட்டங்கள் குவிக்கப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஜோர்ஜ் பெய்லி 28 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களையும், கமரன் வைட் 45 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ரிம் பிரெஸ்னன், ஜேம்ஸ் ட்ரெட்வெல் இருவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அவுஸ்ரேலியாவின் ஜோஷ் ஹேஷல்வூட் தெரிவானார்.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் 2 போட்டிகளின் நிறைவில் அவுஸ்திரேலிய அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளக விசாரணை...

நாயகம் ஆண்டகை, தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்திய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வாலுடனான சந்திப்பில் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்.ஆயர் இல்லத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச்சந்திப்பு தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த ஆயர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதன் முக்கிய நோக்கம் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் பங்கு கொள்ளும்போது என்னென்ன பிரச்சினைகள் தொடர்பாக கதைக்க வேண்டும்? என்ன விடயங்களைச் சொல்ல வேண்டும்? என்பதுபற்றி அறிந்து செல்லவே வருகைதந்திருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின் போது நடைபெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் காணாமற்போனோர் தொடர்பிலான விசாரணைகள் உள்நாட்டில் இல்லாமல் வெளிநாட்டில் நடத்தப்படுவதையே தமிழ்மக்கள் நம்புவார்கள்.

இறுதிப்போர் பற்றிய நம்பகத்தகுந்த விசாரணை வெளிநாடுகளின் மத்தியில் நடத்தப்பட வேண்டும். அப்போதே எவ்வளவு பேர் காணாமற் போனார்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது? என்பது பற்றிய விபரங்கள் வெளிவரும். இதன் மூலமே பாதிக்கப்பட்டவர்களுக்கு சரியான இழப்பீடுகள் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதன் மூலமே பிரச்சினைகளை தீர்க்க முடியும், நீங்கள் அவ்வாறான முயற்சிகள் எடுக்கவில்லையா என நிஷா பிஸ்வால் தன்னிடம் கேள்வி எழுப்பியதாகவும் அதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டதாகவும் ஆனால் அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் அது தடைப்பட்டுள்ளதாக தான் பதிலளித்ததாக ஆயர் கூறினார்.

மேலும் தமிழீழ விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து விட்டோம், இங்கிருக்கும் பிரச்சினைகளை முடித்துவிட்டோம் என அரசாங்கம் வெற்றிப் பெருமிதத்துடன் இருக்கின்றதே தவிர இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கோ அல்லது நிரந்தர சமாதானத்தினை இலங்கையில் கொண்டு வருவதற்கோ அரசாங்கம் எதனையும் செய்யவில்லை.

காணாமற்போனோர் தொடர்பாக அவர்களின் உறவினர்கள் மன அழுத்தத்தில் இருக்கின்றனர். அதற்கு உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட வேண்டும். அது நிச்சயமாக உள்நாட்டில் இல்லாமல் வெளிநாட்டில் நடத்தப்படவேண்டும்.

இங்கு விசாரணைகள் நடத்தப்பட்டால் அது இராணுவத்தினரால் நடத்தப்பட்ட விசாரணையாகவே அமையும். அல்லது இராணுவத்துடன் தொடர்புடையவர்களினால் நடத்தப்பட்டதாக இருக்கும். எனவே தான் போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள இராணுவத்தினர் தாம் இழைத்த குற்றங்களை தாமே விசாரணை செய்வதை ஏற்றுக் கொள்ளமுடியாது என தமிழ்தரப்பால் கூறப்பட்டுவருகிறது. இதனைவிட சமாதானம் மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு இராணுவம் தடையாகவுள்ளது.

இனங்களுக்கிடையில் பிளவு ஏற்படவும் பிரச்சினைகள் உருவாகவும் அரசியல் பிரச்சினையே காரணம். அரசியலில் மாற்றம் ஏற்பட்டால்தான் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். நல்லிணக்கத்திற்கு பல தடைகள் தற்பொழுதும் ஏற்படுத்தப்படுகின்றது. என தான் தெரிவித்ததாக யாழ்.ஆயர் கூறினார்.

இதேவேளை யாழ். ஆயருடனான சந்திப்பில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் தெரிவிக்கையில்,

காணாமல் போனவர்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் பேசவுள்ளதாகவும் ஜெனிவா அமர்விலும் இலங்கை அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பவுள்ளதாகவும் தெரிவித்தார். இனங்களுக்கிடையில் ஒருமைப்பாட்டையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த பாடுபடவேண்டும் என்றும் நிஷா பிஸ்வால் கூறியதாக யாழ். ஆயர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## வடமாகாண சபையை...

சபைத் தேர்தலை நடத்தியதன் விளைவுகளை அரசாங்கம் சந்தித்து வருவதாக சிலர் நினைக்கின்றனர்.

ஆனால் வடக்கு மக்களின் உரிமைகளை அரசாங்கம் பறிக்க விரும்பவில்லை. தெற்கில் மக்களுக்கு இருக்கும் அதே உரிமைகள் வடக்கு மக்களுக்கு வழங்கப்படும் எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபையை அரசாங்கம் கலைக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்திருந்தது.

போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் வேண்டும் மற்றும் மன்னார் மனித புதைகுழிகள் தொடர்பாக ஐ.நா மேற்பார்வையில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் உட்பட சில பிரேரணைகள் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப் பட்டன.

இதனைக் காரணம் காட்டியே மாகாண சபையைக் கலைக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய அரசிடம் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஜே.வி.பிக்கு...

தர் ஒருவர் குறிப்பிட்டார்.

ரில்வின் சில்வா, அனுரகுமார திஸாநாயக்க, லால்காந்த, பிமல் ரத்நாயக்க ஆகியோரின் பெயர்கள் தலைவர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் மாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானத்திற்கு அமையவே கட்சியின் தலைவர் நியமிக்கப்படுவார்.

எவ்வாறாயினும் அனுரகுமார திஸாநாயக்கவிற்கு தலைவராகும் வாய்ப்பு அதிகம் இருப்பதாக ஜே.வி.பியின் உட்தரப்புத் தகவல்கள் தெரிக்கின்றன. (செ-11)

## மனித உரிமை பேரவை...

உறுப்பினர்களை வைத்து இந்த வீடியோ தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து இந்த வீடியோவில் வெளிக்காட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் கொண்டு வரும் நோக்கில் இந்த வீடியோ காட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன. (செ-11)

## ஐ.நா அமர்வில்...

போனவர்களின் உறவினர்களுடன் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரும் காணாமற்போனவர்களின் உறவினர்களில் ஒருவருமான திருமதி அனந்தி சசிதரனும் பங்கு கொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்பினையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அனந்தி சசிதரன் மேலும் தெரிவிக்கையில்,

யுத்த காலத்தில் சரணடைந்து காணாமல் போனவர்களின் விடுதலை சம்பந்தமாகவும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை சம்பந்தமாகவும் பேசினோம். அண்மைக் காலமாக குறிப்பாக போருக்குப் பின்னர் பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் பற்றியும் பேசியிருக்கிறோம்.

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களிடம் நல்லிணக்கத்தை, நல்லெண்ணத்தை காட்டுவதாக இருந்தால் விடுதலை செய்ய வேண்டும்.

போர் முடிவுற்றது என்று சர்வதேசத்திற் சொல்லிக்கொண்டிருக்கின்றபோது இந்த சரணடைந்த காணாமற் போனவர்களை ஏன் வைத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

அவர்களை விடுவிப்பதன் ஊடாக நல்லெண்ணத்தை காட்ட முடியுமே என்று எடுத்துக் கூறினோம்.

இதனைவிட எங்களுடைய மனித உரிமை தொடர்பான நிலைப்பாட்டைத் தெரியப்படுத்தினோம். இதேவேளை எமது கருத்துக்களுக்கு பதிலளிக்கும் முகமாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர் கூறுகையில்,

காணாமற்போனவர்கள் தொடர்பான அழுத்தங்களை இலங்கை அரசாங்கத்திற்கு கொடுக்கவுள்ளதாகவும் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஜெனிவா அமர்வில் கேள்வி எழுப்பப்படும் எனவும் பதிலளித்ததாக அனந்தி சசிதரன் மேலும் தெரிவித்தார். (செ-6)

## நிஷா தேசாயின்...

விசேட வழிபாட்டில் ஈடுபட்டார். இதனையடுத்து யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினையும் அவரது இல்லத்திற்கு சென்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதனையடுத்து யாழ். ஆரியகுளம் பகுதியிலுள்ள நாக விகாரைக்கும் சென்ற அவர் உள்ளிட்ட குழுவினர் வழிபாட்டில் ஈடுபட்டதோடு யாழ். கிறீன் கிராஸ் ஹோட்டலில் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும், யுத்த காலத்தில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் சிலரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பினையடுத்து யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்குச் சென்று ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் பின்பு விசேட விமானத்தில் பலாலி விமான நிலையத்திலிருந்து கொழும்பினைச் சென்றடைந்தார். (செ-6)

**நிரந்தர தொழில்**

கொழும்பு துறைமுகம், விமான நிலையம் (துனியார்) வேலைவாய்ப்புகள். கப்பல் புனர் நிர்மாணத்துறையில் சாதாரண ஊழியர்/வெல்டர்/தச்சு மற்றும் விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர்/ காகோ/ கிளினிஸ் போன்ற பிரிவுக்கு 18-45 ஆண்-பெண் தேவை. சம்பளம் 17000/=, 25000/=, 38000/= உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும். குறைந்த விலைகளில்.

தொடர்புக்கு முந்துங்கள்:-0775561883

2 மணித்தியாலத்தில்
**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள். 077 908 6737
GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna.
இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service
2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Computer Repair Laptop and motherboard Repair

சேவை முகவர்
**காணிகள், வீடுகள் விற்பனைக்கு**
யாழ் A-9 -5 பரப்பு, மணல்தறை லேன், பலாலி வீதி, உரும்பிராய், கோண்டாவில், A-9 நுணாவில் 12,21 பரப்பு, பிறவுண் வீதி, கடைசுவாமி வீதி ஆகியன யாழ், நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். பழைய ஓடு விற்பனைக்கு உண்டு. சுந்தரம்:-0774819801
(5494)

SPEED LANKA EXPRESS Courier
**வெளிநாடுகளுக்கான**
தபால் பொதிகள் சேவை
- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்
(C-6391)
ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926 www.speedlanka.net



**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்.

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months
- எமது கற்றை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
- Excellent Teacher's Panel & Individual Attention.
(C-6392)

Jaffna Branch : NO. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel : 021 222 4550
Vavuniya Branch : NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel : 024 324 5287
Hotlines : 0777585913, 0777222422, 0714299935, 0777730074
Batch 1 : 03.02.2014
Batch 2 : 08.02.2014
Batch 3 : 10.02.2014
Batch 4 : 15.02.2014
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

உடனடியான வேலைவாய்ப்பு
நீங்கள் 18-50 வயதுடையவரா? (ஆண்-பெண்) சம்பளம் 18000/=/, 25000/=, 32000/= உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளுடன் உடனடியான வேலைவாய்ப்புகள். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/கோடியல்/ நூடில்ஸ்/ தண்ணீர் போத்தல் / PVC/ கோழி இறைச்சி/தேயிலை/ காமென்ட்/ பெயின்ட் மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி /லேபல்/தரம்பிரித்தல்/களஞ்சிய பிரிவுக்கும் ஆட்கள் தேவை. (நண்பர்கள், குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள். உடன் தொடர்பு (விசேடம் வடக்கு/ கிழக்கு தமிழ்/முஸ்லிம் மக்களுக்கு) தொடர்பு:-0775561883

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.